ஹிந்துமதசம்பந்தமான இனாங்களைக் குறித்த ஆக்ட்

(*Hindu Religious Endowments Act.*)

ஆர். நடேசன், பி. ஏ., பி. எல்.,

அட்வொகேட், மதராஸ் ஹைகோர்டு, ஆசிரியர் "புதிய ஹிந்து லா."

OFFICE OF THE REGISTRAR OF B.
15 SEP 1934
MADRAS

சென்னை:

வி. ராமசுவாமி சாஸ்துருலு அண்ட் ஸன்ஸ்

292, எஸ்பிளனேட்.

1934

487
294·5

PRINTED BY
V. VENKATESWARA SASTRULU
of V. RAMASWAMY SASTRULU & SONS,
AT THE 'VAVILLA' PRESS,
Madras.—1934.

78549
Z21 (Q2)
N34

முகவுரை

ஹிந்து மதசம்பந்தமான ஸ்தாபனங்கள் அதாவது மடங்கள், கோவில்கள் முதலானவைகள் சரியாய்ப் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருவதில்லையென்பது யாவரும் அறிந்தவிஷயமே. அதைச்சீர்ப்படுத்தவே இச்சட்டம் ஏற்பட்டது.

இச்சட்டத்தினல் முக்கியமாய் பாதிக்கப்படுகிறவர்கள் தமிழர்களும் ஆந்திரர்களுமேயாவர்கள். ஆந்திரபாஷையில் இச்சட்டம் வெளிவந்து வெகுநாளாகிறது. தமிழில் இல்லாத குறையை நீக்கவேண்டி சென்னையில் பழைய பிரபலபுஸ்தக வியாபாரிகளான ஸ்ரீமான் வாவிள்ள ராமஸ்வாமிசாஸ்துருலு அண்ட் ஸன்ஸ் சொந்தக்காரர் ஸ்ரீமான் வெங்கடேச்வர சாஸ்துருலு முன்வந்தது மிகவும்பெரிது.

நான் கவர்ன்மெண்டாருடைய மொழிபெயர்ப்பையே உபயோகப் படுத்தியிருக்கிறேன். காரணம், சட்டமானபடியினல் வாசகம்மாறக்கூடாது என்பதேயாம். வேண்டியவிடங்களில் புதுப்பிரிவுடன் பழையபிரிவையும் கூறியுள்ளேன். புதுப்பிரிவு உண்டாதற்கான காரணங்களையும்கூறியு ள்ளேன். அங்கங்கே கேஸ் விவரங்களையும் கூறியுள்ளேன்.

இந்த ஆக்டினுடைய சாராம்சத்தைக் கூடியவரையில் பேசும்நடையில் கீழேகூறுகிறேன். அதைப்படித்தால் ஆக்டை அப்புறம் நன்ருய்ப்படித்து அறியலாம்.

மதராஸ்.
7-5-34. ஆர். நடேசன்.

ஆக்டின் அமைப்பு

இதில் உள்ளமொத்தம் பிரிவுகள் 85. அதில் சுமார் 10 அல்லது 14 பிரிவுகள் போர்டாருடைய அமைப்பு, வேலை முதலியவைப்பற்றி கூறுகின்றன. சுமார் 17 அல்லது 20 பிரிவுகள் கமிட்டியாருடைய அமைப்பு வேலைதிட்டம் முதலியவைகளைப்பற்றியும், 20 அல்லது 22 பிரிவுகள் கோவில்களைப்பற்றியும் கூறுகின்றது.

போர்டு, கமிட்டி இவைகளைப் பற்றினது

அதற்குண்டான எல்லைக்குள்ளிருக்கும் எல்லாகோவில்களின்மீது கமிட்டிக்கு அதிகாரமுண்டு. மடங்களின்மீதும் விலக்கப்பட்ட கோயில்களின்மீதும் அவைகளுடைய டிரஸ்டிகளின்மீதும் கமிட்டியாருக்கு அதிகாரம்கிடையாது. போர்டாருடைய அதிகாரம் ஹிந்துமதசம்பந்தமான சகல இனங்கள்மேல் செல்லும். இவை இரண்டிற்கு மேலதிகாரம் சிற்சில விஷயங்களில் கவர்ன்மெண்டாருக்களிக்கப்பட்டிருக்கிறது. விவரமாய் விளக்கவேண்டி, கவர்ன்மெண்டு, போர்டு, கமிட்டி, டிரஸ்டிஆகிய இவர்களுடைய அதிகாரங்களை முறையே கீழே சுருக்கமாய் கூறுவோம்.

கவர்ன்மெண்டாரின் அதிகாரம்

சாதாரணமாகக் கோயில்கள், வேலைக்காரர்களின் மேல் உள்ள சர்வாதிகாரமும் அந்தந்த கோயிலின் டிரஸ்டியைச் சேர்ந்ததே-ஆனால் பரம்பரையாய்வரும் உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரர் விஷயத்தில் இந்த சர்வாதிகாரம் செல்லாது. கவர்ன்மெண்டார் அவர்களுடைய விஷயத்தில் ஏற்படுத்தும் நிர்ப்பந்தனைக் குட்படுத்தியே அதைசெலுத்தவேண்டும்.

(பிரிவு 43—பக்கம் 44.)

கோயிலுக்குத் தேவதாசிகள் செய்யும் ஊழியத்திற்காக நிலங்கள் விட்டுவைக்கப்பட்டிருந்தால் அந் நிலத்தை ஊழிய நிபந்தனையினின்றும் விடுவித்து நிவர்த்திக்கவேண்டும்.

(பிரிவு 44 (A) பக்கம் 48.)

எந்தந்த சந்தர்ப்பங்களில் இதை நிவர்த்திசெய்யலாம் என்றறிய ஷ பிரிவின் உட்பிரிவுகளைப் பார்க்கவும்.

போர்டு, கமிட்டியார், டிரஸ்டி ஆகியவர்கள் ஒழுங்காக வரவு செலவு கணக்குவைத்து வரவேண்டும். அதை மாகாண கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் ஆடிட்டர்களைக்கொண்டு பரிசோதிக்க வேண்டும். (பிரிவு 45 (2)—பக்கம்53.)

அப்படி பரிசோதனை செய்த பின் தன்னுடைய ரிபோர்ட்டை, ஆடிட்டர், போர்டாருடைய கணக்காயிருந்தால், கவர்ன்மெண்டாருக்கு அனுப்பவேண்டும்.

(பிரிவு 46—பக்கம்53.)

இந்த ஆக்டில்கண்ட நிபந்தனைகளுக்காகத் தவிர வேறு விதமாக மதசம்பந்தமான இனங்களின் விஷயத்தில் கவர்ன் மெண்டார் தலையிடக்கூடாது.

(பிரிவு 80—பக்கம் 92.)

போர்டார்

போர்டென்பது 10 வது பிரிவின்படி அமைக்கப்பட்ட சபையாம்.

(பிரிவு 9 உட்பிரிவு (1) பக்கம் 7.)

போர்டாரின் தொகை:—ஒரு பிரஸிடெண்டும் இரண்டு பேருக்குக் குறையாமலும் நான்குபெயர்களுக்கு மேற்படாமலும் உள்ள கமிஷனர்கள் அடங்கினதாய் போர்டு இருக்க வேண்டும்.

(பிரிவு 11—பக்கம் 14.)

கவர்ன்மெண்டார் ஒரு பிரசிடெண்டும் நான்கு கமிஷனர்களுமடங்கிய ஒரு சபையை நியமித்து அவர்களுடைய தலைமைஸ்தானத்தை மதராசில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

(பக்கம் 13)

போர்டின் பெயராலேயே வியாஜ்ஜியங்கள் தொடரவும் தொடரப்பெறவும் வேண்டும்.

(பிரிவு 11 (2)—பக்கம் 14)

கமிஷனர்கள்:—ஹிந்துவா யிருக்கவெண்டும்.

(பிரிவு 12 (1)—பக்கம் 14.)

ஐந்துவருஷம் அவர்களுடைய உத்தியோக காலஅளவாம்.

(13 (1)—பக்கம் 15.)

கமிஷனர்களுடைய யோக்யதையைபற்றி 15 வது பிரிவு கூறுகிறது.

(பக்கம் 17.)

அதிகாரங்கள்:—உத்தியோகஸ்தர்களையும் வேலைக்காரர்களையும் நியமிக்கவோ நீக்கவோ அதிகாரமுண்டு.

(பக்கம் 18.)

தங்களுடைய நடவடிக்கை முதலியவைகளை நடத்த வேண்டி சகாயசட்டங்களை இயற்றிக்கொள்ளலாம்.

(பிரிவு 19—பக்கம் 20.)

பொதுவாக மேல்விசாரணை செய்யும் அதிகாரமுண்டு அதாவது மடங்களும் கோயில்களும் சரியாய் பராமரிக்கப் பட்டுவருகிறதா? பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகிறதா? ஏற்பட்ட உத்தேசத்தை சரிவரநடத்தி வருகிறதா.

(பிரிவு 18—பக்கம் 19.)

ஒவ்வொரு மடத்திற்காகவும் கோயிலுக்காகவும் ரிஜிஸ்டர் ஒன்றுவைத்துவரவேண்டும். அதில் காணவேண்டிய விஷயங்கள் என்ன என்ன என்பது விளங்க 38 பிரிவைக் காணவும்.

(பக்கம் 39.)

பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டிகள் காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்யவும் மைனராயிருந்தால் கார்டியனை நியமிக்கவும் புத்தி சுயாதீனமற்றவரா யிருந்தால் அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும் அதிகாரமுண்டு.

(பிரிவு 42—பக்கம் 43.)

கமிட்டிகளில்லாத அல்லது ஏற்படுத்தபடாத இடங்களுக்குத் தேவையான ஏற்பாட்டைச் செய்யலாம்.

(60-A—பக்கம் 66.)

கோவிலா மடமா என்ற சண்டைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

(பிரிவு 84—பக்கம்95.)

விசாரணை:—இதைவிசாரிக்க எல்லா கமிஷனர்களுமோ அல்லது அந்தந்த கேசிற்கேற்பட்டிருக்கிறவாறு ஒருவரோ அல்லது அதற்கு அதிகமானவரோ மொத்தமாகவோ அல்லது தனியாகவோ உட்கார்ந்து விசாரிக்கலாம். சாட்சிகளை விசாரிக்கவும் அதற்குவேண்டிய சம்மன்களைப் பிறப்பிக்கவும் வாக்குமூலத்தினுடைய சாரத்தை எழுதிக்கொள்ளவும், தேவையானல் பிராமணப்பத்திரங்களைப் பதிவுசெய்து கொள்ளவும், அதன்மேல் குறுக்கு விசாரணைக்கு அதிகாரங்கொடுக்கவும் போர்டாருக்கு உரிமையுண்டு.

(போர்டாரின் சகாயசட்டங்களை, முழுவிவரத்திற்குப் பார்க்கவும். 1926 ஜுலை 20-ந் தேதியிட்ட போர்டு செயிண்ட் ஜார்ஜு கெஜட் பாகம் 1—a பக்கங்கள் 239 லிருந்து 243 வரையில் பார்க்கவும்.)

சிறிதுமட்டில் மதசம்பந்தமாயும் சிறிதுமட்டில் லௌகிக சம்பந்தமாயும் உள்ள இனங்களின் விஷயத்தில் போர்டார் எந்தெந்த சந்தர்ப்பங்களில் தலையிடலாம் என்றறிய.

(77 பிரிவைப் பார்க்கவும். பக்கம் 90.)

மடங்கள் விலக்கப்பட்ட கோயில்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான அசையாப்பொருளைப் பரிவர்த்தனை, அல்லது விற்பனை அல்லது கொதுவை போர்டாருடைய அனுமதியன்னியில் செய்யக்கூடாது.

(பிரிவு 76—பக்கம் 89.)

கோயில் கமிட்டி

ஒவ்வொரு ரெவினியு இன்ஸ்பெக்டர் பிர்கா ஒரு வட்டம் அல்லது ஒரு பகுதியாகும். வட்டமோ பகுதியோ பலசேர்ந்தது ஒருகமிட்டியின் எல்லையாகும். ஆறுபெயர்களுக்குக் குறை யாமலும் பன்னிரண்டுபெயர்களுக்கு மேற்படாமலும் கமிட்டி யிருக்கவேண்டும். இவர்களை அதாவது கமிட்டி அங்கத்தினர் களைத் தேர்ந்தெடுக்கவேண்டிய வாக்காளர்களின் ஜாபிதா வைக் கமிட்டியார் தயாரிக்கவேண்டும்.

வோட்டர்களின் ஜாபிதா:—அந்தந்த வட்டத்தினுடைய தாய்ப்பாஷையில் ஜாபிதா ஏப்ரல் 30-ந் தேதிக்குள் தயாராக வேண்டும். ஒருவருடையபெயர் இரண்டு ஜாபிதாவிலிருக்கக் கூடாது. இந்த நகல் ஜாபிதாவை கமிட்டியாருடைய ஆபிசி லும், கிராமசாவடி, ஆகியவைகளில் தொங்கவிடவேண்டும். ரெவினியு டிவிஷனல் ஆபிசர், தாசில்தார், டெபுடி தாசில் தார் ஆகியவர்களுடைய ஆபிசில் இதை விலைக்கு விற்கவேண் டும். ஏப்ரல் 30 திலிருந்து அதற்கடுத்த மேமாதம் 20 தேதி வரையிலும் ஷை மாதிரி நகல் ஜாபிதாவைப் பிரசுரம் செய்ய வேண்டும். ஜாபிதாவில் தன் பெயர் சேரவில்லையென்றோ, அல்லது சரியாக வில்லையென்றோ, அல்லது ஆகியவைகளைப் போன்ற குற்றங்குறையுள்ளவர்கள் ஜூன் 1 ந் தேதிக்குள் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டும். அதை ரிஜிஸ்டிரேஷன் ஆபிசரும் (இவர் மாகாண அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட வர்) ஜில்லா கலக்டரால் நியமிக்கப்படும் உத்தியோகப்பற்றற்ற இரு கனவான்களும் சேர்ந்த பஞ்சாயத்து கூடி விசாரணை செய்யவேண்டும். அவர்கள்கூறும் தீர்ப்பே முடிவானது.

இவ்விதமாகத் தயார்செய்யப்பட்ட வோட்டர்களின் ஜாபிதாவுடைய அசலானது ரிஜிஸ்டிரேஷன் ஆபிசருடைய விளம்பரப் பலகையிலும் அல்லது கமிட்டியாருடைய விளம் பரப்பலகையிலும் கிராமசாவடியுடைய விளம்பரப்பலகைகளி லும் பிரசுரம் செய்யவேண்டும். அன்றைய தேதியிலிருந்து அது அமுலுக்குவரும்.

(ஜி. ஓ. நெம்பர் 4626 எல் அண்ட் யம் 27 அக்டோபர் 1926 உத்திரவு. 1926 ஞு நவம்பர் 16 ந் தேதி செயின்டு ஜார்ஜ்கோட்டை கெஜட்டு முதல்பாகம் a விதி 1 லிருந்து 8 வரையில்.)

வாக்காளர் களாயிருக்கத் தகுதியுள்ளவர்கள்:—ஆக்டி னுடைய முதல்ஷெட்யூல் முதல்பாகத்தைப் பார்க்கவும். (பக்கம் 98.)

வாக்காளர்களாயிருக்கத் தகுதியற்றவர்கள்:—ஆக்டி னுடைய முதல்ஷெட்யூல் இரண்டாம்பாகத்தைப் பார்க்கவும். (பக்கம் 99.)

ஜாபிதாவுடைய ஆயுள்காலம்:—இந்த ஜாபிதாவை மூன்றுவருஷத்திற் கொருமுறை தயார்செய்து பிரசுரஞ் செய்யவேண்டும்.

இந்த ஜாபிதாவில் கண்டவர்கள் வோட்செய்து அதி லிருந்து அதிகமானவாக்கைப் பெற்றவர்கள்தான் கமிட்டி அங்கத்தினர்களாவார்கள்.

எலக்ஷன் நடத்தும்விதம்:—இதைப்பற்றி தெரியவேண் டியவர்கள் 1928 ஜனவரி 2 ந் தேதியிட்ட எல் அண்ட் யம் ஜி. ஓ. நெ 296 உத்திரவைப் பாக்கவும்.

கமிட்டி அங்கத்தினர்கள்:—ஹிந்துமதத்தைச் சேர்ந்த வர்களும் இன்னும் ஆக்டின் 1 வது ஷெட்யூலைச் சேர்ந்த

1 ம் பாகத்தில் கூறப்பட்டுள்ள யோக்யதாம்சங்களை உடைய வர்கள் எல்லோரும் அங்கத்தினர்க ளாகலாம்.

(25 பிரிவு பக்கம் 26.)

கமிட்டியின் அங்கத்தினராயிருக்க யோக்யதை அற்றவ ருடைய தகுதிகளைக் கண்டறிய 26 பிரிவைக் காணவும்.

(26 பிரிவு பக்கம் 26.)

ஆயுள்காலம்:—கமிட்டியாருடைய ஆயுள்காலம் ஐந்து வருஷமாம்.

(பிரிவு 27 பக்கம் 30.)

உத்தியோகஸ்தர்கள்:—பிரிவுகள் 28, 33, ஆகியவை களைப் பார்க்கவும். (பக்கங்கள் 30, 33.)

அதிகாரம்:—கம்மிட்டியாருக்குப் பொதுவாகக் கோயில் விஷயமாய் மேல்விசாரணை செய்யும் அதிகாரமுண்டு.

(பிரிவு 35 பக்கம் 35.)

சகாயக்கூட்டங்களைக் கமிட்டியார் செய்துகொள்ளலாம்.

(பிரிவு 36 பக்கம் 37.)

மடங்கள் அல்லது விலக்கப்பட்ட கோயில்களின்மேல் கமிட்டியாருக்கு யாதொருவிதமான அதிகாரமும் கிடையாது.

(பிரிவு 37 பக்கம் 38.)

கமிட்டி நிர்வாகம்:—ஒரு பிரசிடெண்டு ஒரு வைஸ்பிரிசி டெண்டு ஆகியவர்களைக் கமிட்டியார் தேர்ந்தெடுக்கவேண்டும்.

(பிரிவு 28 பக்கம் 30.)

இவர்களுடைய ராஜிநாமா, காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்வது, ஆகியவைகளுக்கு 29, 30 ம் பிரிவுகளைக் காணவும்.

கமிட்டியின் உத்தியோகஸ்தர்களையும் வேலைக்காரர்களை யும் அமர்த்தி அவர்களுக்குண்டான சம்பளத்தையும் தீர்மா னித்து கொடுக்கவேண்டும்.

(பிரிவு 33 பக்கம் 33.)

பிரிசிடென்டுடைய உரிமைகளைப்பற்றி 34-வது பிரிவு கூறுகிறது. (பக்கம் 34.)

கமிட்டியின்நிலை:—கமிட்டிபெயராலேயே வியாஜ்ஜியம் தொடரவேண்டும். அந்தப்பெயரின் மேலேயே வியாஜ்ஜியங்கள் தொடரப்பெற வேண்டும்.

(பிரிவு 32 பக்கம் 33.)

கமிட்டியின் அதிகாரம்:—35-வது பிரிவின் பிரகாரம் கோயில்கள் விஷயமாய் கமிட்டியாருக்கு பொதுவான மேல் விசாரணை அதிகாரமுண்டு. 'கோயில்' என்பது (12 ம் பக்கத்தில்) 9 ம் பிரிவு 12-வது உட்பிரிவில் என்னவென்று விளக்கப்பட்டிருக்கிறது.

37-வது பிரிவின் கீழ் கமிட்டியாருக்கு மடங்கள் [1] அல்லது விலக்கப்பட்ட கோயில்களின்மேல் எவ்விதமான விசாரணை அதிகாரமும் செலுத்தமுடியாது.

பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டிகள் வேலையைக்கவனிக்க எந்தெந்த சந்தர்ப்பத்தில் கமிட்டியார் தலையிடலாம் என்று 42-வது பிரிவுகூறுகிறது. அதிலும் மடங்கள் விலக்கப்பட்டகோயில்கள் விஷயத்தில் இவர்கள் தலையிடவேகூடாது.

(பக்கம் 43.)

கமிட்டியார் சரிவர கணக்குவைத்து வருவதுமல்லாமல் ஆடிட்டர்களைக்கொண்டு அதைச்சரிவர பரிசோதனை செய்து வரவும்வேண்டும். ஆடிட்டர்கள் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பட்டவர்களா யிருக்கவேண்டும்.

(பிரிவு 45—பக்கம் 53.)

---

1 மடங்கள் என்பது என்ன வென்பதை 9-ம் பிரிவு (7) உட்பிரிவு விளக்குகிறது. (பக்கம் 10)

விலக்கப்பட்ட கோயில் என்பது என்ன என்பது 9-ம் பிரிவு (5) உட் பிரிவு விளக்குகிறது. (பக்கம் 8)

கமிட்டியார் எந்தெந்த சந்தர்ப்பங்களில் டிரஸ்டிகளை எடுத்துவிடலாம், தள்ளிவிடலாம் அந்த சந்தர்ப்பங்களில் எவ்விதமாய் நடக்கவேண்டும் என்று 53 பிரிவு கூறுகிறது. "டிரஸ்டி" என்னும் பதத்தினுடைய விளக்கம் 9 ம் பிரிவு (13) உட்பிரிவு விளக்குகிறது.

(பக்கங்கள் 56, 12.)

விலக்கப்பட்ட கோயில் தவிர வேறே யாதொரு கோயில் உத்தியோகம் வகிக்கும்நபராவதுவேலைக்காரராவதுஒருடிரஸ்டியால் தண்டிக்கப்பட்டால் அவர் பரம்பரையாய் ஏற்பட்டிராத உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரர் இல்லாமற்போனால் கமிட்டியாருக்கு அப்பீல்செய்யலாம். அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(பிரிவு 43 (2) பக்கம் 45.)

மடம், விலக்கப்பட்டகோயில் இவைகளல்லாத மற்ற கோயில்களின் அசையாப்பொருளைப் பரிவர்த்தனை அல்லது விற்பனை அல்லது கொதுவை இவைகளைக் கமிட்டியாருடைய அநுமதியன்னியில் செய்யக்கூடாது.

(பிரிவு 76—பக்கம் 89.)

டிரஸ்டிகள்

ஹிந்து சமயத்தைச் சேராதவர் டிரஸ்டியாக இருக்க முடியாது.

(பிரிவு 50 பக்கம் 55.)

ஒவ்வொரு மடத்துக்காகவும் போர்டார் ரிஜிஸ்டர்வைத்து வரவேண்டும் என்று கூறினேமல்லவா? அந்த ரிஜிஸ்டரை டிரஸ்டியாவது அல்லது அவருடைய அதிகாரம்பெற்ற ஏஜன் டாவது ரிஜிஸ்டரிலுள்ள பதிவுகளை வருஷாவருஷம் பரிசோதித்துபார்த்துவிட்டு, விட.வேண்டிய அல்லது சேர்க்கவேண்டியதாயிருக்கும் அம்சங்களைக்காட்டும் ஸ்டேட்மெண்ட் ஒன்றில் உறுதிமொழிகூறி அதை போர்டாருடைய அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டும்.

(பிரிவு 39 (1) பக்கம் 41.)

ஷை ஸ்டேட்மெண்டு கிடைத்தபின்னர் விசாரணை செய்து அதன்மேல் பிறக்கும் உத்திரவின் பிரகாரம் செய்யப்பட்ட மாறுதல்களை ரிஜிஸ்டரின் பிரதியில் செய்யவேண்டும் அல்லது விடச்சொன்ன அம்சங்களை விட்டுவிடவேண்டும்.

(பிரிவு 39 (3) பக்கம் 41.)

டிரஸ்டிகள் (1) டிரஸ்டில் கண்டிருக்கும் ஷரத்துக்களின்படியும் (2) பிரஸ்தாப ஸ்தாபனத்தின் மாமூலின்படியும் (3) தகுந்தஅதிகாரிகள் பிறப்பிக்கும் சட்டசம்மதமான சகல சட்டங்களின் படியும் (4) சாதாரணவிவேகமுள்ளமனிதர் இந்த இனமுக்குறிய நிதிகள் அல்லது சொத்துக்கள் தமக்குச் சொந்தமாயிருந்தால் அவைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்

கிரதையாக நடந்துகொள்ளுவாரோ அவ்வளவு ஜாக்கிரதை யாகவும் நடந்துகொள்ளவும் வேண்டும்.

(பிரிவு 40 (1) பக்கம் 42)

தனி கைங்கரியம் அல்லது தருமம் செய்வதற்காக ஏற் பட்டிருக்கிற டிரஸ்டி, எந்தகோவில் அல்லது மடத்தில் அந்த கைங்கரியம் அல்லது தருமம் நடக்கிறதோ, அக்கோவிலு டைய அல்லது மடத்தினுடைய டிரஸ்டியின் பொதுவான மேற்பார்வைக் குட்பட்டு நடக்கவேண்டும். அதாவது கோவில் அல்லது மடத்து டிரஸ்டிக்கு அக்கோவிலில் கைங்கரியம் அல்லது தர்மம்நடத்தும் தனிடிரஸ்டியின்மேல் பொதுவான மேற்பார்வை யுண்டு.

(பிரிவு 41—பக்கம் 42.)

தருமம் அல்லது கைங்கரியத்திற்கு வேண்டிய தொகை யைச் சாதாரணமாக ஒரு அல்லது பல குறிப்பிட்ட சொத்துக் களிலிருந்து வரவேண்டு மென்றிருக்கு மல்லவா. அதுதான் அந்த சொத்தின்மேல் ஏற்பட்டிருக்கும் பொறுப்பாகும். தர்மம் அல்லது கைங்கரியம் செய்யவேண்டுமென்று உத்திரவாயிருக் கும் நபர் அதைச் செய்யத் தவறிவிட்டால், அந்தக்கோவில் அல்லது மடத்து டிரஸ்டியானவர், அத்தருமம் அல்லது உப யத்தைநடத்த என்னசெலவாகுமோ அதைத்தன்னிடம் கொடுக்கும்படி "பொறுப்பு" ஏற்பட்டுள்ள நிலத்தை, தன் சுயாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபரைக் கேட்க லாம், அவர் அதைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டாருடைய உதவியைநாடி அதைப்பெறலாம்.

(பிரிவு 44—பக்கம் 46.)

பிரஸ்தாப ஆக்டின்படி, போர்டார் அல்லது கமிட்டியார் பிறப்பிக்கும் சகல உத்தரவுகளையும் டிரஸ்டி கீழ்படிந்தே தீர வேண்டும்.

(பிரிவு 52—பக்கம் 56.)

எந்தந்த சந்தர்ப்பங்களில் பரம்பரையாயில்லாத டிரஸ்டி தன்னுடைய வேலையை இழக்கவேண்டும் என்று அறிய 54 வது பிரிவைக் காணவும். (பக்கம் 59-60.)

கோவில் விஷயத்தில் திட்டங்களை நிஷ்கரிஷைசெய்வது (55 வது பிரிவைக்காணவும். பக்கம் 60.)

அதாவது செலவுபோட்டு, வீதநிர்ணயம் அதற்குக் கம்மிட்டியாரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

(பிரிவு 55 பக்கம் 61.)

வருஷாவருஷம் வரவு செலவு திட்டம் ஒன்றைத் தயார் செய்யவேண்டும். அதைக் கமிட்டியாருக்கு அனுப்பவேண்டும். வரவு செலவுதிட்டத்தில் ஏறக்குறையவருகிறவருஷத்தில் எதிர்பார்க்கும் வரவு, செய்யப்போகும்செலவு முதலியவைகளைக் காண்பிக்கவேண்டும். அதைக் கம்மிட்டியாரும் சரியென்று கூற வேண்டும், அதற்குமேல் அப்பீல் போர்டாருக்குண்டு. போர்டாருடைய தீர்ப்பே முடிவானது. (பிரிவு 56—பக்கம் 62.)

விலக்கப்பட்ட கோயிலின் பரிபாலன சம்பந்தமான ஏற்பாடொன்றைப் போர்டார் செய்யலாம் என்று போர்டாருடைய அதிகாரங்களைப்பற்றின இடத்தில் குறித்தோமல்லவா? அவ்விதமாகப் போர்டார்செய்யும் ஸ்கீம் என்னும் பரிபாலன சம்பந்த ஏற்பாட்டினுல் திருப்தியடையாமற்போனுல் டிரஸ்டி அந்த ஏற்பாட்டை மாற்றவோ அல்லது ரத்துசெய்யவோ கோர்ட்டில் வழக்குத் தொடரலாம். (பிரிவு 57 (3) பக்கம் 63, 64.)

கோயில் உத்தியோகஸ்தர்கள் வேலைக்காரர்கள் ஆகிய இவர்களுடைய காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்ய டிரஸ்டிக்கு அதிகாரமுண்டு. (பிரிவு 58 (1) பக்கம் 64.)

போர்டார் கூறும்வண்ணம் வரவு செலவு கணக்கு முதலான விவரங்களை அவர்களுக்கு டிரஸ்டிகள் கொடுக்கவேண்டும். (பிரிவு 59 பக்கம் 66.)

மடம் விலக்கப்பட்டகோயில் ஆகியவைகளின் டிரஸ்டிகள் ஒவ்வொரு வருஷத்திலும், அடுத்தவருஷத்தில், மடம் கோயில் ஆகிய இவைகளின் உத்தேசமான வரவு செலவுகளையும் கடந்த வருஷத்தில் வந்தரூபாய் செலவழிந்த விவரம் ஆகியவைகளையும் காட்டும் பட்டியலைப் போர்டாருக்கு காட்ட வேண்டும். (பிரிவு 61 பக்கம் 68.)

பரம்பரையாய் ஏற்பட்டிராதடிரஸ்டி இவர்களை நியமிக்கக்கூடியவர் கமிட்டியார். (பிரிவு 51 (2) பக்கம் 55)

பரம்பரையாய் ஏற்பட்டிராத டிரஸ்டிகளின் யோக்கியதை குறைவுகளைப்பற்றி 54 வது பிரிவு கூறுகிறது. (பக்கம் 59.)

ஆக்டின் வாசகம்

ஆக்டின்வாசகம் சிற்சிலவிடங்களில் சந்தேகம் தீர தெளிவாயில்லை. அதைத் தீர்த்துவைத்தால் மிகவும் உபயோகமாயிருக்கும். உதாரணமாக பின்வரும் நான்குபிரிவுகளுடைய வாசகத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

53 (4) "... போர்டாரின் அல்லது கோர்டாரின் உத்திரவு முடிவானதாகும்" (பக்கம் 59.)

54 (4) "...அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்." (பக்கம் 60.)

76 (3) ".... கோர்டார்செய்யும் உத்திரவும் முடிவானதாகும்." (பக்கம் 89.)

இவைகளுடைய வாசகம் தெளிவா யிருக்கிறதல்லவா ? தெளிவில்லாத இரண்டுவாசகத்தை எடுத்துக்கொள்ளுவோம்.

77 (2) "...விண்ணப்பத்தின் முடிவுக்கு உட்பட்டு போர்டாரின் உத்தரவு முடிவானதாகும்." (பக்கம் 96.)

84 (2) ...... " (பக்கம் 96.)

குறிப்பின் விளக்கம்

24 கல்கத்தர் 418 என்றால் கல்கத்தர் நெம்பரில் 24 வால்யூமில், பக்கம் 418.

63 ம. லா. ஜ 284 என்றால் மதராஸ் லா ஜர்னல் 63 நெம்பரில், பக்கம் 284.

54 மத. 928 என்றால் மதராஸ் நெம்பரில் 54 வால்யூமில் 928 ம், பக்கம்.

பொருளடக்கம்

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
1	பீடிகை ...	1
2	வியாபகம் ...	2
3	(a) இனுங்களை நிவாரணைசெய்ய அதிகாரம்	3
	(b) ஆக்டை ஜைனசம்பந்தமான இனுங்களுக்கும் பிரயோகப்படும்படி செய்ய அதிகாரம் ...	,,
5	அட்வொகேட் ஜெனரலின் அதிகாரத்துக்குப் பாதகம் ஏற்படாதென்பது ...	5
6	1925 ஷூ 1-வது ஆக்டு ரத்தாவது	6
7	ஷை ஆக்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கைகள் சட்டப்பிரகாரம் செலவாணியாகும்படி செய்வது ...	,,
8	சட்டதிட்டங்கள் ரத்தாவது ...	7
9	அர்த்தம் ...	,,
	(1) போர்டு ...	,,
	(2) கம்மிட்டி ...	,,
	(3) கோர்டு ...	,,
	(4) தெரிந்தெடுக்கப் பட்டவர்களின் விஸ்தீர்ணம் ...	,,
	(5) விலக்கப்பட்டகோவில் ...	8
	(6) பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டி ...	9
	(7) மடம் ...	10
	(8) பரம்பரையாய் ஏற்படாத டிரஸ்டி	,,

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
	(9) பற்றுள்ளவரா யிருக்கும் நபர் ...	10
	(10) நிர்ணயிக்கப்பட்ட ...	11
	(11) மதசம்பந்தமான இனம் ...	,,
	(12) கோயில் ...	12
	(13) டிரஸ்டி ...	,,

2-ம் அத்தியாயம்

கமிஷனர்களின் போர்டுகள்

10	போர்டின் அமைப்பு ...	13
11	போர்டில் இத்தனை மெம்பர்கள் இருக்க வேண்டுமென்பதும் அது சட்டப்படி சேர்ந்த சபையாவதும் ...	14
12	கமிஷனர்களின் யோக்கியாதாம்சங்களும் அவர்களின் நியமனமும் ...	,,
13	கமிஷனர்களின் உத்தியோக கால அளவு	15
14	கமிஷனர்களுக்குப் பிரதிபலன் ...	16
15	கமிஷனர்களை நீக்கிவிட கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரமும் அவர்களின் யோக்கியதைக் குறைவும் ...	17
16	போர்டின் சபைகளும் ...	,,
17	போர்டின் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும் ...	18
18	பொதுவாகப் போர்டாரின் அதிகாரங்களும் அலுவல்களும் ...	19
19	சகாயச் சட்டங்கள்செய்ய போர்டாருக்குள்ள அதிகாரம் ...	20

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
	3-ம் அத்தியாயம்	
	தேவஸ்தான கமிட்டிகள்	
20	கம்மிட்டிகளை அமைப்பதும் மாற்றுவதும் எடுத்துவிடுவதும் ...	23
21	கமிட்டியில் இத்தனைபேர் இருக்கவேண்டு மென்பது ...	24
22	புதிய கமிட்டியை அமைப்பது ...	,,
23	தெரிந் தெடுப்பவர்களின் விஸ்தீர்ணங்களும் சர்க்கிள்களும் ...	25
24	தெரிந் தெடுப்பவர்களின் ஜாபிதா ...	,,
25	தெரிந் தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங் களும் யோக்கியதை குறைவுகளும் ...	26
26	அபேட்சகர்கள் மெம்பர்கள் ஆகிய இவர் களின் யோக்கியதைக் குறைவு ...	,,
27	மெம்பர்களின் உத்தியோக காலஅளவு ...	30
28	பிரசிடென்டும், வைஸ்பிரசிடென்டும் ...	,,
29	பிரசிடென்டும், வைஸ்பிரசிடென்டும் கமிட் டிமெம்பர்களும் ராஜினாமா செய்வது ...	,,
30	காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வது ...	31
31	கமிட்டியார் செய்யும் காரியமானது கிரமப் பிசகு காரணமாக சட்டசம்மத மற்றதாய் விடப்படா தென்பது ...	32
32	கமிட்டி சட்டப்படி சேர்ந்த சபையாவது	33
33	கமிட்டியின் உத்தியோகஸ்தர்களும் ஊழி யக்காரர்களும், அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும் ...	,,
34	பிரசிடென்டுடைய வேலைகள் ...	34

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
35	கமிட்டியாருக்குக் கோயில்கள் விஷயமாய் பொதுவான மேல்விசாரணை உண்டென்பது	35
35 A	போர்டார் கமிட்டிகளுடைய கடமைகளை ஏற்றுக்கொண்டு செய்யலா மென்பது	36
36	ரெகுலேஷன் ஏற்படுத்த கமிட்டியாருக் குள்ள அதிகாரம் ...	37
37	மடங்கள் அல்லது விலக்கப்பட்ட கோயில் களின்மேல் கமிட்டியாரின் விசாரணை அதி காரம் கூடாதென்பது ...	38

4-ம் அத்தியாயம்

பொதுவாய் மதசம்பந்தமான இனுங்கள்

38	இனுங்களைக்குறித்த ரெஜிஸ்டர் தயார்செய்வது	39
39	ரெஜிஸ்டரை வருஷவாரியில் சரிபார்ப்பது	41
40	டிரஸ்டி ஜாக்கிரதையாக யிருக்கவேண்டு மென்பதும் அவருடைய அதிகாரங்களும்	42
41	மடம் அல்லது கோயிலின் டிரஸ்டிக்கு குறிப் பிட்ட இனுங்களின் டிரஸ்டிகளின் மேலுள்ள அதிகாரம் ...	”
42	பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டிகள் ...	43
43	கோயில்களில் ஊழியக்காரர்களை நியமிப் பதும் தண்டிப்பதும் ...	44
44	இனுமானது சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பா யிருக்கும்போது கைங்கரியம் செய்யும்படி நிர்பந்திப்பது ...	46
44 A	யாதொரு கோயில் ஊழி யநிபந்தனையின் மேல் தேவதாசியின் கைப்பற்றிலிருந்து	

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
	வரும் நிலங்கள் முதலியவைகளை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்வது அல்லது விடுவிப்பது ...	48
45	கணக்குகள் வைத்துவருவதும் ஆடிட்டர்களை நியமிப்பதும் ...	53
46	தணிக்கை ரிப்போர்ட் அனுப்புவது ...	,,
47	தணிக்கை ரிப்போர்டில் இன்னவிஷயங்கள் அடங்கியிருக்க வேண்டுமென்பது ...	54
48	தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும்செலவை இனம் நிதியிலிருந்து வசூலிப்பது ...	,,

5-ம் அத்தியாயம்

கோயில்கள்

49	விலக்கப்பட்ட கோயில்களுக்கு இந்த அத்தியாயம் பிரயோகப் படமாட்டாதென்பது	55
50	ட்ரஸ்டி ஹிந்துவா யிருக்கவேண்டு மென்பது	,,
51	பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளும் அவர்களின் சங்கியையும் அவர்களை நியமிப்பதும் ...	,,
52	கம்மிட்டியாரின் உத்தரவுகளுக்கு ட்ரஸ்டி கீழ்படிந்து நடந்துகொள்ள வேண்டுமென்பது	56
53	ட்ரஸ்டிகளை எடுத்துவிடுவதும் தள்ளிவிடுவதும்	,,
54	ட்ரஸ்டிகளின் யோக்கியதைக் குறைவுகள்	59
55	கோயில்களில் பரிமாண செலவுதிட்டங்களை நிஷ்கரிஷை செய்வது ...	60
56	கோயில்களின் பட்ஜெட்டுகள் ...	62

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
57	விலக்கப்பட்டிராத கோவில்களுக்கு (ஸ்கீம்) ஏற்பாடுகள் ...	63
58	உத்தியோகம் வகிப்பவர்களுக்குள் அல்லது ஊழியக்காரர்களுக்குள் ஏற்படும் காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வது ...	64
59	கமிட்டியாருக்காவது போர்டாருக்காவது டிரஸ்டிகள் கணக்குகள் சவதரிக்கவேண்டு மென்பது ...	66
60	பிரசிடென்டாவது மெம்பராவது இனங்களைப் பார்வையிடுவது ...	,,
60 A	சிலவிஷயங்களில் போர்டார் யாதொரு கமிட்டியின் உரிமைகளையும் அதிகாரங்களையும் செலுத்துவதும் கடமைகளை நிறைவேற்றுவதும் ...	,,

---

6-ம் அத்தியாயம்

மடங்களும் விலக்கப்பட்ட கோயில்களும்

61	பட்ஜெட்களையும் வருஷாந்திர கணக்குகளையும் அனுப்புவது ...	68
62	டிரஸ்டிகள் சரியாக நிர்வாகம் செய்வதைக் குறித்து போர்டார் விசாரணை செய்வது	,,
63	மடங்களுக்காகவும் விலக்கப்பட்ட கோவில்களுக்காகவும் ஏற்பாடுகள் ...	69
64	போர்டாரின்உத்திரவு முடிவானதாகு மென்பது	70
65	ஏற்பாடுகளைத் திருத்துவது அல்லது ரத்து செய்வது ...	,,

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.

7-ம் அத்தியாயம்

இனம்நிதியை உபயோகிப்பது

66	யாத்திரைக் காரர்கள் ஆராதனை செய்பவர்கள் இவர்களின் தேகாரோக்கியம் முதலியவைகளுக்காகப் பணம் செலவழிக்க டிரஸ்டிகளுக்குள்ள அதிகாரம் ...	71
67	இனம் அல்லது மிகுதித்தொகையை "ஸீப்ரோ" கோட்பாட்டை அனுசரித்து உபயோகிப்பது ...	72

8-ம் அத்தியாயம்

திரவிய விஷயம்

68	போர்டாராகிலும் கமிட்டியாராகிலும் சட்ட சம்பந்தமான நடவடிக்கை களுக்காகச் செய்த செலவை இனமிலிருந்து வசூலிப்பது	75
69	போர்டுக்கும் கமிட்டிக்கும் இனங்களிலிருந்து வருஷவாரி சகாயத்தொகைக் கொடுத்து வருவது ...	,,
70	கோர்டுசெலவு முதலிய செலவுகளையும் சகாயத் தொகைகளையும் விதிப்பதும் வசூலிப்பதும் ...	77

9-ம் அத்தியாயம்

பலவகை பட்டவை

71	விதிகள்செய்யப் பிரதேசவெர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம் ...	83

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
72	ஷெட்யூல்களைமாற்ற அதிகாரம் ...	85
73	வியாஜ்ஜியங்கள் ...	86
74	வியாஜ்ஜியச்செலவு முதலியவை ...	87
75	ஸிவில் ப்ரொஸீஜர்கோட் 92-வது பிரிவின் படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடுகள்	88
76	அசையாப் பொருளாகவுள்ள ட்ரஸ்டிசொத்தைப் பராதீனப்படுத்துவது ...	89
77	சிறிதுமட்டில் மதசம்பந்தமாயும் சிறிதுமட்டில் லௌகிக சம்பந்தமாயுமுள்ள இனுங்களுக்கு இந்தஆக்ட் பிரயோகப்படுவது	90
78	டிரஸ்டிக்குச் சுவாதீனப்படுத்துவது ...	91
79	ஸ்திரமாய் ஏற்பட்டுள்ள ஆசாரங்களுக்கும் மாமூல்களுக்கும் பாதகமில்லையென்பது	92
80	இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மதசம்பந்தமான இனுங்களின் விஷயத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக்கூடாதென்பது ...	„
81	இந்த ஆக்டின்படிக்கான தஸ்தாவேஜுகளுக்கு விதிக்கத்தக்க கோர்ட் கட்டணங்கள்	93
82	நடவடிக்கை குறிப்பு முதலியவைகளுக்கு நகல்கள் கொடுப்பது ...	„
83	இப்போதிருக்கும் கம்மிட்டிகளுக்குப் பிரயோகப் படக்கூடிய அங்காமியான நிபந்தனைகள் ...	94
84	மடங்களுக்கும் கோயில்களுக்கும் இந்த ஆக்ட் பிரயோகப்படுவது விஷயமாய் ஏற்படும் விவாதங்களை பைசல்செய்வது ...	95

பிரிவு.	விளக்கம்.	பக்கம்.
85	இந்த ஆக்டை அமூலுக்குக்கொண்டு வரும் போது ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திசெய்வது	96

1-வது ஷெட்யூல்

1-ம் பாகம். தெரிந்தெடுப்பவர்களின் யோக்கிய தாம்சங்கள் ... 98

2-ம் பாகம். யோக்கியதை குறைவுகள் ... 99

2-வது ஷெட்யூல்

கோர்டுகட்டணங்கள் ... 100-104

3-வது ஷெட்யூல்

அங்காமியமான நிபந்தனைகள் ... 105-106

1-வது அநுபந்தம்

ஸ்டேட்மெண்டு நமூனா ... 107-111

2-வது அநுபந்தம்

கணக்கு விதிகள் ... 112-116

2-வது அநுபந்த நமூனா ... 116-118

சென்னபட்டணம்

ஹிந்துமதசம்பந்தமான இனங்களைக் குறித்த ஆக்ட்

சில ஹிந்து மதசம்பந்தமான இனங்களை முன்னிலும் நன்ருய்ப் பரிபாலனம் செய்வதற்காகவும் நிர்வாகம் செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவதற்கும், ஹிந்து மதசம்பந்தமான இனங்களைக்குறித்த 1923-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படி நடத்தப்பட்ட நட-வடிக்கையும் செய்யப்பட்ட காரியங்களும் சட்ட சம்மதமானவையா என்பது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்குமான ஆக்ட்.

பீடிகை.

இதன்கீழ் விவரிக்கப்பட்டிருக்கும் சில ஹிந்து மதசம்பந்தமான இனங்களை முன்னிலும் நன்ருய்ப் பரிபாலனம் செய்வதற்காகவும் நிர்வாகம் செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும்,

சென்னபட்டணம் 1925-ம்வருஷத்து 1-வது ஆக்ட்.

ஹிந்து மதசம்பந்தமான இனங்களைக் குறித்த 1923-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கையும் செய்யப்பட்ட காரியங்களும் சட்டப்படி செல்லுமா என்பது விஷயமாய்ப் பலவிதமான சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கிறபடியாலும்,

ஷை நடவடிக்கையையும் காரியங்களையும் குறித்து ஆட்சேபித்து சென்னை ஹைகோர்ட்டிலும் அதற்குக் கீழ்ப்பட்ட சில கோர்ட்டுகளிலும் சட்டசம்பந்தமான சில நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டிருக்கிறபடியாலும்,

ஷை சந்தேகங்களை நிவர்த்திசெய்வதும் ஷை நடவடிக்கையையும் காரியங்களையும் சட்டப்படி செலாவணியாகும்படிச் செய்வதும் யுக்தமாயிருக்கிறபடியாலும்,

இந்த ஆக்டை ஜாரிசெய்வதற்குக் கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும்,

இதனுல் விதிக்கப்படுகிற தென்னவென்ருல்:—

சுருக்கமானபெயர்.

1. இந்த ஆக்டை, 1926-ம்ஸூத்திய சென்னப்பட்டணத்து [1]ஹிந்து மதசம்பந்தமான இனுங்களைக் குறித்த ஆக்ட் என்று சொல்லலாம்.

வியாபகம்.

2. [2]இந்த ஆக்டானது-ராஜதானிப்பட்டணத்தைத் தவிர சென்னபட்டனம் பிரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிப்பதுமல்லாமல், இதில் பின்

1 "ஹிந்து" என்ருல்யார். 31 கல்கத்தா 11. 20 இ. அ. 249. சமணர்கள், பிரும்மசமாஜிகள், ஆரியசமாஜிகள், சீக்கியர்கள் ஆகியவர்கள் ஹிந்துக்களாவார்கள். 32 பம் 669. 31 கல் 11. 7 கல் 767.

2 இந்த ஆக்டு பொது இனுங்களை மாத்திரமே பாதிக்கும். தனிப்பட்ட சொந்த இனுங்களைப் பாதிக்காது. பொதுமக்களுடைய உபயோகத்திற்காவது நன்மைக்காவது அமைக்கப்பட்டிருக்கும் இனுங்கள் பொதுவாகும். குடும்பவிக்கிரங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் இனுங்கள் பொது இனுங்களாகாது.

ஜுகல் கிஷோர்—லட்சுமணதாசர். 23பம் 659

கஞ்சம் விசாகப்பட்டணம் கிழக்கு கோதாவரி ஜில்லாக்களடங்கிய எஜன்சி பிரதேசங்கள் இந்த ஆக்டினுடைய வியாபகத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது.

(ஜீ. ஓ. நெம்பர் 309 ரெவினியூ 9-பிப்ரவரி 1928,

னுல் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி, ஹிந்து மதசம்பந்தமான சகல பொது இனுங்களுக்கும் பிரயோகப்படுகிறது.

[1] விவரணம்:—இந்த ஆக்டின் காரியங்களுக்காக, ஹிந்து மதசம்பந்தமான பொது இனுங்கள் என்பதில் ஜைன மதசம்பந்தமான இனுங்கள் அடங்கமாட்டா.

இனுங்களை நிவாரணை செய்ய அதிகாரம்.

3. (a) போர்டாரைக் கலந்து ஆலோசனை செய்த பிறகு பிரதேச கவர்ன்மென்டார் - அப்படிப்பட்ட யாதொரு இனுமுக்கு இந்த ஆக்டிற் கண்ட எல்லா நிபந்தனைகளுமாவது அவைகளில் யாதொன்ருவது பிரயோகப்படாமல் நிவாரணை செய்யலாம், அல்லது அப்படி நிவாரணை செய்திருப்பதைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

ஆக்டை ஜைன மத சம்பந்தமான இனுங்களுக்கும் பிரயோகப் படும் படிச் செய்ய அதிகாரம்.

(b) பிரதேச கவர்ன்மென்ட்டார் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளையும் அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளில் கண்ட நிபந்தனைகளையும் ஜைன மதசம்பந்தமான இனுங்களுக்கும் விளம்பரமூலமாய்ப் பிரயோகப்படும்படிச் செய்யலாம்; மேலும், அவர்கள் - அந்தப்படி பிரயோகப்படும்படிச் செய்யும்போது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற நிர்ப்பந்தங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்பட்டு அந்த நிபந்தனைகள் பிரயோகப் படுமென்று பிரசித்தம் செய்யலாம் :

---

1 விவரணம்:—3வது பிரிவு (b) உட்பிரிவின் கீழ் ஜைன மத சம்பந்தமான இனுங்களுக்கும் பிரயோகப்படும்படிசெய்ய அதிகாரம் கொடுக்கிறது.

ஆனுல், அப்படிப்பட்ட விளம்பரம் பிறப்பிப்பதற்குமுன் பிரதேச கவர்மெண்டார்-தாங்கள் அப்படி செய்ய உத்தேசித்திருப்பதாகக் கண்டு போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் ஒரு நோடீஸ் பிரசுரித்து, சம்பந்தப்பட்ட இனுங்களில் பற்றுள்ள நபர்கள் அப்படிப்பட்ட விளம்பரம் ஏன் பிறப்பிக்கக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்காக அவர்களுக்கு நியாயமான கால அளவு ஏற்படுத்திக்கொடுத்து,• அவர்கள் சொல்லும் எவையேனும் ஆட்சேபனைகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

சென்னப்பட்டணம் 1930 ஞு 3-வது ஆக்ட்

14. * * *

சென்னப்பட்டணம் 1930 ஞு 3-வது ஆக்ட்

1 ஹிந்துமதசம்பந்தமான இனுங்களைக்குறித்த சட்டத்தின் 4-வது பிரிவை விட்டுவிட வேண்டும்.

ஷை பிரிவை விடவேண்டிய காரணம் என்னவென்றுல்—

மதசம்பந்தமான சில ஸ்தாபனங்களின் வரும்படி சென்னபட்டணத்து ஹிந்து மதசம்பந்தமான இனுங்களைக் குறித்தஆக்டின் 4-வது பிரிவில் சொல்லியிருக்கும் அதமத்தொகைக்கும் குறைவாயிருப்பதுகாரணமாக, அந்த ஸ்தாபனங்களுக்குச் சாதாரணமாய் ஷை ஆக்ட் பிரயோகப்படுவதில்லை. இவை மிகவும் அசட்டை செய்யப்பட்டுச் சரியாய் நிர்வகிக்கப்படாமலிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையில், மேலேகண்ட பிரிவைச் சேர்ந்த விலக்கு நிபந்தனையின் படி ஆக்டை விசேஷவகையில் பிரயோகித்து, அப்படிப்பட்ட ஸ்தாபனங்களின் விஷயத்தில் நடவடிக்கை நடத்தவேண்டியிருக்கிறது. இந்த ஆக்டானது வரும்படியைக் கவனிக்காமலே எல்லா ஸ்தாபனங்களுக்கும் பிரயோகப்படக்கூடியதா யிருக்கவேண்டும். சொற்ப வரும்படியுள்ள கோயில்கள் அல்லது மடங்களிலிருந்து சகாயத்

5. மதசம்பந்தமான இனுங்களின் விஷயமாய் இந்தியா கவர்ன்மென்ட் ஆக்ட் 114-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அட்வொகேட் ஜெனரலவர்கள் செலுத்தக் கூடிய அதிகாரங்களை இந்த ஆக்டிலுள்ள தெதுவும் பாதிப்பதாகவோ அவைகளை எந்த விதமாயாவது குறைப்பதாகவோ கொள்ளக்கூடாது.

அட்வொகேட் ஜெனரலின் அதிகாரத்துக்குப்பாதகம் ஏற்படாதென்பது.

தொகைகள் விதித்து வாங்குவதனுல் அவைகளுக்குக் கஷ்டம் ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம், அவைகள் விஷயத்தில் ஷை ஆக்டின் 69-வது பிரிவு பிரயோகப்படாமலிருக்கும்படி நிவாரணை செய்யலாம். அல்லது போர்டார் அந்தப் பிரிவின்படி தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற விதமாய் நடந்துகொள்வதற்கு ஏற்பட்டிருக்கும் அதிகாரத்தைச் செலுத்தி தகுந்த ஒரு வீதத்தை நிஷ்கரிஷை செய்யலாம்:-

இந்த ஆக்டு உண்டாவதற்கான ஹேதுக்களும் காரணங்களும்.

விடப்பட்ட பிரிவின் வாசகமாவது:—

இந்த ஆக்டில்கண்ட எந்தமடம் அல்லது கோவிலுக்குச் சம்பந்தப்பட்ட இனுங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி உட்பட அந்தமடம் அல்லது கோவிலுக்கு இந்தஆக்டு வழங்கத் தொடங்குவதற்கு ஐந்து வருஷகாலத்துக்கு வருஷம்தோரும் கிடைத்துவந்த சராசரிமொத்த வரும்படி மடங்களின் விஷயத்தில் ஐந்நூறுக்கு ரூபாயுக்குக் குறைவாகவும், கோயில்களின் விஷயத்தில் இருநூற்று ஐம்பது ரூபாய்க் குறைவாகவும் இருந்ததோ அப்படிப்பட்ட யாதொருமடம் அல்லது கோயிலுக்குப் பிரயோகப்படமாட்டாது.

நிவாரணைகள்

ஆனுல், இந்த ஆக்டிற்கண்ட எல்லா நிபந்தனைகளுமாவது அவைளில் எவையாவது அப்படிப்பட்ட யாதொரு மடம் அல்லது கோயிலுக்குப் பிரயோகப்படுமென்று நிர்ணயித்து பிரதேச கவர்ன்மென்டார் எப்போதாகிலும் விளம்பரம் பிரசுரிக்கலாம்.

6. (இதில் பின்னால் 'ஷை ஆக்ட்' என்று குறிப்பிடப் படும்) ஹிந்து மதசம்பந்தமான இனுங்களைக் குறித்த 1923-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்ட் இதனால் ரத்து செய்யப்படுகிறது.

சென்னபட்டணம் 1925-ம்வருஷத்து 1-வது ஆக்ட் ரத்தாவது.

7. (i) ஹிந்து மதசம்பந்தமான இனுங்களுக்காக கம்மிஷனர்களின் போர்டை ஏற்படுத்தினது உட்பட ஷை ஆக்டின்படியும் அதை அனுசரித்தும் நடத்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் செய்யப்பட்ட சகல காரியங்களும், வெளிவிடப்பட்ட விளம்பரங்களும், பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளும் சட்டப்படி செலாவணியாகத்தக்க விதமாய் நடத்தப்பட்டோ, செய்யப்பட்டோ, வெளிவிடப்பட்டோ அல்லது பிறப்பிக்கப்பட்டோ இருப்பவைகளாகக் கருதப்படும்.

சென்னபட்டணம் 1925-ம் வருஷத்து 1-வது ஆக்டின்படி நடத்தப்பட்ட நடவடிக்கை சட்டப்பிரகாரம் செலாவணியாகும் படிச் செய்வது.

(ii) ஷை ஆக்டின்படி நடத்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமற்றவைகளா யிராதபட்டிலே, அவைகளை இந்த ஆக்டின்படி நடத்திக்கொண்டு வரலாம்.

(iii) ஷை ஆக்டின்படி தொடங்கப்பட்டிருந்து, இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும் காலத்தில் முடிவாகாமலிருக்கிற எந்த நடவடிக்கைகள் விஷயமாய் இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடி விண்ணப்ப மூலமாகவாகிலும் வியாஜ்ஜிய மூலமாகவாகிலும் அப்பீல் செய்துகொள்வது மூலமாகவாகிலும் யாதொருபரிகாரம் கோரப்படுகிறதோ அந்த நடவடிக்கைகள் இந்த ஆக்டின்படி தொடங்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே ஷை பரிகாரமானது அந்த நடவடிக்கைகள் விஷயமாய்க் கிடைக்கக்கூடியதாகும்.

சட்டதிட்டங்கள் ரத்தாவது.

8. மதசம்பந்தமான இனுங்களைக்குறித்த 1863-ம்ஹூத்து ஆக்டும் இனுங்களையும் வாரிசு இல்லாததனுல் ஸர்க்காரைச் சேர்ந்துவிடும் சொத்துக்களையும் குறித்த 1817-ம்ஹூத்திய சென்னபட்டணத்து ரெகுலேஷனும் இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற ஹிந்து மதசம்பந்தமான இனுங்களுக்குப் பிரயோகப்படுகிற மட்டில்; அவை இதனுல் ரத்துசெய்யப்படுகின்றன.

அர்த்தம்.

9. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதம் ஒன்றும் இல்லாவிட்டால்,—

போர்ட்.

(1) (a)'போர்டு' என்பது - 10-வது பிரிவின்படி அமைக்கப்பட்டுள்ள போர்டு (சபை) என்று அர்த்தமாகும்;

கம்மிட்டி.

(2) (b)'கம்மிட்டி' என்பது-20-வது பிரிவின்படி அமைக்கப்பட்டுள்ள யாதொரு கம்மிட்டி என்று அர்த்தமாகும்;

கோர்ட்.

(3) 'கோர்ட்' என்பது - எவருடைய பிரதேச அதிகார எல்லைக்குள் ஒரு கம்மிட்டியார் விசாரணை அதிகாரம் செலுத்துகிறுர்களோ அல்லது ஒரு மடமாவது கோயிலாவது இருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜின் கோர்ட் என்று அர்த்தமாகும்;

தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம்.

(4) 'தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணம்' என்பது - யாதொரு கம்மிட்டியைத் தெரிந்தெடுப்பவர்கள் அடங்கிய விஸ்தீர்ணம் என்று அர்த்தமாகும்;

(a) இரண்டாவது அத்தியாயத்தைக் காணவும்.

(b) மூன்ருவது அத்தியாயத்தைக் காணவும்.

விலக்கப்பட்ட கோயில். (5) [1]'விலக்கப்பட்ட கோயில்' என்பது—

1 'விலக்கப்பட்ட கோயில்' என்பதன் அர்த்தம்—விலக்கப்பட்ட கோயில் என்பதற்கு இப்போது கொடுத்திருக்கும் அர்த்தத்தில் கண்டபடி பரீட்சை செய்துபார்த்து யாதொரு கோயில் விலக்கப்பட்டதா அல்லவா என்பதைத் தீர்மானிக்கும் விஷயத்தில் அனேக கஷ்டங்கள் இருக்கின்றன. மேலும், பிரத்தியேகமான நிலைமையையுடைய சில கோயில்கள் இருக்கின்றன. அவை இப்போதுள்ள அர்த்தத்தைப் பிரயோகிப்பதால் விலக்கப்படாத கோயில்களென்னும் வகையைச் சேருமானாலும், அவைகளின் நிலைமைகளை உத்தேசித்து அவைகள் விஷயமாக விசேஷ வகையாய் நடவடிக்கை நடத்துவது நியாயமென்று ஏற்படுகிறது. ஆகவே, இப்போதுள்ள சிக்கலான அர்த்தத்துக்குப் பதிலாக சுலபமான அர்த்தமொன்றை ஏற்படுத்தியிருக்கிறது. இதன்படி, எந்தக் கோயில்களின் ட்ரஸ்டி உத்தியோகம் முழுவதும் பரம்பரையாக வகிக்கப்பட்டு வருகிறதோ அல்லது எந்தக் கோயில்களின் ட்ரஸ்டி உத்தியோக விஷயமாய் அவைகளை ஸ்தாபித்தவரால் விசேஷ நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல கோயில்களும் சில விசேஷ காரணங்களை உத்தேசித்து எந்தக் கோயில்களை விலக்கப்பட்ட கோயில்களாக பாவிக்கப் பிரதேச கவர்ன்மெண்டார் விரும்புகிறார்களோ அந்தக் கோயில்களும் ஷை வகையைச் சேர்ந்தவைகளாகும்:—

இந்த ஆக்டு உண்டிவதற்கான காரணங்களும் ஹேதுக்களும்:
பழையபிரிவின் வாசகமாவது:—

(a) எந்தக் கோயில் 1801-ம்வருஷத்துக்குமுன் முற்றிலும் ஒரு ட்ரஸ்டியின் நிர்வாகத்தில் இருந்ததுமல்லாமல், 1923-ம்வருஷத்துக்குப் பிறகும் அப்படியே இருந்துவந்து, அவரை நேமகஞ்செய்யும் அதிகாரம் கவர்ன்மெண்டாரிடத்தில் சங்கிரமித்திருக்கவில்லையோ அல்லது அவர்களால் செலுத்தப்படவில்லையோ அல்லது கவர்ன்மெண்டாராலாவது யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தராலாவது ஊர்ஜிதப்படுத்தப்படுவதற்கு உட்பட்டிருக்கவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு கோயில், அல்லது.

எந்தக் கோயிலின் விஷயத்தில் அதன் டிரஸ்டி உத்தியோகத்தையாவது, (ஒரு ட்ரஸ்டிக்கு மேற்பட்டிருக்கும் பட்சத்தில்) அதன் டிரஸ்டிகள் எல்லாருடைய உத்தியோகங்களையுமாவது உரிமைவழியாய் அடையும் பாத்தியதை பரம்பரையாய் ஏற்பட்டிருக்கிறதோ, அல்லது எதன் டிரஸ்டி உத்தியோகத்தை உரிமைவழியாய் அடையும் விஷயத்தைக்குறித்து அதை ஸ்தாபித்தவரால் பிரத்தியேகமாக நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட கோயில் என்று அர்த்தமாவதுமல்லாமல், அதில் ஷை கோயிலும் அடங்கும்."

பரம்பரையாய்ஏற்பட்ட ட்ரஸ்டி

(6) 'பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டி' என்பது மத சம்பந்தமான இனுமைச்சேர்ந்த யாதொரு டிரஸ்டி உத்தியோகத்துக்கு வருபவர் பரம்பரை உரிமை மூலமாகிலும் அந்தந்த காலத்திலுள்ள டிரஸ்டியினால் நேமகம் செய்யப்படுவது மூலமாகவாகிலும் அந்த உத்தியோகத்துக்கு வரவேண்டியதாகவாவது, அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவதை குறித்து மாமூலை அனுசரித்து மற்றப்படி ஒழுங்கேற்படுத்தப்பட்டாவது, அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய்ப் பிரஸ்தாபஇனும் ஏற்படுத்திபவர் பிரத்தியேகமாக நிபந்தனை கண்டாவது உள்ள உரிமைவழியாய் டிரஸ்டி உத்தியோகத்துக்கு வருவது சம்பந்தமான யாதொரு (ஸ்கீம்) ஏற்பாடு செலாவணியாய்க் கொண்டிருக்கிற வரையிலே, ஷை மதசம்பந்தமான இனுமைச் சேர்ந்த யாதொரு ட்ரஸ்டி என்று அர்த்தமாகும்;

(b) 1842-ம்ஹூத்துக்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட எந்தக்கோயிலின் ட்ரஸ்டி உத்தியோகத்தை உரிமை வழியாய் அடையும் பாத்தியதையானது பரம்பரையாய் ஏற்பட்டிருக்கிறதோ, அல்லது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய் அதை ஸ்தாபித்தவரால் பிரத்தியோகமாக நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ என்று அர்த்தமாகும்;

மடம்

(7) [1] 'மடம்' என்பது - ஹிந்துமதத்தை அபிவிருத்தி செய்வதற்கான எந்த ஸ்தாபனத்துக்கு, பாரமார்த்திக ஊழியத்தில் அமர்ந்திருப்பதைத் தமது கடமையாகக்கொண்ட அல்லது ஒரு சிஷ்யவர்க்கத்துக்குப் பாரமார்த்திக விஷயங்களில் தலைமை வகிக்கிற அல்லது வகிப்பதாய்ச் சுதந்தரம் கொண்டாடுகிற யாதொரு நபர் அக்ரஸ்தானத்தில் இருப்பதுமல்லாமல், அவருடைய உத்தியோகத்தை உரிமை வழியாய் அடைவதானது பிரஸ்தாப ஸ்தாபனத்தை ஏற்படுத்தியவரின் கட்டளைகளை அனுசரித்தாவது மாமூல்படி ஒழுங்குபடுத்தப்பட்டாவது இருக்கிறதோ அப்படிப்பட்ட ஸ்தாபனமென்று அர்த்தமாகும். மேலும், கோயிலில்லாமல் மதசம்பந்தமான ஆராதனை நடக்கும் இதர இடங்கள் அல்லது பிரஸ்தாப ஸ்தாபனத்தைச் சேர்ந்துள்ளவையாய் மத சம்பந்தமான போதனை செய்யப்படும் இடங்கள் என்பதும் அதில் அடங்கும்;

பரம்பரையாய்ஏற்பட்டிராத ட்ரஸ்டி

(8) 'பரம்பரையாய் ஏற்பட்டிராத டிரஸ்டி' என்பது-பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டியாயிராத யாதொரு டிரஸ்டி என்று அர்த்தமாகும்;

பற்றுள்ளவராயிருக்கும் நபர்

(9) [2] 'பற்றுள்ளவராயிருக்கும் நபர்' என்பது—

---

1 கோயிலுக்கும் மடத்துக்கும் உள்ள வேற்றுமையை அறிய வேண்டுமானல்

28 பம்பாய் 215ல் உள்ள கேஸையும், சர் டின்ஷாமுல்லா ஹிந்துலாவையும் காணவும்.

2 ஆராதனை செய்ய உரிமையுள்ள நபர்களெல்லோரும் பற்றுள்ள நபர் ஆவார்கள்.

சஜேதுர் ராஜா—கௌர்மோகன். 24 கல்கத்தா 418.

(a) ஒரு மடத்தின் விஷயத்தில், அந்த மடத்தின் யாதொரு சிஷ்யர் அல்லது அந்தமடம் எந்த மதக்கொள்கையைச் சேர்ந்ததோ அந்தக் கொள்கை உடைய யாதொரு நபர் என்றும்,

(b) ஒரு கோயிலின் விஷயத்தில், அந்தக் கோயிலில் ஆராதனை அல்லது சேவை நடக்கும்போது வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற, அல்லது அப்படிப்பட்ட ஆராதனை அல்லது சேவை நடக்கும்போது வழக்கமாய் வந்துகொண்டிருக்கிற, அல்லது அங்கே ஏதேனும் கொடுக்கப்படும்போது அதில் ஒரு பாகத்தைப்பெற்று வழக்கமாய் பலன் அடைந்து வருகிற யாதொரு நபர் என்றும்.

அர்த்தமாகும் ;

நிர்ணயிக்கபட்ட

(10) 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளைக்கொண்டு பிரதேச கவர்ன்மெடாரால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்.

மதசம்பந்தமான இனம்

(11) 'மதசம்பந்தமான இனம்' அல்லது 'இனம்' என்பது - மடங்கள் அல்லது கோயில்களுக்குச் சொந்தமான சகல சொத்து என்ருவது, மடங்கள் அல்லது கோயில்களுக்கு ஆதரவாயிருப்பதற்காகவோ அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் நடப்பதற்காகவோ கொடுக்கப்பட்ட அல்லது நிதி ஏற்பாடு செய்யப்பட்ட சகல சொத்து என்ருவது அர்த்தமாவது மல்லாமல், மடங்கள் அல்லது கோயில்களின் வளவு என்பதும் அதில் அடங்கும்; ஆனல், யாதொரு மடத்தின் தலைவருக்கோ யாதொரு கோயிலின்

அர்ச்சகர் அல்லது இதர வேலைக்காரருக்கோ தானமாகவாகிலும் காணிக்கையாகவாகிலும் அவருக்கென்றே கொடுக்கப்படும் சொத்து தானம் என்பது இதில் அடங்காது;

கோயில்.

(12) 'கோயில்' என்பது- எந்தப் பெயர் வழங்கினாலுஞ் சரி, பொது ஜனங்களால் மதசம்பந்தமான ஆராதனை செய்யும் இடமாக உபயோகிக்கப்பட்டும், மதசம்பந்தமான ஆராதனை செய்யும் இடமாக ஹிந்து ஜனசமூகத்துக்காவது அதில் ஒரு பிரிவாருக்காவது அவர்களின் பிரயோஜனத்துக்காகவாவது அர்ப்பணம் செய்யப்பட்டும் அல்லது அவர்களால் உரிமையை முன்னிட்டு உபயோகிக்கப்பட்டும் வருகிற யாதொரு இடம் என்று அர்த்தமாகும்;

ட்ரஸ்டி.

(13) 'டிரஸ்டி' என்பது - எந்தப் பெயர் வழங்கினாலுஞ்சரி, எந்த நபரிடத்தில் யாதொரு மதசம்பந்தமான இனுமின் நிர்வாக அதிகாரம் சங்கிரமித்திருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு நபர் என்று அர்த்தமாகும்; மேலும், ட்ரஸ்டியாயிருந்தால் எப்படி உத்திரவாதியாயிருப்பாரோ அப்படி உத்திரவாதியாயிருக்கும் யாதொரு நபர் என்பதும் அதில் அடங்கும்.

2-ம் அத்தியாயம்

கமிஷனர்களின் போர்டுகள்.

போர்டின் அமைப்பு.

10. (1) பிரதேச கவர்ன்மெண்டார் - விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக,[1]

(a) ப்ரெஸிடென்ஸி முழுவதுக்குமாவது அதில் குறிப்பிட்ட யாதொரு பாகத்துக்காவது ஒரு போர்டை ஏற்படுத்தும்படி கட்டளையிடலாம்;

(b) அப்படிப்பட்ட யாதொரு போர்டில் இருக்க வேண்டிய மெம்பர்களின் சங்கியையாவது அது விசாரணை வகிக்கக்கூடிய பிரதேச விஸ்தீர்ணத்தையாவது மாற்றலாம்; அல்லது,

(c) அப்படிப்பட்ட யாதொரு போர்டை எடுத்து விடலாம்:

ஆனால், ஒரே மடம் அல்லது கோயிலின் விஷயத்திலாவது அதற்குச் சம்பந்தப்பட்ட இனுங்கள் விஷயத்திலாவது ஒன்றுக்கு மேற்பட்ட போர்டுகளுக்கு அதிகாரம் இருக்க கூடாது:

மேலும், பிரதேச கவர்ன்மெண்டார் இந்த உப்பிரிவின்படி பல போர்டுகளை அமைக்கும்படி கட்டளையிடவோ

---

1 5 பிப்ரவரி 1925 தேதியிட்ட போர்ட்டு செண்டு ஜார்ஜ் கெஜட்டில் விளம்பர மூலமாய் கவர்ன்மெண்டார் ஒரு பிரசிடெண்டும் நான்கு கமிஷனர்களும் அடங்கின ஒரு போர்ட்டை நியமித்து அவர்களுடைய தலைமை ஸ்தானத்தை மதராஸில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

யாதொரு போர்டை மாற்றவோ அல்லது எடுத்துவிடவோ உத்தேசிக்கும்போது, வெளியிட உத்தேசித்திருக்கும் விளம்பரத்தின் மசோதா ஒன்றை நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய்ப் பிரசுரித்து சட்டநிரூபண சபையாருக்கு முன் வைக்கவேண்டும்; அல்லாமலும், சட்டநிரூபண சபையாரால் தீர்மான மூலமாக ஷை மசோதா அங்கீகரிக்கப்பட்டாலன்றி மற்றப்படி அந்த விளம்பரத்தை வெளிவிடக்கூடாது.

(2) மாற்றப்படுகிற அல்லது எடுத்துவிடப்படுகிற யாதொரு போர்டின் ஆஸ்தியையும் கடனையும் ட்ரான்ஸ்பர் செய்வதைக்குறித்தாகிலும் மற்றப்படி ஒருவகை செய்வதைக் குறித்தாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

போர்டில் இத்தனை மெம்பர்கள் இருக்கவேணடுமென்பதும் அது சட்டப்படி சேர்ந்த சபையாவதும்.

11. (1) யாதொரு போர்டில் ஒரு பிரெஸிடென்டும் இரண்டு பேருக்கு குறையாமலும் நாலு பேருக்கு மேற்படாமலும் பிரதேச கவர்ன்மெண்டார் நிச்சயிக்கக்கூடிய இதர கமிஷனர்களும் இருக்கவேண்டும்.

(2) ஒவ்வொரு போர்டும் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய பெயரால் சட்டப்படி சேர்ந்த ஒரு சபையாயிருப்பது மல்லாமல், அந்த போர்டார் இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரை உடையவர்களாயும் இருக்கவேண்டும்; மேலும். அந்தப் பெயரால் அவர்கள் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடரவும் பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்பெறவும் வேண்டும்.

கம்மிஷனாகளின் யோக்கிய தாம்சங்களும் அவர்களின் நியமனமும்.

12. (1) போர்டிலுள்ள கம்மிஷனர்கள் ஹிந்து மதத்தை அவலம்பிக்கும் நபர்களாயிருக்கவேண்டும்.

(2) ப்ரெஸிடென்டானவர்—

(a) ஐந்து வருஷத்துக்குக் குறையாமல் இங்கிலாந்தில் அல்லது அயர்லாந்தில் பாரிஸ்டராகவாவது ஸ்காத்லாந்திலுள்ள (Faculty of Advocates) பாகல்டி ஆவ் அட்வகேட்ஸ் என்னும் சங்கத்தைச் சேர்ந்த மெம்பராகவாவது இருக்க வேண்டும்; அல்லது,

(b) ஒரு ஸபார்டினேட் ஜட்ஜ் அல்லது ஸ்மால் காஸ் கோர்ட் ஜட்ஜின் உத்தியோகத்துக்கு குறையாத நீதி விவகார சம்பந்தமான உத்தியோகத்தை வகித்திருந்த நபராயிருக்கவேண்டும்; அல்லது,

(c) பத்து வருஷ காலத்துக்கு குறையாமல் ப்ளீடராய் (நியாயவாதியாய்) இருந்திருக்கும் நபராயிருக்கவேண்டும்.

(3) (1), (2) குறிப்பிட்ட உப்பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு போர்டின் பிரஸிடென்டும் இதர கம்மிஷனர்களும் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட வேண்டும்; மேலும், அவர்கள்-இந்த உத்தியோகம் வகிக்குற காலத்தில் இந்தியன் பினல் கோட் 21-வது பிரிவின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுவார்கள்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

கம்மிஷனர்களின் உத்தியோக கால அளவு.

13. (1) யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டைத் தவிர இதர கம்மிஷனர் ஒவ்வொருவரும் அவர் நியமிக்கப்பட்ட தேதி முதல் ஐந்து வருஷத்துக்கு உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

(2) ப்ரெஸிடென்டானவர் - தாம் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருஷத்துக்கு உத்தியோகம் வகிக்க அருஹராவார் :

ஆனுல், அவர் ப்ரெஸிடென்டாக நியமிக்கப்பட்ட தேதியில் கம்மிஷனராயிருந்தால், கம்மிஷனராக அவருடைய (உத்தியோககாலம் கழிகிறவரையில் மாத்திரமே அவர் ப்ரெஸிடென்டாக உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

(3) வேலையை விட்டுப்போகும் ப்ரெஸிடென்ட் அல்லது கம்மிஷனர் - மற்றப்படி யோக்கியதை பெற்றவராயிருந்தால், மறுபடியும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

கம்மிஷனர்களுக்குப் பிரதிபலன்.

14. (1) ஒவ்வொரு கம்மிஷனரும் - தம்முடைய உத்தியோகத்துக்குரிய கடமைகளைச் செய்வதில் தமது முழுகாலத்தையும் கவனத்தையும் செலுத்தவெண்டும்; மேலும், அவர் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதி பெருமல், வேறே யாதொரு தொழில், வர்த்தகம் அல்லது வியாபாரத்தில் பிரவர்த்திக்கவுங்கூடாது, யாதொரு பிரதேச அதிகார சபையின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு அபேட்சகராய் நிற்கவுங்கூடாது, அப்படிப்பட்ட மெம்பராக நியமிக்கப்படவுங் கூடாது, யாதொரு மதசம்பந்தமான இனுமின் ட்ரஸ்டியாயிருக்கவுங்கூடாது.

(2) ஒவ்வொரு கம்மிஷனரும் - போர்டாரின் நிதியிலிருந்து பிரதேச கவர்ன்மெண்டார் நிச்சயிக்கக்கூடிய சம்பளம் பெறவேண்டும்.

ஆனுல், அப்படிப்பட்ட சம்பளமானது - ப்ரெஸிடென்ட் விஷயத்தில் மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கும் வேறே யாதொரு கம்மிஷனர் விஷயத்தில் மாதம் ஒன்றுக்கு எண்ணூறு ரூபாய்க்கும் மேற்படக்கூடாது.

கம்மிஷனர்களை நீக்கிவிட கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரமும் அவர்களின் யோக்கியதைக் குறைவும்.

15. (1) பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு கமிஷனரை—

(a) யாதொரு குற்றத்தைச் செய்ததாக அவர் க்ரிமினல் கோர்ட்டாரால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்து, அந்தக் குற்றமானது துன்மார்க்கமான நடத்தையைக் காட்டுகிறதென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டாலும்,

(b) அவர் புத்தி ஸ்வாதீனமில்லாதவராய் விட்டாலும், செவிட்டு ஊமையாய் விட்டாலும், தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகத்தால் வருந்தினுலும்,

(c) அவர் தம்மைக் கடன் தீர்க்க வகையில்லாதவரென்றோ கடனிருக்கச் சக்தியற்றவரென்றோ தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்தப்படித் தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) லஞ்சம் வாங்கினதற்காகவாவது துர்நடத்தைக்காகவாவது வேறே போதுமான காரணத்துக்காகவாவது அவருடைய உத்தியோகத்திலிருந்து சிறிது காலத்துக்கு நீக்கி வைக்கலாம் அல்லது எடுத்துவிடலாம்.

(2) யாதொரு கம்மிஷனர் ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டால், அவர் உத்தியோகம் வகிப்பது நின்றுபோகும்.

போர்டின் சபைகளும்.

16. (1) ஒவ்வொரு போர்டுக்கும், வேலையை நடத்துவதற்காக பிரதேச கவர்ன்மெண்டார் நிச்சயிக்கக் கூடிய இடத்தில் ஒரு ஆபீஸ் இருக்க வேண்டும்.

(2) போர்டின் சபைகளில் போர்டின் ப்ரெஸிடெண்டாவது அவர் வராவிட்டால் நியமிக்கப்பட்ட வரிசையில் ஸீனியர் (கம்மிஷனர்களுக்குள் முதன்மையானவராயிருக்கும்) கம்மிஷனராவது அக்கிராசனம் வகிக்கவேண்டும்.

(3) குறைந்தது இரண்டு கம்மிஷனர்களாவது வந்திருந்தாலன்றி மற்றப்படி யாதொரு சபையில் எந்த வேலையும் நடத்தக் கூடாது.

(4) கம்மிஷனர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், போர்டாரின் ஆலோசனையிலிருக்கும் விஷயம் பெரும்பான்மையான வோட்டுகளினால் தீர்மானிக்கப்படும்; மேலும், வோட்டுகள் சமமாய்ப் பிரிந்திருந்தால், ப்ரெஸிடெண்டாவது அக்கிராசனம் வகிக்கும் ஸீனியர் மெம்பராவது இரண்டாவது அல்லது முடிக்கும் படியான வோட்கொடுக்க வேண்டும்.

போர்டின் உத்தியோகஸ்தர்களும் ஊழியக் காரர்களும், அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும்.

17. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு,—

(a) [1]போர்டார் - தங்களுடைய உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சங்கியையையும் உத்தியோகப்பெயர்களையும் தரங்களையும் சம்பளம் அல்லது வேறே பிரதி பலனைக்குறித்த திட்டங்களையும் அப்போதைக்கப் போது நிச்சயிக்கலாம்; மேலும்,

---

1 இதன் கீழ் நடவடிக்கை நடத்த முழு போர்டாரும் ஒன்று சேர்ந்து உட்காரவேண்டும்.

(போர்டாருடைய சகாயச சட்டம்-3)

(b) போர்டின் ப்ரெஸிடெண்டானவர் - அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிக்கவும் ட்ரான்ஸ்பர் செய்யவும் அதிகாரம் உடையவராவார்; மேலும் அவர்கள் விதிகளை மீறிநடந்தாலும் ஒழுங்குதவருக நடந்தாலும் அஜாக்கிரதையாயிருந்தாலும் வேலைக்குத் தகுதியற்றவர்களா யிருந்தாலும் வேலையை அசட்டை செய்தாலும் தகாதபடி நடந்துகொண்டாலும் வேறே போதுமான காரணத்துக்காகவாகிலும், ஷை ப்ரெஸிடெண்டானவர் - அவர்களுக்கு அபராதம் விதிக்கலாம், அவர்களை உத்தியோகத்தில் தாழ்த்தலாம், உத்தியோகத்திலிருந்து சிறிது காலத்துக்கு நீக்கி வைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

பொதுவாக போர்டாரின் அதிகாரங்களும் அலுவல்களும்.

18. இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கும் இந்த ஆக்டின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட அல்லது நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடாகக் கருதப்பட்ட யாதொரு ஏற்பாட்டின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு,—

(1) யாதொரு போர்டின் அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் இருக்கும் மதசம்பந்தமான சகல இனுங்களையும் பொதுவாய் மேல் விசாரணை செய்யும அதிகாரமானது அப்படிப்பட்ட போர்டாரிடத்தில் சங்கிரமிக்கும்; மேலும்,

(2) மடங்களும் கோயில்களும் சரியாய்ப் பராமரிக்கப்பட்டு வரும்படியும், மதசம்பந்தமான சகல இனுங்களும் சரியாய்ப் பரிபாலனம் செய்யப்பட்டு வரும்படியும், அவை எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அல்லது இருக்கின்றனவோ அந்தக்காரியங்களுக்கே கிரமமாய் உபயோகப்படும்படியும் பார்த்துக்கொள்ளும் பொருட்டு நியாயமாயும் அவசியமாயுமுள்ள சகல காரியங்களையும் போர்டார் செய்யலாம்.

[1]"விவரணம்:—மேல்விசாரணை செய்வது விஷயமாய்ப் பொதுவாக போர்டாருக்குள்ள அதிகாரங்களில், யாதொரு மடம் அல்லது கோயிலைச் சரியாய்ப் பராமரிப்பதை உத்தேசித்தோ யாதொரு மதசம்பந்தமான இனுமைப் பரிபாலனம் செய்வதை உத்தேசித்தோ அவர்கள் அவசியமாகக் கருதுகிற மத்தியகால உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரமும் அடங்கும்."

சகாயச் சட்டங்கள் செய்யபோர்டாருக்குள்ள அதிகாரம்

19. (1) போர்டார் - அடியிற்கண்ட விஷயங்களைக் குறித்து இந்த ஆக்டுக்காகிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்காகிலும் வேறே யாதொரு சட்டத்துக்காகிலும் பொருத்த மற்றவையாயிராத சகாயச்சட்டங்கள் செய்யலாம்:—

---

1 நிர்வாகம் கேவலமாயிருப்பதைக் குறித்த புகார்கள் உட்பட பல விஷயங்களை, போர்டார் தங்களுடைய பரிபாலன சம்பந்தமான வேலைப்பிரிவிலும் நீதிவிவகார சம்பந்தமான வேலைப் பிரிவிலும் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் விசாரணையிலிருக்கும் விஷயங்கள் முடிவாகப் பைசல்செய்யப்படுகிறவரையிலே, கோயில்கள் அல்லது மடங்களின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக அங்காமியான ஏற்பாடுகள் செய்யவேண்டியிருக்கிறது. மேலும், இது சம்பந்தமாய் 18-வது பிரிவின்படி நடவடிக்கையும் நடத்தவேண்டியிருக்கிறது. அந்தப் பிரிவின்படிபோர்டார் மேலேகண்ட விதமாய்ப் பிரவர்த்திக்கக்கூடுமென்பதை ஸ்பஷ்டமாக்கும் பொருட்டு, ஒரு விவரணத்தைச் சேர்க்கும்படி பிரேரேபித்திருக்கிறது.

இது சென்னப்பட்டணம் 1930-ம் வருஷத்து 4வது ஆக்ட்டினால் சேர்க்கப்பட்டது:—

இந்த ஆக்டு பிறப்பதற்கான காரணங்களும் ஹேதுக்களும்:

(a) போர்டின் ப்ரெஸிடெண்டுக்கும் கம்மிஷனர்களுக்குமாக அலுவல்களைப் பிரிப்பது ;

(b) சபைகளில் அல்லாமல் வேறே எந்த விதமாய் அவர்களுடைய தீர்மானத்தைக் கண்டறியவேண்டுமென்பது;

(c) போர்டின் சபைகளில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும் அந்த சபைகளில் வேலை நடந்தேறுவதும் ;

(d) போர்டின் அதிகாரங்களைக் கம்மிஷனர்களுக்குத் தனித்தனியாகவாவது கம்மிஷனர்கள் அடங்கிய கமிட்டிகளுக்காவது பிரித்துக்கொடுப்பது ;

(e) போர்டின் உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் ஜாமீன் ஏதாகிலும் சவதரிக்கவேண்டியிருந்தால் அந்த ஜாமீன் ;

(f) போர்டின் ஆபீசில் வைத்திருக்கவேண்டிய புஸ்தகங்களும் கணக்குகளும் ;

(g) போர்டார், கம்மிட்டிகள், ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் நிதிகளைப் பத்திரமாய்ப் பாதுகாப்பதும் வட்டிக்குப் போட்டு வைப்பதும் ;

(h) போர்டாருக்குக் கொடுத்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் இன்ன நமூனாப்படியும் இன்ன மாதிரியாயும் இருக்கவேண்டுமென்பது ;

(i) கம்மிட்டிகள், மதசம்பந்தமான இனுங்கள் ஆகிய இவைகளின் பட்ஜெட்டுகளில் (வரவு செலவு மதிப்புக் கணக்குகளில்) இன்ன விவரங்களைச் சேர்க்கவேண்டும் அல்லது அவைகளிலிருந்து இன்ன விவரங்களை விட்டுவிடவேண்டுமென்பது ;

(j) பொதுவாய் இந்த ஆக்டின்படிக்கான சகல நடவடிக்கைகளையும் வேலையையும் இன்னபடி நடத்தவேண்டுமென்பது.

(2) போர்டாரால் செய்யப்பட்ட யாதொரு சகாயச் சட்டமாவது அவர்கள் யாதொரு சகாயச்சட்டத்தை ரத்து செய்ததாவது மாற்றினதாவது - அது பொது ஜனங்கள் அபிப்பிராயம் கூறுவதற்காகப் பிரசுரிக்கப்பட்டு அதற்குப் பிறகு பிரதேச கவர்ன்மெண்டாரால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படுகிறவரையில் செலாவணியாகத் தொடங்காது.

(3) சகல சகாயச் சட்டங்களும் - கிரமமாய் ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்ட பிறகு போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரிக்கப்படவேண்டும்; அதன்மேல் அவை சட்டத்தைப்போல் செலாவணியாகும்.

3 ம் அத்தியாயம்.

தேவஸ்தான கம்மிட்டிகள்.

கம்மிட்டிகளை அமைப்பதும் மாற்றுவதும் எடுத்துவிடுவதும்

20. (1) பிரதேச கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக,—

(a) யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்காகவாகிலும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திலுள்ள யாதொரு வகை அல்லது வகைகளைச் சேர்ந்த ஸ்தாபனங்களுக்காகவாகிலும் ஒரு கம்மிட்டியை அமைக்கும்படி கட்டளை யிடலாம்;

(b) யாதொரு கம்மிட்டியில் இருக்கவேண்டிய மெம்பர்களின் சங்கியையையாவது அந்தக் கம்மிட்டியின் அதிகார வரம்பையாவது மாற்றலாம்;

(c) யாதொரு கம்மிட்டியை எடுத்துவிடலாம்:

ஆனால், அடியிற்கண்டபடி இருக்கவேண்டும் :—

(i) ஒரே கோயிலின் விஷயத்திலாவது அதற்குச் சம்பந்தப்பட்ட இனங்கள் விஷயத்திலாவது ஒன்றுக்கு மேற்பட்ட கம்மிட்டிகளுக்கு அதிகாரம் இருக்கக்கூடாது.

(ii) பிரதேச கவர்ன்மெண்டார் (b) குறிப்பிட்ட பகுதியின்படியாகிலும் (c) குறிப்பிட்ட பகுதியின்படியாகிலும் விளம்பரம் பிறப்பிப்பதற்கு முன்னே, தாங்கள் அந்தப்படி செய்ய உத்தேசிப்பதற்குள்ள காரணங்களைச் சம்பந்தப்பட்ட

போர்டார் அல்லது கம்மிட்டியாருக்குத் தெரிவித்து, உத்தே சித்தபடி ஏன் செய்யக் கூடாதென்பதற்குக் காரணம் காட் டும்படி ஷெ போர்டு அல்லது கம்மிட்டியாருக்கு நியாயமான கால அளவு ஏற்படுத்திக்கொடுத்து, அவர்கள் சொல்லும் எவையேனும் சமாதானங்களைப்பற்றியும் ஆட்சேபனைகளைப் பற்றியும் யோசிக்கவேண்டும்.

(2) மாற்றப்படுகிற அல்லது எடுத்துவிடப்படுகிற யாதொரு கம்மிட்டியின் ஆஸ்தியையும் கடனையும் ட்ரான்ஸ் பர் செய்வதைக் குறித்தாகிலும் மற்றப்படி ஒரு வகை செய் வதைக்குறித்தாகிலும் போர்டார் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

கம்மிட்டியில் இத்தனைபேர் இருக்க வேண்டுமென்பது

21. யாதொரு கம்மிட்டியில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் எத்தனை பேர் இருக்கவேண்டு மென்று பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ் கரிஷை செய்யப்படக் கூடுமோ அத்தனை பேர் இருக்கவேண்டும்; அந்த சங்கியையானது - ஆறுக்குக் குறையாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

புதிய கம்மிட்டியை அமைப்பது

22. 21-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, பிரதேச கவர்ன்மெண் டார் முதல் தடவையாகவாவது எடுத்து விடப் பட்டிருக்கும் ஒரு கம்மிட்டிக்குப் பர்த்தியாக வாவது ஒருகம்மிட்டியை அமைக்கும்படி கட்டளை யிட்டால், அந்தப் புதிய கமிட்டியிலுள்ள மெம்பர்கள் - ஒரு வருஷத்துக்கு மேற்படாமல், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய கால அளவுக்கு உத்தியோ கம் வகிக்கவேண்டும்; மேலும், அந்தக் கால அளவில் ஷெ

மெம்பர்கள் எல்லோரும் பிரதேசகவர்ன்மெண்டாரால்நியமிக்கப்படலாம்.

தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணங்களும் ஸர்க்கில்களும்

23. (1) மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் காரியத்துக்காக, பிரதேச கவர்ன்மெண்டார் - ஒவ்வொருகம்மிட்டிக்காகவும் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்தைப் பிரசித்தம் செய்ய வேண்டும்.

(2) யாதொரு கம்மிட்டியார் - போர்டாரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, அதற்குறிய தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்தை ஸர்க்கில்களாக (வட்டங்களாக)ப் பிரிக்கலாம்; மேலும், அவர்கள் - ஒவ்வொரு ஸர்க்கிலிலிருந்தும் தெரிந்தெடுக்கப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியையை நிச்சயிக்கலாம்.

தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா

24. (1) தெரிந்தெடுப்பவர்களின் ஒவ்வொரு விஸ்தீர்ணத்துக்காகவும் வோட் கொடுக்க யோக்கியதை பெற்றிருக்கும் நபர்களின் பெயர்கள் கண்டுள்ள தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்று - நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரியாலும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகவும் மூன்று வருஷத்துக்கு ஒரு முறை தயார்செய்து பிரசித்தம் செய்யப்படவேண்டும்.

(2) தெரிந்தெடுப்பவர்களின் யாதொரு விஸ்தீர்ணமானது ஸர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டிருந்தால், தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவைப் பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு ஸர்க்கிலுக்கும் ஒரு பாகத்தை ஏற்படுத்தவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி பிரசித்தம் செய்யப்படும் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் யாருடைய பெயர் இருக்கிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - அந்த ஜாபிதா

செலாவணியாய்க்கொண்டிருக்கிற வரையில், எலெக்ஷன் நடக்கும்போது வோட் கொடுக்க அர்ஹராவார்; மேலும், ஷை ஜாபிதாவில் யாருடைய பெயர் இல்லையோ அப்படிப் பட்ட எந்த நபரும் எலெக்ஷன் நடக்கும்போது வோட் கொடுக்கக்கூடாது.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஒரு முறை பிரசித்தம் செய்யப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவானது-தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா ஒன்று மறுபடியும் பிரசித்தம் செய்யப்படுகிறவரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும்.

தெரிந்தெடுப்பவர்களின்யோக்கியதாம்சங்களும்யோக்கியதைக் குறைவுகளும்

25. யாதொரு நபர் ஹிந்து மதத்தை அவலம்பிப்பவராகவும் 1-வது ஷெட்யூலைச் சேர்ந்த 1-ம் பாகத்தில் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீரணத்தைச் சேர்ந்த யாதொரு தெரிந்தெடுப்பவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள யோக்கியதாம்சங்களை உடையவராகவுமிருந்து 1-வது ஷெட்யூலைச் சேர்ந்த 2-ம் பாகத்தில் விவரிக்கப்பட்டுள்ள யோக்கியதைக் குறைவுகளில் எதற்கும் உட்பட்டவராயிராமலிருந்தால், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் ஷை விஸ்தீர்ணத்துக்குரிய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் தம்முடைய பெயரைச் சேர்க்கும்படிச்செய்ய அர்ஹராவார்.

அபேட்சகர்கள், மெம்பர்கள் ஆகிய இவர்களின் யோக்கியதைக் குறைவுகள்

26. (1) (a) சம்பந்தப்பட்ட தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்துக்குரிய ஜாபிதாவில் யாதொரு நபரின் பெயர் இராவிட்டாலும்,

(b) நேமகம் செய்யப்படும், தெரிந்தெடுக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் தேதியில் அவர்—

(i) புத்தி சுவாதீனமில்லாதவராயிருந்தாலும், செவிட்டு ஊமையாயிருந்தாலும், தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகத்தால் வருந்திக்கொண்டிருந்தாலும்,

(ii) கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அப்படி சக்தியற்றவரென்று விடுதலை பெருமலிருந்தாலும்,

(iii) ஏற்கனவே கம்மிட்டியில் மெம்பராயிருந்து, அவருடைய உத்தியோக கால அளவானது அவர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதோ நியமிக்கப்படுவதோ செலாவணியாகக் கூடியதாயிருப்பதற்கு முன்னே முடிவாகாமலிருந்தாலும்,

(iv) எந்தக் கோயில் விஷயமாய் அந்தக் கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்தக் கோயிலின் ட்ரஸ்டியாயிருந்தாலும், அந்தக் கோயிலைச் சேர்ந்த அல்லது அந்தக் கோயிலிலிருந்து யாதொரு வரும்படி அல்லது மேலாதாயம் பெற்றுவருகிற உத்தியோகஸ்தராயிருந்தாலும் ஊழியக்காரராயிருந்தாலும், அவர் - அந்தக் கம்மிட்டியின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது நியமிக்கப்படுவதற்கோ யோக்கியதையற்றவராவார்.

(2) யாதொரு நபருக்கு க்ரிமினல் கோர்ட்டாரால் தீவாந்தர சிட்சையாகிலும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்குக் காவல் தண்டனையாகிலும் விதிக்கப்பட்டிருந்தால் (அந்த தண்டனை ரத்து செய்யப்படாமலோ ஆறு மாதத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக் குறைக்கப்படாமலோ இருக்கிற பட்சத்திலே, அல்லது குற்றம் மன்னிக்கப்படாமல் இருக்கிற பட்சத்திலே), அவர் - அந்ததண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும்போதும் அல்லது ஷை தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அமுலுக்கு வராதபடி செய்யப்பட்

டிருந்தாலும் அப்படிப்பட்ட காலம் வரையிலும், அந்த தண்டனை முடிவான தேதிமுதல் ஐந்து வருஷ காலம் வரையிலும் யாதொரு கம்மிட்டியின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது நியமிக்கப்படுவதற்கோ யோக்கியதையற்றவராவார் :

ஆனல், அப்படிப்பட்ட தண்டனையினல் யோக்கியதைக் குறைவு ஏற்படமாட்டாதென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடலாம்.

(3) யாதொரு கம்மிட்டி மெம்பர்—

(a) அவருக்கு (2) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற தண்டனை யாதொரு கோர்ட்டாரால் விதிக்கப்பட்டாலும்,

(b) புத்தி சுவாதீனமில்லாதவராய்விட்டாலும், செவிட்டு ஊமையாய் விட்டாலும், தொத்திக்கொள்ளத்தக்க குஷ்டரோகத்தால் வருந்திக்கொண்டிருந்தாலும்,

(c) தம்மைக் கடன் தீர்க்க வகையில்லாதவரென்ருவது கடனிறுக்கச் சக்தியற்றவரென்ருவது தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும், அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) எந்தக் கோயிலின் விஷயமாய் அந்த கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்தக் கோயிலின் ட்ரஸ்டியாய் விட்டாலும், அந்தக் கோயிலைச் சேர்ந்த அல்லது அந்தக் கோயிலிலிருந்து யாதொரு வரும்படி அல்லது மேலாதாயம் பெற்றுவருகிற உத்தியோகஸ்தராய்விட்டாலும் ஊழியக்காரராய்விட்டாலும்,

(e) ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய் விட்டாலும், அல்லது

(f) தொடர்ச்சியாய் மூன்று மாதம் கம்மிட்டியின் சபைகளுக்கு வராமலிருந்தாலும், அல்லது அந்தக் கால அளவுக்குள் தொடர்ச்சியாய் மூன்று சபைகள் நடத்தப்படாவிட்டால் தொடர்ச்சியாய் நடந்த மூன்று சபைகளுக்கு வராமலிருந்தாலும், அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதினின்றும் நீங்கினவராவார் :

ஆனால், (a) குறிப்பிட்ட பகுதியில் கண்ட தண்டனையினால் யோக்கியதைக் குறைவு ஏற்படமாட்டாதென்றுபிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடலாம்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (f) அடையாளமிட்ட பகுதியின்படி ஒரு நபர் மெம்பராயிருப்பது நின்றுபோகும் பட்சத்தில், கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டானவர் அந்த சங்கதியைக் கம்மிட்டியாருக்கு அவர்களுடைய அடுத்த சபையில் தெரிவிப்பதுமல்லாமல், அதை ஷை நபருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கவும் வேண்டும். அந்த நபர் ப்ரெஸிடெண்டினால் தமக்கு ஷை சங்கதி தெரிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள் மறுபடியும் தம்மை மெம்பராக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டால், கம்மிட்டியார் அந்த விண்ணப்பம் வரப்பெற்றுக்கொண்ட பிறகு நடக்கும் அடுத்த சபையில் அவரை மறுபடியும் கம்மிட்டி மெம்பர் உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்ளலாம் :

ஆனால், ஒரு கம்மிட்டியின் மெம்பரை அவருடைய உத்தியோககாலத்துக்குள் மூன்று தடவைக்குமேல் அப்படி மறுபடியும் மெம்பராக்கக்கூடாது.

மெம்பர்களின் உத்தியோக கால அளவு

27. வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு கம்மிட்டியைச் சேர்ந்த ஒவ்வொரு மெம்பரும்-அவர் தெரிந்தெடுக்கப்பட்டதோ அல்லது நியமிக்கப்பட்டதோ நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசுரிக்கப்படுகிற தேதிமுதல் ஐந்து வருஷ காலம் வரையில் உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

ப்ரெஸிடென்டும் வைஸ் - ப்ரெஸிடென்டும்

28. (1) ஒவ்வொரு கம்மிட்டியாரும் தங்களுக்குள் ஒரு ப்ரெஸிடென்டையும் ஒரு வைஸ்-ப்ரெஸிடென்டையும் தெரிந்தெடுக்கவேண்டும்.

(2) யாதொரு ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ்- ப்ரெஸிடென்ட் தெரிந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷ காலத்துக்குள் ப்ரெஸிடென்டாகவோ வைஸ்-ப்ரெஸிடென்டாகவோ தாம் வகித்திருக்கும் உத்தியோகத்தை ராஜிநாமா செய்தாலும் கம்மிட்டி மெம்பராயிருப்பதனின்றும் நீங்கிவிட்டாலுமன்றி மற்றப்படி, அவர்-மேலேகண்ட மூன்று வருஷ காலம்வரையில் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(3) ப்ரெஸிடென்ட் உத்தியோகம் காலியாயிருந்தால், புதிய ப்ரெஸிடென்ட் உத்தியோகம் வகிக்கத் தொடங்குகிற வரையில் வைஸ்-ப்ரெஸிடென்டானவர் ப்ரெஸிடென்டுக்குரிய அலுவல்களைச் செய்துவரவேண்டும்.

ப்ரெஸிடென்டும் வைஸ்-ப்ரஸிடென்டும் கம்மிட்டிமெம்பர்களும்ராஜிநாமா செய்வது

29. (1) ப்ரெஸிடென்டல்லாத கம்மிட்டியின் வேறே யாதொரு மெம்பரும் யாதொரு வைஸ் ப்ரெஸிடென்டும் - ப்ரெஸிடென்டுக்கு எழுத்துமூலமாய் நோடீஸ்கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்; ப்ரெஸிடென்டானவர்-கமமிட்டிக்கு எழுத்

துமூலமாய் நோடீஸ்கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்.

(2) ஷை ராஜிநாமாவானது-ஒரு மெம்பரின் அல்லது வைஸ் - ப்ரெஸிடென்டின் விஷயத்தில் ப்ரெஸிடென்ட் ஷை நோடீஸை வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்தும, ப்ரெஸி டென்டின் விஷயத்தில் அது கம்மிட்டியார் முன் வைக்கப் படும் தேதியிலிருந்தும் அமுலுக்கு வரவேண்டும்.

காலி ஸ்தானங்கள் பூர்த்திசெய்வது

30. (1) கம்மிட்டியின் யாதொரு மெம்பர் உத்தியோகத்தில் காலி நேரிடுவதன்மேல், 22-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு புதிய மெம்பர் ஒருவரை அவருக்குமுன் இருந்தவர் எப்படி தெரிந்தெடுக்கப்பட்டாரோ அதே விதமாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடத்தப்பட்ட எலெக்ஷனில் எந்த மெம்பரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், மறுபடியும் எலெக்ஷன் நடத்தப்படவேண்டும்.

(3) அப்படி மறுபடியும் நடத்தப்பட்ட எலெக்ஷனில் எந்தமெம்பரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் அந்த காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு நபரை நியமிக்கலாம்.

(4) ப்ரெஸிடென்ட் உத்தியோகம் காலியாயிருந்து வைஸ்-ப்ரெஸிடென்ட் எவரும் இராவிட்டால், கம்மிட்டியிலுள்ள எந்த மூன்று மெம்பர்களாவது - மற்ற மெம்பர்களுக்கு பரிஷ்காரமாய் ஏழு தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக நியாயமான நோடிஸ் கொடுத்த பிறகு, ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக ஒரு சபை கூட்டலாம்.

(5) உத்தியோகத்தை விட்டுபோகும் யாதொரு மெம்பராகிலும் ப்ரெஸிடென்டாகிலும் வைஸ் - ப்ரெஸிடென்டாகிலும் - மற்றப்படி யோக்கியதையுள்ளவராயிருக்கிற பட்சத்திலே, மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவராவார்.

(6) [1]யாதொரு மெம்பரையோ ப்ரெஸிடென்டையோ அல்லது வைஸ் - ப்ரெஸிடென்டையோ தெரிந்தெடுப்பதையாகிலும் நியமிப்பதையாகிலும் நிர்ணயிக்கப்பட்டவிதமாய் அறிக்கையிட வேண்டும்.

கம்மிட்டியார் செய்யும் காரியமான து கிரமப்பிசகு காரணமாக சட்டசம்மதமற்றதாய் விடபாட்டாதென்பது

31. யாதொரு கம்மிட்டியாராவது அந்தக் கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாகவோ வைஸ்-ப்ரெஸிடென்டாகவோ அல்லது மெம்பராகவோ பிரவர்த்திக்கிற யாதொரு நபராவது செய்யும் எந்தக் காரியமும் - அந்தக் கம்மிட்டியை ஸ்தாபித்திருப்பதிலாயினும் அமைத்திருப்பதிலாயினும் குறைவு இருக்கிறதென்னும் ஹேதுவினால் மாத்திரமேயாகிலும், அந்தக் கமமிட்டியைச் சேர்ந்த யாதொருமெம்பர் அப்படிப்பட்ட உத்தியோகத்தில் இருப்பதற்கு யோக்கியதையற்றவராயிருந்தாரென்னும் காரணத்தினாலாகிலும் அப்படிப்பட்ட உத்தியோகத்தை வகிப்பது நின்றுபோய்விட்டதென்னும் காரணத்தினாலாகிலும், அப்படிப்பட்ட கம்மிட்டியின்

1 கம்மிட்டிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர், பிரசிடென்டு வைஸ் - பிரசிடெண்டு ஆகியவர்களுடைய தேர்தல் அல்லது நியமனம் இவைகள் போர்ட்ஸெய்ன்ட் ஜார்ஜ்கெஜட்டு கமிட்டி அதிகாரஞ் செல்லக்கூடிய ஜில்லா ஜில்லாக்களுடைய கெஜட்டுகளிலேயும் தெரியப்படுத்த வேண்டும்.

கமிட்டிமெம்பர்களை தேர்ந்தெடுக்கவேண்டியதற்கான விதிகள் 13-வது விதி.

ப்ரெஸிடென்ட் உத்தியோகமாவது வைஸ் - ப்ரெஸிடென்ட் உத்தியோகமாவது மெம்பர் உத்தியோகமாவது எவ்விதமாக வேனும் காலியாயிருக்கும் காலத்திலே அப்படிப்பட்டகாரியம் செய்யப்பட்டிருக்கிறதென்னும் ஹேதுவினாலாகிலும் சட்ட சம்மதமற்றதாய் விடுவதாக எண்ணப்படமாட்டாது.

கம்மிட்டி சட்டப்படி சேர்ந்த சபையாவது

32. ஒவ்வொரு கம்மிட்டியும் பிரதேச கவர்ன்மெண்டார் தீர்மானிக்கக்கூடிய பெயரால் சட்டப்படிக் குண்டான ஒரு சபையாயிருப்பதுமல்லாமல், அந்தக் கம்மிட்டியார் ஒருவருக்குப் பின் ஒருவராய் இடைவிடாமல் வந்துகொண்டு பொதுவான முத்திரை உடையவர்களாயும் இருக்கவேண்டும்; மேலும், அந்தப்பெயரால் அவர்கள் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடரவும் பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்பெறவும் வேண்டும்.

கம்மிட்டியின்உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அவர்களை நியமிப்பதும் தண்டிப்பதும்

33. (1) கம்மிட்டியார்-தங்களுடைய உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களின் சங்கியையையும் உத்தியோகப்பெயர்களையும்தரங்களையும் சம்பளம் அல்லது வேறே பிரதிபலனைக்குறித்த திட்டங்களையும் அப்போதைக்கப்போது நிச்சயிக்கலாம்.

(2) போர்டார் ஏற்படுத்தக்கூடிய மேல்விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு, கம்மிட்டியின் ப்ரெஸிடென்டானவர் - அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிக்கவும் டிரான்ஸ்பர் செய்யவும் அதிகாரம் உடையவராவார்; மேலும், அவர்கள் விதிகளை மீறி நடந்தாலும் ஒழுங்கு தவறாக நடந்தாலும் அஜாக்கிரதையாயிருந்தாலும் வேலைக்குத் தகுதியற்றவர்களாயிருந்தாலும் வேலையை அசட்டை செய்தாலும் தகாதபடி நடந்துகொண்டாலும்

வேறே போதுமான காரணத்துக்காகவாகிலும்; ஷ்ப்ரெஸிடென்டானவர் - அவர்களுக்கு அபராதம் விதிக்கலாம், அவர்களை உத்தியோகத்தில் தாழ்த்தலாம், உத்தியோகத்திலிருந்து சிறிதுகாலம் நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம், அல்லது தள்ளிவிடலாம்.

34. [1](1) யாதொரு கம்மிட்டியின் தீர்மானங்களை அதன் ப்ரெஸிடென்ட் நிறைவேற்றவேண்டும்; கம்மிட்டியின் நிர்வாக அதிகாரம் முழுவதும் - இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக் கன்றி மற்றப்படி அவரிடத்தில் சங்கிரமிக்கும்.

(2) (a) கம்மிட்டியின் தீர்மானங்களையெல்லாம் அவை ஜாரிசெய்யப்பட்ட பிறகு ஒரு வாரத்துக்குள் போர்டாருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(b) போர்டார் - அப்படிப்பட்ட கம்மிட்டியாரால் பிறப்பிக்கப்பட்ட அல்லது எழுதிவைக்கப்பட்ட யாதொரு உத்தரவாகிலும் நடவடிக்கைக் குறிப்பாகிலும் சரியாயிருக்கிறதா அல்லது ஒழுங்காயிருக்கிறதா அல்லது கிரமமாயிருக்கிறதா என்று தாங்கள் தெரிந்து திருப்தியடையும் காரியத்துக்காக, யாதொரு கம்மிட்டியாரை எந்த ரெகார்டையாவது நடவடிக்கைக் குறிப்பையாவது வேறே தஸ்தவேஜையாவது காகிதத்தையாவது அனுப்பும்படி கேட்கலாம்.[1]

(3) (a) கம்மிட்டியாரின் தீர்மானங்களில் எதையாகிலும் நிறைவேற்றுவதை நிறுத்திவைத்து அதைப் புனராலோசனை செய்வதற்காகக் கம்மிட்டியாருக்குத் திருப்பியனுப்ப போர்டாருக்கு அதிகாரம் உண்டு; இந்தப்படி செய்யும்போது போர்டார் அதற்குள்ள காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

---

1 சென்னப்பட்டணம் 1930 ஹூ திய 4-வது ஆக்டின்படி இது சேர்க்கப்பட்டது.

(b) [1]மேலேகண்டபடி புனராலோசனை செய்ததன் மேல் கம்மிட்டியார் ஷை தீர்மானங்களை ஊர்ஜ்ஜிதப்படுத்தினல், போர்டார் பாதிக்கப்பட்ட கோயிலின் நன்மையை உத்தேசித்தாவது கம்மிட்டியாரின் காரியங்களைச் சரியாய் நிர்வாகம் செய்வதை உத்தேசித்தாவது ஷை தீர்மானங்களை மாற்றுவதோ அல்லது ரத்துசெய்வதோ அவசியமாகுமென்று கருதும்போதெல்லாம், அவர்கள் அந்தப்படியே செய்யலாம்.

கம்மிட்டியாருக்குக்கோயில்கள் விஷயமாய்ப் பொதுவான மேல்விசாரணை அதிகாரம் உண்டென்பது

35. 18-வது பிரிவின்படி போர்டாருக்குள்ள அதிகாரங்களுக்கும் இந்த ஆக்டின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட அல்லது நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடாகக் கருதப்பட்ட யாதொரு ஏற்பாட்டின் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, ஒருகம்மிட்டியார் - எந்தக்கோயில்களுக்காக தாங்கள் ஏற்படுத்தப்படுகிருர்களோ அந்தக் கோயில்கள் விஷயமாகப் பொதுவாய் மேலவிசாரணை அதிகாரம் செலுத்த அர்ஹராவார்கள்.

35 - A. யாதொரு கம்மிட்டியார் இந்த ஆக்டின்படி அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கடமைகளைச் செய்யத் தவறிப் போயிருப்பதாக போர்டார் தெரிந்து திருப்தியடைந்தால், போர்டார் - அந்தக் கம்மிட்டியாருக்கு நியாயமான நோடிஸ் கொடுத்து அவர்கள் சொல்லிக்கொள்ளக்கூடிய எவையேனும் விஷயங்களைப் பற்றி ஆலோசித்த பிறகு, அப்

---

1 இப்பிரிவின் கீழ்வரும் விஷயங்களைக் கவனித்து முடிவுகூற இரண்டு கமிஷனர்களடங்கியகமிட்டியை பிரசிடெண்டு நியமிக்க வேண்டும். அக்கமிட்டியில் பாதிக்கப்பட்ட கோயிலோ இனுமோ உள்ள, ஜில்லாவின்மேல் அதிகாரமிருக்கும் கமிஷனர் ஒருவராயிருக்க வேண்டும்.

[போர்டாருடைய சகாயச்சட்டம் 4 (3-A)]

படிச் செய்யாமல் விடப்பட்டிருக்கும் ஷை கடமைகள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையாவது ஏற்றுக்கொண்டு செய்யலாம்; இந்தப்படிச் செய்வது விஷயமாய்ச் செலவுகள் எவையேனும் ஏற்பட்டால், அவைகளைச் சம்பந்தப்பட்ட கம்மிட்டியாரின் நிதியிலிருந்து கொடுக்கவேண்டும்.[1]

---

1 18-வது பிரிவின்படி, போர்டாருக்குப் பொதுவாய் மேல் விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால், தேவஸ்தான கம்மிட்டிகள் தவறாய் நடந்து கொண்டால் அந்தக் கம்மிட்டிகளின் நடவடிக்கைகளைக்குறித்து மேல்விசாரணை செய்யவோ அவைகளைத் திருத்தவோ போர்டாருக்கு அதிகாரம் கொடுப்பதற்காக ஸ்பஷ்டமான நிபந்தனைகள் எவையும் இல்லை. தேவஸ்தான கம்மிட்டிகளின் அங்கத்தினர்கள் கௌரவார்த்தமாய் உத்தியோகம் வகிப்பவர்கள். சில வேளைகளில் அவர்கள் போதுமான கவனம் செலுத்தாமலிருக்கலாம், அல்லது கட்சிப் பிளவுகளினால் அவர்களுடைய அபிப்பிராயங்கள் பாதிக்கப்படலாம். இது காரணமாக, தேவஸ்தான கமிட்டிகள் சரியான நடவடிக்கை நடத்தத் தவறிப்போகலாம். மேலும், அவைகளில் சிலசெய்திருக்கும் தீர்மானங்கள் ஒழுங்கீனமாயிருக்கின்றனவென்றும் அனுபவத்தில் ஏற்பட்டிருக்கிறது. கம்மிட்டிகள் சரியாய் வேலை செய்யும்படியும் அவை போர்டாருடன் ஒத்துழைக்கும்படியும் பார்த்துக்கொள்ளும் பொருட்டும் பல கம்மிட்டிகளின் காரியங்கள் ஒரே தோரணையை அனுசரித்திருக்கும்படிச் செய்யும்பொருட்டும், போர்டார் - அவைசெய்யும் தீர்மானங்களைத் திருத்த அல்லது ரத்துசெய்யக்கூடியவர்களாகவும், அவை செய்யத் தவறிப்போகும் காரியங்களைச் செய்யும்படி உத்தரவு பிறப்பிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். ஆகவே, 34-வது பிரிவை மாற்றி யெழுதுவதற்காகவும் 35-வது பிரிவைத் திருத்துவதற்காகவும் பிந்திய பிரிவுக்குப் பிறகு ஒரு புதிய பிரிவைச் சேர்ப்பதற்காகவும் உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் மிகவும் அவசியமானவையாகும்:—இது உண்டாவதற்கான ஹேதுக்களும் காரணங்களும்.

எனவே சென்னப்பட்டணம் 1930 ஷ் நிய 4-வது சட்டம் 3-வது பிரிவின்படி 35-A சேர்க்கப்பட்டது.

36. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல்விசாரணை அதிகாரத்துக்குட்பட்டு, யாதொரு கம்மிட்டியார்-அடியிற்கண்ட விஷயங்களைக்குறித்து இந்த ஆக்டிக்காகிலும் அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகள் அல்லது சகாயச்சட்டங்களுக்காகிலும் பொருத்தமற்றவைகளாயிராத ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம் :—

ரெகுலேஷன்கள் ஏற்படுத்த கம்மிட்டியாருக்குள்ள அதிகாரம்

(a) கம்மிட்டி சபைகூடும் காலமும், இடமும் ;

(b) அந்த சபைகளைப்பற்றி நோட்டிஸ் கொடுக்க வேண்டிய விதம் ;

(c) சபைகளில் வேலை நடந்தேறுவதற்கு இருக்க வேண்டிய க்வோரம்[1] ;

(d) சபைகளில் ஒழுங்கை பாதுகாப்பதும் நடவடிக்கைகளை நடத்துவதும், ப்ரெஸிடென்ட் தம்முடைய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகச் செலுத்தக்கூடிய அதிகாரங்களும் ;

(e) இன்ன விதமாய்ச் சபைகளின் நடவடிக்கைகளை எழுதிவைத்துப் பிரசித்தப்படுத்தவேண்டுமென்பது ;

(f) கம்மிட்டியின் ப்ரெஸிடென்டுக்கும் வைஸ்-ப்ரெஸிடென்டுக்கும் மெம்பர்களுக்குமாக அலுவல்களைப் பிரிப்பது ;

(g) கம்மிட்டியின் அல்லது அதன் ப்ரெஸிடென்டின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவல்களை—

(i) ப்ரெஸிடென்டுக்காவது வைஸ் - ப்ரெஸிடென்டுக்காவது யாதொரு மெம்பருக்காவது,

---

1 "க்வோரம்" என்பது-ஒரு சபையில் எத்தனை பேர் வந்திருந்தால் காரியம் நடத்தலாமோ அதைகுறிப்பதாகும்.

(ii) மெம்பர்கள் சேர்ந்த ஒரு ஸப் கம்மிட்டிக்காவது பிரித்துக்கொடுப்பது;

(h) கம்மிட்டியாரிடத்தில் செலுத்தப்பட்ட பணத்துக்காக ரசீதுகள் கொடுக்கூடிய நபர்கள்;

(i) மதசம்பந்தமான இனுங்களின் ட்ரஸ்டிகள் அனுப்பவேண்டிய கணக்குகளும் ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகளும் ரிபோர்ட்டுகளும்;

(j) சபைகளில் அல்லாமல் வேறே இன்ன விதமாய்க் கம்மிட்டியாரின் தீர்மானங்களைக் கண்டறியவேண்டுமென்பது;

(k) இவைகளைப்போன்ற சகலமான இதர விஷயங்களும்.

மடங்கள் அல்லது விலக்கப்பட்ட கோயில்களின்மேல் கம்மிட்டியார்விசாரணை அதிகாரம் செலுத்தக்கூடாதென்பது

37. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளின்படி ஏற்படுத்தப்பட்ட எந்த கம்மிட்டியாரும் - மடங்கள்[1] அல்லது விலக்கப்பட்ட கோயில்[2]கள் அல்லது அவைகளின் ட்ரஸ்டிகளின் மேல் எவ்வகையான விசாரணை அதிகாரமும் செலுத்த அர்ஹராகமாட்டார்கள்.

---

1 மடம்என்றால் என்னவென்று அறிய 8-வது பிரிவு 7-வது உட்பிரிவைக் காணவும்.

2 'விலக்கப்பட்ட கோயில்' என்னவென்று அறிய, 8-வது பிரிவு, 5-வது உட்பிரிவைக்காணவும்.

4-ம் அத்தியாயம்

பொதுவாய் மதசம்பந்தமான இனுங்கள்.

இனுங்களைக் குறித்த ரெஜிஸ்டர் தயார்செய்வது

38. (1) ஒவ்வொரு மடத்துக்காகவும் கோயிலுக்காகவும் போர்டார் ரெஜிஸ்டர் ஒன்று வைத்துவரவேண்டும்; அதில் பின் வரும் விஷயங்கள் கண்டிருக்கவேண்டும்:—

(a) இதற்குமுன் இருந்த ட்ரஸ்டிகள், இப்போதிருக்கும் ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் பெயர்களும், ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வருவது சம்பந்தமாக மாமூல் ஏதாவதிருந்தால் அதைக்குறித்த விவரங்களும்;

(b) மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த சகல இனுங்களையும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகலஉரிமை சாஸனங்களையும் இதர தஸ்தாவேஜுகளையும் குறித்த விவரங்கள்;

(c) பரிபாலன ஏற்பாட்டையும் திட்டம் அல்லது செலவு வீத நிர்ணயத்தையும் குறித்த விவரங்கள்;

(d) எந்த உத்தியோகங்களுக்கு யாதொரு சம்பளம், வரும்படி அல்லது மேலாதாயம் ஏற்படுத்தியிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல உத்தியோகங்களின் பெயர்களும், ஒவ்வொரு விஷயத்திலும் ஊழியத்தின் தன்மையும் காலஅளவும், அதுசம்பந்தமான திட்டங்களும்;

(e) பிரஸ்தாப ஸ்தாபனத்துக்குச் சொந்தமாயுள்ள நகைகளும், பொன்னும், வெள்ளியும், இரத்தினங்களும், சகல

பாத்திரங்களும் தட்டுமுட்டுகளும், இதர அசையும்பொருள்களும், அவைகளின் உத்தேச விலை மதிப்புடன்;

(f) போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய இதர விவரங்கள்.[1]

(2) மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாவது, அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டாவது - ஷை ரெஜிஸ்டரைத் தயார்செய்து சரிபார்த்து, அதில் கையெழுத்து போட்டு, அதை இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கின பிறகு போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கால அளவுக்குள் போர்டாருக்கு அனுப்பவேண்டும்;

ஆனல், எந்தக்கோயிலின்மேல் யாதொரு கம்மிட்டிக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்த கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டரை அந்தக் கம்மிட்டியார் மூலமாக அனுப்பவேண்டும். அவர்கள்-தங்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றக்கூடிய விசாரணை செய்த பிறகு, ரெஜிஸ்டரில் தங்களுக்கு தகுதியாகத் தோற்றும் மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்ருகிலும், அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்ருகிலும், சேர்க்கவேண்டுமென்ருகிலும் சிபாரிசு செய்யலாம்.

(3) யாதொரு ட்ரஸ்டியிடமிருந்து ரெஜிஸ்டரை வரப்பெற்றுக்கொண்ட பிறகு போர்டார்-தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் விசாரணை செய்து, என்ன மாறுதல்களைச் செய்ய வேண்டு மென்ருகிலும் என்ன அம்சங்களை விட்டுவிடவேண்டு மென்ருகிலும் சேர்க்கவேண்டுமென்ருகிலும் உத்தரவு செய்வது தகுதியாயிருக்குமென்று தங்களுக்கு தோற்றுகிறதோ அந்த மாறுதல்களைச் செய்தாகிலும் அம்சங்களை விட்டுவிட்டாகிலும் ஷை ரெஜிஸ்டரை அங்கீகரிக்கவேண்டுமென்று கட்டளையிடலாம்.

1 1-வது அநுபந்தத்தை பார்க்கவும்.

(4) போர்டாரால் அங்கீகரிக்கப்பட்டபடிக்குள்ள ரெஜிஸ்டரின் ஒரு பிரதியை ட்ரஸ்டிக்கும் சம்பந்தப்பட்ட கம்மிட்டி ஏதாகிலும் இருந்தால் அதற்கும் அனுப்பவேண்டும்.

ரெஜிஸ்டரை வருஷவாரியில் சரிபார்ப்பது

39. (1) ட்ரஸ்டியாவது, அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய ஏஜெண்டாவது - ரெஜிஸ்டரிலுள்ள பதிவுகளை வருஷாவருஷம் பரிசோதித்துப்பார்த்து, அதில் செய்யவேண்டியதாயிருக்கும் மாறுதல்களை அல்லது விட்டுவிடவேண்டியதாகவோ சேர்க்கவேண்டியதாகவோ இருக்கும் அம்சங்களைக் காட்டும் ஸ்டேட்மென்ட் ஒன்றில் உறுதிமொழி கூறி அதை போர்டாரின் அங்கீகாரத்துக்காக அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

(2) போர்டாரும் கம்மிட்டியார் எவர்களாவது இருந்தால் அவர்களும்-ஷ ஸ்டேட்மென்டை வரப்பெற்றுக்கொள்வதன்மேல், தங்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றுகிற விசாரணை சொய்யலாம்; மேலும், போர்டார் - ரெஜிஸ்டரில் இன்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்றோ அல்லது இன்ன அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்றோ அல்லது சேர்க்கவேண்டுமென்றோ உத்தரவுமூலமாய்க் கட்டளையிடலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான உத்தரவுக்கு நகல் ஒன்றை ட்ரஸ்டிக்கும் சம்பந்தப்பட்ட கம்மிட்டி ஏதாவதிருந்தால் அதன் ப்ரெஸிடென்டுக்கும் அனுப்பவேண்டும்; அதன்மேல், அவர்-தாம் வைத்துவரும் ரெஜிஸ்டரின் பிரதியில் போர்டாரால் உத்தரவு செய்யப்பட்ட மாறுதல்களைச் செய்யவேண்டும், அல்லது அம்சங்களை விட்டுவிடவேண்டும் அல்லது சேர்க்கவேண்டும்.

ட்ரஸ்டி ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பதும் அவருடைய அதிகாரங்களும்

40. (1) மதசம்பந்தமான ஒவ்வொரு இனுமின் ட்ரஸ்டியும்-ட்ரஸ்டில் கண்டிருக்கும் ஷரத்துகளையும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் மாமூலையும் தகுந்த யாதொரு அதிகாரி இது விஷயமாய்ப் பிறப்பிக்கக்கூடிய சட்டசம்மதமான சகல சட்டங்களைகளையும் அனுசரித்தும், சாதாரணவிவேகமுள்ள யாதொரு நபர் ஷை இனுமுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்கள், அந்த இனுமுக்குரிய நிதிகள் அல்லது சொத்துக்கள் தமக்குச் சொந்தமானவையாயிருந்தால் அவைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பிரவர்த்திப்பாரோ அவ்வளவு ஜாக்கிரதையாகவும் ஷை விஷயங்களைப் பரிபாலனம் செய்யவும் ஷை நிதிகளையும் சொத்துக்களையும் உபயோகிக்கவும் கடமைப்பட்டவராவார்.

(2) இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு ட்ரஸ்டியானவர் - மதசம்பந்தமான இனுமை முன் யோசனையுடனும் பிரயோசனகரமாகவும் நிர்வாகம் செய்வது சம்பந்தமாய் சகல அதிகாரங்களைச் செலுத்தவும், தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுவதற்கும் அவசியமாயுள்ள சகல காரியங்களைச் செய்யவும் அர்ஹராவார்.

மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டிக்கு குறிப்பிட்ட இனுங்களின் ட்ரஸ்டிகளின் மேலுள்ள அதிகாரம்

41. யாதொரு மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் குறிப்பிட்ட இனுங்களின் ட்ரஸ்டியானவர் - அந்த மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியின் பொதுவான மேற்பார்வைக்குட்பட்டு அந்த கைங்கரியம் அல்லது தருமம் செய்ய

வேண்டியதுமல்லாமல், அவரால் பிறப்பிக்கப்படும் சட்டசம்பந்தமான சகல உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவும் வேண்டும்.

பரம்பரையாய்எற்பட்ட ட்ரஸ்டிகள்

[1]42. (1) யாதொரு மதசம்மதமான இனுமின் பரம்பரையாய் ஏற்பட்ட ட்ரஸ்டி உத்தியோகத்தில் காலி நேரிட்டு, அந்த உத்தியோகத்துக்கு உரிமை வழியாக வருவது சம்பந்தமாய் விவாதம் ஏற்பட்டாலும்,

அப்படிப்பட்ட காலி ஸ்தானத்தை உடனே பூர்த்தி செய்யக்கூடாவிட்டாலும்,

பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் மைனரா யிருந்து (வயது வராதவராயிருந்து), ட்ரஸ்டியாகப் பிரவர்த்திக்கத்தகுதியுடையவரும் விருப்பமுடையவருமான சட்டப்பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட கார்டியன் (சம்ரட்சகர்) ஒருவர் அவருக்கு இராமற்போனுலும், அப்படிப்பட்ட கார்டியனைப் பிரவர்த்திக்க அர்ஹராயுள்ள நபர் இன்னுரென்பதைக் குறித்து விவாதம் ஏற்பட்டாலும்,

பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் புத்தி சுவாதீனமற்றவராயிருப்பது காரணமாகவோ வேறே விதமான தேக அசக்தம் காரணமாகவோ ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்யச் சக்தியில்லாதவராயிருந்தாலும்,

மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் விஷயத்தில் போர்டாரும், இதர கோயில்களின் விஷயத்தில் கம்மிட்டியாரும் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த

---

1 இப்பிரிவின் கீழ் விண்ணபஞ் செய்ய கோர்டு பீ ஸ்டாம்பு அணு பன்னிரண்டு—

(போர்டாருடைய தீர்மானம் III 24-2-1926).

இனுமின் ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு வேறொரு ட்ரஸ்டி உரிமைவழியாய் வருகிறவரையிலாவது அந்த ட்ரஸ்டியின் அசமர்த்ததை நீங்குகிறவரையிலாவது ஷை ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்யத் தகுந்த நபர் ஒருவரை நியமிக்கலாம்.

சென்னபட்டணம் 1902-ம்ஸூத்து 1-வது ஆக்ட்.

இந்த உட்பிரிவிலுள்ளதெதுவும் 1902-ம் ஸூத்து சென்னபட்டணம் கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்டில் கண்டதெதையும் பாதிப்பதாக எண்ணக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நபரை நியமிக்கும்போது, போர்டார் அல்லது கம்மிட்டியார் - மடங்கள் விஷயத்தில் சிஷ்யர்கள் எவராகிலும் இருந்தால் அவர்களுடைய சுதந்தரங்களையும், கோயில்களின் விஷயத்தில் உரிமைவழியாய் வருவதற்கு பாத்தியதை பெற்றிருக்கும் குடும்பத்தார் எவராகிலும் இருந்தால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சுதந்தரங்களையும் கிரமமாய்க் கவனிக்க வேண்டும்.

(3) அந்தப்படி நியமிக்கப்பட்ட நபர்-ஷை இனும் சம்பந்தமாக யாதொரு ட்ரஸ்டி செலுத்தக்கூடிய சகல அதிகாரங்களையும் செலுத்த அர்ஹராவார்.

கோயில்களின் ஊழியக்காரர்களை நியமிப்பதும் தண்டிப்பதும்

43. (1) யாதொரு கோயிலைச் சேர்ந்த அல்லது கோயிலிலிருந்து யாதொரு வரும்படி அல்லது மேலாதாயம் பெறுகிற சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும்-ட்ரஸ்டியின் மேல் விசாரணைக்கு உட்பட்டு அவருடைய உத்தரவுகளின்படி நடந்துகொள்ளவேண்டும்; மேலும், ட்ரஸ்டியா

னவர் - நம்பிக்கைத் துரோகம், திறமையின்மை, சட்டப்படிக் கான உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியாமற்போவது, அலுவலை அசட்டை செய்வது, துர்நடத்தை அல்லது போதுமான வேறே காரணத்துக்காக அவர்களில் எவருக்காகிலும் அபராதம் போடலாம், அல்லது அவரைச் சிறிது காலத்துக்கு வேலையிலிருந்து நீக்கிவைக்கலாம், எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம் :

ஆனால், பரம்பரையாய் ஏற்பட்ட குறித்த யாதொரு உத்தியோகத்தை வகிக்கும் அல்லது ஊழியத்தைச் செய்யும் நபரின் விஷயத்தில் அல்லது பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு உத்தியோகம் அல்லது ஊழியவர்க்கத்தின் விஷயத்திலும் 79-வது பிறிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும், பிரதேச கவர்ன்மெண்டார்-இந்த உட்பிரிவின்படி ட்ரஸ்டிக் குள்ள தண்டனை அதிகாரங்களை அவர் செலுத்துவது விஷயமாக உத்தரவு மூலமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதுமல்லாமல், அதைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மேல் விசாரணைக்கும் உட்படுத்தலாம்.

(2) விலக்கப்பட்ட யாதொரு கோயிலைத் தவிர வேறே யாதொரு கோயிலில் உத்தியோகம் வகிக்கும் யாதொரு நபராவது அந்தக் கோயிலின் யாதொரு ஊழியக்காரராவது(1)குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு ட்ரஸ்டியால் தண்டிக்கப்பட்டால், அந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர்-நிர்ணயிக்கப் படக்கூடிய காலத்துக்குள் கம்மிட்டியாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம் ; பரம்பரையாய் ஏற்பட்டிராத உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின் விஷயத்தில் கம்மிட்டியாரின் தீர்மானம் முடிவானதாகும்.

[1](3) விலக்கப்பட்ட யாதொரு கோயிலைத் தவிர வேறே யாதொரு கோயிலின் பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது-நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள், (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்து கொண்ட அப்பீலில் கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவின் மேல் போர்டாருக்கும் பின்னும் அப்பீல் செய்துகொள்ளலாம்; அதன்மேல், போர்டாரின் தீர்மானம் முடிவானதாகும்.

(4) விலக்கப்பட்ட கோயிலின் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது (1) குறிப்பிட்ட உட்பிரிவின் படி ட்ரஸ்டியால் தண்டிக்கப்பட்டால், அவர்-நிர்ணயிக்கப் படக்கூடிய காலத்துக்குள் போர்டாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்; அவர்கள் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

இனுமானது சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பாயிருக்கும்போது கைங்கரியம் செய்யும்படி நிர்ப்பந்திப்பது

44. யாதொரு கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட தருமத்தை யாவது கைங்கரியத்தையாவது நடத்துவதற்கான யாதொரு இனுமானது சொத்தின் மேல் ஏற்பட்ட பொறுப்பாக மாத்திரமேயிருந்து, அந்த தருமம் அல்லது கைங்கரியத்தைச் செய்ய உத்தரவாதியாயிருக்கும் நபர் அதைக் கிரமப்படி நடத்தத் தவறிப்போகும்

---

1 அப்பீல் தாகல் செய்யவேண்டிய காலம்:—

கம்மிட்டிக்கு அப்பீல் செய்வதாயிருந்தால் பிறந்த உத்திரவுகைக்குக் கிடைத்த ஒருமாதத்திற்குள்;

போர்டாருகக்கு அப்பீல் செய்வதாயிருந்தால் பிறந்த உத்திரவு கைக்குக் கிடைத்த இரண்டுமாதத்திற்குள்.

(ரூல் நெம்பர் 8)

கட்டண விகிதங்களுக்கு ஷெட்யூல் 2 பார்க்கவும்.

பட்சத்திலே, அந்தக் கோயிலின் ட்ரஸ்டியானவர்-மற்றப்படி அந்த தருமத்தையாகிலும் கைங்கரியத்தையாகிலும் நடத்து விப்பதற்குப் பிடித்த அல்லது வெகுசாய்ப் பிடிக்கூடிய செலவு களைத் தம்மிடம் செலுத்தும்படி பிரஸ்தாப இனம் எந்த சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பாயிருக்கிறதோ அந்த சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபரை கேட்கலாம். ட்ரஸ்டி கேட்கிறபடி அந்த நபர் தொகை செலுத்தத் தவறிபோகும் பட்சத்தில, கோர்ட்டார்-ட்ரஸ்டி விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், ஷை தொகையை வசூலிப்பதற்காக உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; மேலும் அந்த உத்தரவை, அது ஷை கோர்ட்டாரின் டிக்ரியாயிருந்தால் எப்படியோ அப்படியே நிறைவேற்றலாம்.

ஆனால், ஷை இனமானது எந்த சொத்தின்மேல் ஏற்பட்ட பொறுப்பாயிருக்கிறதோ அந்த சொத்தைத் தம் சுவாதீனத்தில் வைத்திருக்கும் நபர் அந்த தருமம் உல்லது கைங்கரியத்தை நடததுவதற்குச் சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபராயிராமலிருந்து, இந்தப்பிரிவில் சொல்லப்பட்ட தொகை (சொத்தை) சுவாதீனத்தில் வைத்திருக்கும் நபரிடமிருந்து வசூலிக்கப்படும்பட்சத்தில, கோர்ட்டார்-அந்த நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபரிடமிருந்து அந்தத் தொகையை வசூலிப்பதற்காக உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; மேலும் அந்த உத்தரவையும், அது ஷை கோர்ட்டாரின் டிக்ரியாயிருந்தால் எப்படியோ அப்படியே நிறைவேற்றலாம்.

யாதொரு கோயிலில் ஊழிய நிபந்தனையின்மேல் தேவதாசியின் கைப்பற்றிலிருந்து வரும் நிலங்கள் முதலியவைகளை ஊழியநிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்வது அல்லது விடுவிப்பது

44. A (1) (a) (i) யாதொரு கோயிலில் ஒரு தேவதாசி செய்யும் எந்த கைங்கரியத்துக்காகிலும் கொடுக்கும் பிரதிபலனானது கவர்ன்மெண்டாரால் அப்படிபட்ட கைங்கரியத்துக்காகவாகிலும் அந்த கைங்கரியத்துடன் சேர்த்தாகிலும் கொடுக்கப்பட்ட அல்லது முன்போலவே இருந்துவரும்படி விட்டுவைக்கப்பட்ட நிலங்களாக இருந்தால், பிரதேச கவர்ன்மெண்டார் - க்விட் ரெண்ட் விதித்து ஷை நிலங்களை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்திசெய்யவேண்டும்.

(ii) ஷை கைங்கரியத்துக்காகக் கொடுக்கும் பிரதிபலனானது மேலேகண்டபடி கொடுக்கப்பட்டோ அல்லது முன்போலவே இருந்துவரும்படி விட்டுவைக்கப்பட்டோ உள்ள நிலத்தீர்வை ஒப்படையாக இருந்தால், பிரதேச கவர்ன்மெண்டார் - அப்படிப்பட்ட தீர்வை ஒப்படையை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்திசெய்யவேணடும் :

ஆனால், இந்த உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்தப்படும் காலத்தில், எந்த நிலங்கள் விஷயமாய்த் தீர்வை ஒப்படை செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நிலங்கள் ஷை தேவதாசிக்கே சொந்தமா யிருந்தால், (i) குறிப்பிட்ட உட்பகுதியில் கண்ட மாதிரியாய் ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்து க்விட்ரெண்ட் விதிக்கவேண்டும் ;

(iii) ஷை கைங்கரியத்துக்காகக் கொடுக்கும் பிரதிபலனானது சிறிதுமட்டில் நிலங்களாகவும் சிறிதுமட்டில் நிலத்தீர்வை ஒப்படையாகவும் இருந்தால், (i) குறிப்பிட்ட உட்பகுதியில் கண்ட விதமாக நிலங்களையும், (ii) குறிப்பிட்ட உட்

பகுதியில் கண்ட விதமாக நிலத்தீர்வை ஒப்படையையும் ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்திசெய்யவேண்டும்;

விவரணம்—இந்தப் பகுதியின் காரியங்களுக்காக, (ii) அடையாளமிட்ட உட்பகுதியைச் சேர்ந்த விலக்கு நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட காலத்திலே பிரஸ்தாப நிலங்கள் ஷை தேவதாசிக்கே சொந்தமாயிராத சகல விஷயங்களிலும், கொடுக்கப்பட்ட தானமானது நிலத்தீர்வை ஒப்படையாயிருப்பதாகக் கருதப்படும்.

(b) ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்வது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் ஏற்படுத்தக்கூடிய விதிகளை அனுசரித்து (a) குறிப்பிட்ட பகுதியில் கண்டபடி ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்யப்படும்; மேலும், அந்தப்படி நிவர்த்திசெய்வதானது- பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய தேதி முதலும் தேதியிலிருந்தும் செலாவணியாகும்.

(2) ஷை கைங்கரியத்துக்காகக் கொடுக்கும் பிரதிபலனானது முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்கீழ் வராத நிலங்களாகவாவது நிலங்களின் மாசூலாகவாவது இருந்தால், பிரதேச கவர்ன்மெண்டார் - பிரஸ்தாப நிலங்களுக்காகிலும் மாசூலுக்காகிலும் செலுத்தப்படத்தக்க குத்தகைத் தொகையை நிச்சயிக்கும்படி கலெக்டருக்குக் கட்டளையிடவேண்டும். அதன்மேல், கலெக்டரானவர் - சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு நோடிஸ் கொடுத்த பிறகும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடியபடி விசாரணை செய்த பிறகும், உத்தரவு மூலமாய் ஷை குத்தகைத் தொகையை நிச்சயிக்கவேண்டும்; மேலும், அந்தப்படி

செய்கையில் அவர் அடியிற்கண்ட விஷயங்களைக் கிரமமாய்க் கவனிக்கவேண்டும்:—

(a) அதே கிராமத்திலாவது அக்கம்பக்கத்திலுள்ள கிராமங்களிலாவது அதே மாதிரியான விவரம் உள்ளதும் அதே மாதிரியான அனுகூலங்கள் பொருந்தியதுமான நிலங்களுக்குப் பாயக்காரி செலுத்தும் குத்தகைத்தொகை;

(b) ஷை நிலங்கள் விஷயமாய் தேவதாசி சீர்திருத்தங்கள் எவையேனும் செய்திருந்தால் அந்த சீர்திருத்தங்கள்;

மேலே கண்ட உத்தரவைச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்குத் தெரிவிக்கவேண்டியதுமல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தம் செய்யவும் வேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கலெக்டரால் நிஷ்கரிஷை செய்யப்படும் குத்தகைத்தொகையைக் குறித்து, மேலேகண்ட உட்பிரிவின்படி ஷை உத்தரவு பிரசித்தம் செய்யப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ரெவினியு போர்டாரிடத்தில் மனு கொடுத்து ஆட்சேபிக்கலாம்; ஆனால், அப்படிப்பட்ட மனுவின்மேல் செய்யப்படும் முடிவுக்குட்பட்டு, (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி குத்தகைத்தொகையை நிஷ்கரிஷை செய்து கலெக்டரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது முடிவானதாகும்; மேலும், அது எந்த நியாயஸ்தலத்திலும் ஆட்சேபிக்கப்படுவதற்கு உள்ளாகாது:

ஆனால், ஷை மூன்றுமாத கால அளவு கழிந்த பிறகு கொடுத்துக்கொள்ளப்படும் மனுவை ஏற்றுக்கொள்ள போதுமான காரணங்கள் இருந்தால், அந்தப்படியே ஏற்றுக்கொள்ள ரெவினியு போர்டாருக்கு அதிகாரம் உண்டு.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி குத்தகைத்தொகையை நிச்சயிக்கும்போது, கலெக்டரானவர் அந்த உத்த

ரவு இன்ன தேதிமுதல் செலாவணியாகவேண்டுமென்று ஒரு தேதியை நிஷ்கரிஷை செய்யவேண்டும்; மேலும், இந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதி முதலும் தேதியிலிருந்தும் ஷை நிலங்கள் அல்லது மாசூலானது ஊழிய நிபந்தனையினின்றும் விடுவிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(5) யாதொருநிலம் கொடுக்கப்பட்டிருப்பது காரணமாகவாவது, நிலத்தீர்வை ஒப்படை செய்யப்பட்டிருப்பது காரணமாகவாவது, நிலத்திலிருந்து கிடைக்கும் மாசூல் காரணமாகவாவது எந்த தேவதாசியாயினும் யாதொரு கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட ஏதேனும் கைங்கரியத்தைசெய்ய உட்பட்டிருந்தால், ஷை நிலமாயினும், தீர்வை ஒப்படையாயினும், மாசூலாயினும், இதில் முன்னே சொல்லியிருக்கிற விதமாக சந்தர்ப்பத்திற்கேற்றபடி ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்திசெய்யப்படுவதின் மேல் அல்லது விடுவிக்கப்படுவதின் மேல் மேலேகண்டபடி கைங்கரியம்செய்வது விஷயமாய் ஏற்பட்டுள்ள எந்தக்கடமையையும் நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது.

(6) சந்தர்ப்பத்துக் கேத்தபடி ஷை நிலத்தையாவது நிலத்தீர்வை ஒப்படையையாவது நிலத்திலிருந்து கிடைக்கும் மாசூலையாவது அனுபவிப்பதற்குள்ள உரிமைக்கு சம்பந்தப்பட்ட யாதொரு வியாஜ்ஜியதலைதயாவது பரிசீலனை செய்வதற்கு, 1, 2, 3, குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவும் தடையாயிருக்கக்கூடாது.

(7) (a) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விதிக்கப்படும் குட்ரென்டானது சம்பந்தப்பட்ட கோயிலுக்குச் செலுத்தப்படத் தக்கதாகும்.

(b) சந்தர்ப்பத்துக் கேற்றபடி (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி

செய்யப்பட்ட நிலத்தீர்வை ஒப்படையாவது, (2) (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளின் பிரகாரம் நிஷ்கரிஷை செய்யப்பட்ட குத்தகைத்தொகையாவது—சம்பந்தப்பட்ட தேவதாசியின் ஜீவியகாலத்தில் அந்த தேவதாசியினிடத்திலும் அந்த தேவதாசியின் மரணதிற்குப்பிறகுச் சம்பந்தப்பட்ட கோயிலுக்கு செலுத்தப்பட்டதாகும்.

(8) இந்தப்பிரிவின் காரியத்துக்காக "தேவதாசி"[1] என்பது—யாதொரு கோயிலுக்கு அர்ப்பணம் செய்யப்படும் விவாகமாகாத யாதொரு ஹிந்துஸ்திரீ யென்று அர்த்தமாகும்.

---

1 இளம்பெண்களை ஹிந்து கோயில்களுக்கு அர்ப்பணம் செய்யும் பொட்டுக் கட்டு முறையானது அது மேன்மையான எண்ணத்துடனும் மிக உயர்ந்த உத்தேசத்துடனும் வெகுவாய் ஆரம்பிக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அம்முறை இப்பொழுது சீர்கெட்டு மிகவும் ஆட்சேபனைக் கிடமானதாயி விட்டிருக்கிறது. மேலும், இந்தப் பெண்களில், பெரும்பாலோர் விபசாரவாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது பொதுஜனங்களுக்கு நன்றாய் தெரிந்தவிஷயமே. ஆகவே, தனி நபர்களின் நன்மையையும் பொதுவாக தேசத்தாரின் நன்மையையும் உத்தேசித்து, புருஷர்கள் ஸ்திரீகள் ஆகிய இருவர்களிடத்திலும் தீயஒழுக்கம் (வருண) சங்கரம், பொறுப்பின்மை ஆகிய இவைகளை உண்டாக்குவதாயுள்ள அர்ப்பணம் செய்வதென்னும் மேற்படி வழக்கத்துக்கு நம் கோயில் அதிகாரிகள் அநுமதி கொடுப்பதை நிறுத்திவிடுவதும், அந்தப்படி நிறுத்தி, புருஷனிடத்திலாகிலும் ஸ்திரீயினிடத்தாகிலும் தீயவொழுக்கத்தை நம்முடைய மதம் ஆதரிக்கிறதென்றும், இந்த ஸ்திரீகள் செய்யும் கைங்கரியங்கள் எவ்விதமாகவேணும் கோயில்களில் நடக்கும் பூஜையின் முக்கிய பாகமாகுமென்றும் பொதுஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபிப்ராயத்தை ஒழிப்பதும் அவசியமாயிருக்கிறது:—ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டியின் குறிப்பு.

கணக்குகள் வைத்துவருவதும் ஆடிட்டர்களை நியமிப்பதும்

45. (1) யாதொரு போர்டாரும் கம்மிட்டியாரும் மதசம்பந்தமான யாதொரு இனமின் ட்ரஸ்டியும் - வரவு செலவுகளுக்கு ஒழுங்காய்க் கணக்குகள் வைத்துவர வேண்டும்.

(2) அந்தக் கணக்குகளைப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கபபட்ட ஆடிட்டர்கள் (தணிக்கை உத்தியோகஸ்தர்கள்) வருஷாவருஷமாகிலும் மற்றப்படி நிர்ணயிக்கப் படக்கூடிய காலம் விட்டுவிட்டாகிலும் தணிக்கை செய்ய வேண்டும். அந்தப்படி நியமிக்கப்பட்ட ஆடிட்டர்கள் - இந்தியன் பினல் கோட் 21-வது பிரிவின் தாத்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுவார்கள்.

தணிக்கைரிப்போட் அனுப்புவது

46. தணிக்கை வேலை முடிந்த பிறகு, ஆடிட்டரானவர்—

(a) யாதொரு போர்டின் கணக்குகள் விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாருக்கும்,

(b) யாதொரு கம்மிட்டி, மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் விஷயத்தில் போர்டாருக்கும்,

(c) எந்தக் கோயில்களின்மேல் கம்மிட்டியாருக்கு விசாரணை அதிகாரம் இருக்கிறதோ அந்தக் கோயில்களின் கணக்குகள் விஷயத்தில் கம்மிட்டியாருக்கும்,

ஒரு ரிபோர்ட் அனுப்பவேண்டும்.

தணிக்கைரிபோர்ட்டில் இன்ன விஷயங்கள் அடங்கியிருக்கவேண்டுமென்பது

47. (1) ஆடிட்டரின் ரிபோர்ட்டில் இதர விஷயங்களுடன்கூட, ஒழுங்கு பிசகாகவாவது சட்ட விரோதமாகவாவது அக்கிரமமாகவாவது பணச்செலவு செய்த சகலவிஷயங்களும், அல்லது பிரஸ்தாப ஸ்தாபனத்துக்குச் சேரவேண்டிய பணத்தொகைகளை அல்லது வேறேசொத்தை வசூலிக்கத் தவறிப்போன சகல விஷயங்களும், அல்லது அசட்டையாயிருந்ததனுலாகிலும் துர் நடத்தை காரணமாகவாகிலும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் பணம் அல்லது இதர சொத்து நஷ்டமாயிருக்கும் அல்லது சேதப்பட்டிருக்கும் சகல விஷயங்களும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(2) ஆடிட்டரானவர்-குறித்த யாதொரு மதசம்பந்தமான இனும் சம்பந்தமாய் போர்டார் அல்லது கம்மிட்டியார் கேட்கக் கூடிய வேறே யாதொரு விஷயத்தைப்பற்றிகூட ரிபோர்ட் செய்யவேண்டும்.

தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவை இனும் நிதியிலிருந்து வசூலிப்பது

48. (1) மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவு போர்டாரின் நிதியிலிருந்தும், இதர கோயில்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவு கமிட்டியின் நிதியிலிருந்தும் செலுத்தப்படவேண்டும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்துக்குள் ஷை தொகை செலுத்தப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மெண்டார் - அது நிலத்தீர்வை பாக்கியாய் இருந்தால் எப்படியோ அப்படியே அதை வசூலிக்கலாம்.

5-ம் அத்தியாயம்

கோயில்கள்

விலக்கப்பட்ட கோயில்களுக்கு இந்த அத்தியாயம் பிரயோகப்பட மாட்டாதென்பது

49. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் [1]விலக்கப்பட்ட கோயில்களுக்காவது அவைகளின் ட்ரஸ்டிகளுக்காவது பிரயோகப்படமாட்டா.

ட்ரஸ்டி ஹிந்துவாயிருக்கவேண்டுமென்பது

50. எந்த நபரும் - ஹிந்து மதத்தை அவலம்பிப்பவராயிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு கோயிலின் ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வரவுங்கூடாது, நியமிக்கப்படவுங் கூடாது.

பரம்பரையாய் ஏற்பட்டிராதட்ஸ்ரடிகளும் அவர்களின் சங்கியையும் அவர்களை நியமிப்பதும்

51. (1) (4) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு கோயிலுக்குப் பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகள் இத்தனை பேர் இருக்கவேண்டுமென்று கம்மிட்டியார் நிஷ்கரிஷை செய்யவேண்டும்; ஆனால், அந்த சங்கியையானது மூன்றுக்கு மேற்படக்கூடாது.

(2) பரம்பரையாய் ஏற்பட்டிராத டிரஸ்டிகளைக் கம்மிட்டியார் நியமிக்கவேண்டும்; மேலும், அந்தப்படி நியமிக்கும்போது, கம்மிட்டியார் - மதசம்பந்தமான எந்த வகுப்பாரின் பிரயோசனத்துக்காக சம்பந்தப்பட்ட கோயில் முக்கிய

1 "விலக்சப்பட்ட கோயில்" விலக்கத்திற்கு 8-வது பக்கம் பார்க்கவும்.

மாய்ப் பராமரிக்கப்பட்டு வருகிறதோ அந்த வகுப்பைச் சேர்ந்த நபர்களின் சுதந்தரங்களைக் கிரமமாய்க் கவனிக்க வேண்டும்.

(3) பரம்பரையாய் ஏற்பட்டிராத யாதொரு ட்ரஸ்டி யானவர் - அவரை நியமித்திருக்கும் உத்தரவின் தேதியி லிருந்து ஐந்து வருஷகாலத்துக்குள் கம்மிட்டியார் அவரை நீக்கிவிட்டாலும் தள்ளிவிட்டாலும், அல்லது அவருடைய ராஜிநாமாவை அவர்கள் அங்கீகரித்தாலும், அல்லது அவர் ட்ரஸ்டியாயிருப்பதனின்றும் வேறே விதமாய் நீங்கிவிட்டாலு மன்றி மற்றப்படி, மேலே கண்ட ஐந்துவருஷ காலம் வரை யில் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

(4) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் தேதியில் சட்டப்படி உத்தியோகம் வகித்துவரும் பரம்பரையாய் ஏற் பட்டிராத ஒவ்வொரு ட்ரஸ்டியும் - அந்தத்தேதியில் இந்த ஆக்டின்படி ட்ரஸ்டியாகக் கிரமமாய் நியமிக்கப்பட்டிருப்ப தாக எண்ணப்படுவார்; ஆனால், அவர் - அந்தத் தேதிமுதல் ஒரு வருஷகாலம் வரையில் மாத்திரமே உத்தியோகம் வகிக்க அர்ஹராவார்.

கம்மிட்டியாரின் உத்தரவுகளுக்கு ட்ரஸ்டி கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டு மென்பது

52. யாதொரு கோயிலின் ட்ரஸ்டியானவர் - இந்த ஆக் டில் கண்ட நிபந்தனைகளின்படி போர்டாரா லாகிலும் கம்மிட்டியாராலாகிலும் அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸி டென்டாலாகிலும் பிறப்பிக்கப்படும் சகல உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளக் கடமைப்பட்டவராவார்.

ட்ரஸ்டிகளை எடுத்து விடுவதும் தள்ளிவிடுவதும்

53. (1) யாதொரு கோயிலின் ட்ரஸ்டி யானவர்—

(a) [1]பட்ஜெட்டுகளையாவது கணக்குகளையாவது ரிபோர்ட்டுகளையாவது ரிடர்ன்களையாவது பிடிவாதமாய் அனுப்பாமலிருந்தாலும்,

(b) போர்டாராலாவது கம்மிட்டியாராலாவது அந்த போர்ட்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடெண்டாலாவது பிறப்பிக்கப்பட்ட சட்டப்படிக்கான உத்தரவுகளுக்கு வேண்டுமென்றே கீழ்ப்படியாமலிருந்தாலும்,

(c) ட்ரஸ்டுகள் விஷயமாய்ச் செய்யக்கூடாத யாதொரு காரியத்தைச் செய்தாலும், செய்யக்கூடிய யாதொரு காரியத்தைத் தகாத விதமாய்ச் செய்தாலும், நம்பிக்கைத் துரோகம் செய்தாலும், செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் அசட்டையாயிருந்தாலும்,

(d) எந்தக் கோயிலுக்குத் தாம் ட்ரஸ்டியாயிருக்கிறாரோ அந்தக் கோயிலுக்குரிய சொத்துக்களை எவ்விதமாக வேனும் அக்கிரமமாய் உபயோகித்துக்கொண்டாலும், தகாதபடி அவைகள் விஷயத்தில் பிரவர்த்தித்தாலும்,

(e) ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்வதற்கு அவரைத் தகுதியற்றவராக்கும்படி அவருக்குப் புத்தி சுவாதீனமிராமற்போனாலும் வேறே தேக அசக்தம் ஏற்பட்டாலும், கம்மிட்டியார் அவரைச் சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கலாம், அல்லது எடுத்துவிடலாம் அல்லது தள்ளிவிடலாம்.

(2) கம்மிட்டியார் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடவடிக்கை நடத்த உத்தேசித்தால், அவர்கள் சம்பந்தப்பட்ட ட்ரஸ்டியின்பேரில் சாட்டப்படும் குற்றங்களை எழுதி அவர் அவைகள் விஷயமாய்ச் சமாதானம் சொல்லிக்கொள்வதற்கும் தமக்கு விரோதமாயுள்ள சாட்சியத்தைப் பரீட்சை செய்வற்கும் தமக்கு அனுகூலமாய்ச் சாட்சியம் கொண்டுவருவ

---

1 வரவுசெலவு செயயும் உத்தேச யாதாஸ்து.

தற்கும் அவருக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்; மேலும், அவர்கள் - சாட்டப்பட்ட குற்றங்கள் பைசலாகிறவரையிலே அந்த ட்ரஸ்டியைச் சிறிது காலத்துக்கு வேலையிலிருந்து நீக்கி வைக்கலாம். அந்த ட்ரஸ்டியின்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களையும், அவர் சொல்லிக்கொள்ளும் சமாதானத்தை யும், ஒவ்வொரு குற்றத்தின் விஷயமாய்க் கம்மிட்டியாருடைய தீர்மானத்தையும் அதற்குள்ள காரணங்களையும் ஷை ட்ரஸ்டி யைச் சிறிது காலத்துக்கு நீக்கிவைப்பதற்கான, அல்லது எடுத்து விடுவதற்கான அல்லது தள்ளிவிடுவதற்கான உத்தர வில் கண்டெழுதவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி சிறிது காலத்துக்கு நீக்கி வைக்கப்பட்ட அல்லது எடுத்துவிடப்பட்ட அல்லது தள்ளி விடப்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் - அந்தப்படி சிறிது காலத்துக்கு நீக்கிவைத்த அல்லது எடுத்துவிட்ட அல்லது தள்ளிவிட்ட உத்தரவு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக அப்படிப்பட்ட உத்தரவின்மேல் போர்டாருக்கு 1அப்பீல்செய்துகொள்ளலாம்:

ஆனல், பரம்பரைராய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டி யானவர்-போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்வதற்குப் பர்த்தி யாக, கமிட்டியாரின் உத்தரவை மாற்றவேண்டுமென்ருவது ரத்துசெய்யவேண்டு மென்ருவது அதே கால அளவுக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கம்மிட்டியாரால் செய்யப் பட்ட உத்தரவானது - (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப் பீல் செய்துகொள்ளப்படாத பட்சத்திலாகிலும் விண்ணப்பம் செய்து கொள்ளப்படாத பட்சத்திலாகிலும் முடிவானதாகும்;

1 போர்டாருக்கு அப்பீல்செய்ய ஸ்டாம்பு ரூபா 25-0-0. இரண்டு கமிஷனர்கள்சேர்ந்து விசாரணை செய்யவேண்டும்.

மேலும், அந்தப்படி அப்பீல் செய்துகொள்ளப்படுகிற பட்சத்திலே, அல்லது விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிற பட்சத்திலே, சந்தர்ப்பத்துக்கேற்றபடி போர்டாரின் அல்லது கோர்ட்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

ட்ரஸ்டிகளின் யோக்கியதைக் குறைவுகள்

54. (1) [1]பரம்பரையாய் ஏற்பட்டிராத யாதொரு ட்ரஸ்டியானவர்—

(a) 26-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரிக்கப்பட்டு அதில் கண்ட விலக்கு நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிற தண்டனை அவருக்கு யாதொரு கோர்ட்டாரால் விதிக்கப்பட்டாலும்,

(b) கடன் தீர்க்க வகையில்லாதவரென்றோ கடனிருக்கச் சக்தியற்றவரென்றோ தம்மைத் தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்தப்படி தீர்மானிக்கப்பட்டாலும்,

(c) ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டாலும்,

அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்.

(2) பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் ஹிந்து மதத்தை அவலம்பிப்பது நின்றுபோய்விட்டால், அவர் தம்முடைய உத்தியோகத்தை வகிப்பதனின்றும் நீங்கினவராவார்.

(3) பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியிலாவது (b) அடையாளமிட்ட பகுதியிலாவது சொல்லி

[1] 9-ம் பக்கம் பார்க்கவும்.

யிருக்கிற யோக்கியதைக் குறைவுகளில் எதற்காகிலும் உள்ளாகும்பட்சத்தில், கம்மிட்டியார் - அவரை நீக்கிவிட்டு, ட்ரஸ்டியின் அசமர்த்ததை இராமற் போகிறவரையிலாகிலும் அந்த உத்தியோகத்துக்கு உரிமை வழியாய் வேறொரு ட்ரஸ்டி வருகிறவரையிலாகிலும், கோயிலைப் பரிபாலனம் செய்வதற்குத் தகுதியான ஒரு நபரை நியமிக்கலாம்.

[1](4) விவாதம் அல்லது சந்தேகம் ஏற்படுகிற விஷயங்களிலே, போர்டார் - இந்தப் பிரிவின்படி யாதொரு ட்ரஸ்டி தகுதியற்றவரா என்னும் விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

கோயில்களில் பரிமாண செலவுதிட்டங்களைநிஷ்கரிஷைசெய்வது

55. இந்த ஆக்டின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட அல்லது நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடாகக் கருதப்பட்ட யாதொரு ஏற்பாட்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு,—

(1) யாதொரு கோயிலின் ட்ரஸ்டியானவர்-அந்தக் கோயிலின் திட்டம் அல்லது செலவு வீதநிர்ணயத்தையும், அந்தக் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட வெவ்வேறு காரியங்களுக்காவது சடங்குகளுக்காவது பங்கீடு செய்யப்படவேண்டிய தொகைகளையும், அல்லது ஷை கோயிலின் வரும்படி அல்லது இதர சொத்தானது ஷை காரியங்களுக்காகிலும் சடங்குகளுக்காகிலும் எந்த சங்கியா பரிமாணங்களின்படி உபயோகிக்கப்படலாமோ அந்த சங்கியா பரிமாணங்களையும் நிஷ்கரிஷை செய்வதற்காக அப்போதைக்கப்போது கம்மிட்டியாருக்குப் பிரேரேபனைகள் அனுப்பலாம்.

(2) ட்ரஸ்டியானவர்-அந்த பிரேரேபனைகளைக் கோயிலிலும் கம்மிட்டியார் கட்டளையிடக்கூடிய வேறே மாதிரியாகவும் பிரசித்தம் செய்யவேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்

1 இதைப்பற்றி முகவுரையில் பார்க்கவும்.

யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் பற்றுள்ள யாதொரு நபரிடமிருந்து யாதொரு ஆட்சேபனை அல்லது ஆலோசனை வரப்பெற்றுக் கொள்ளப்பட்டால் கம்மிட்டியார் அந்த ஆட்சேபனை அல்லது ஆலோசனையைப்பற்றி யோசிப் பார்களென்று கண்டு ஒரு நோட்டீஸையும் ஷை பிரேரேபனைக ளுடன்கூட பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவு கழிந்துபோன பிறகு, கம்மிட்டி யார் வரப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய ஆட்சேபனை கள் அல்லது ஆலோசனைகளைப் பற்றி யோசித்து, ஷை பிரே ரேபனைகளின்மேல் தங்களுக்குத் தகுதியாய்த் தோற்றுகிற உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

(4) ஷை டிரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது- (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கம்மிட்டியாரால் செய்யப் பட்ட உத்தரவின் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அப்படிப்பட்ட உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம், அல்லது அதை மாற்றவோ ரத்துசெய் யவோ கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

மேலேகண்டபடி அப்பீல் செய்துகொள்ளப்பட்டாலும் மேலேகண்டபடி வியாஜ்ஜியம் தொடரப்பட்டாலும், போர் டார் அல்லது கோர்ட்டார் - அப்பீல் செய்யப்பட்டதைக் குறித்தாவது வியாஜ்ஜியம் தொடரப்பட்டதைக் குறித்தா வது பற்றுள்ள சகல நபர்களுக்கும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை அப்பீல் செய்துகொண்டவரின் அல்லது வாதியின் செல வில் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அப்படி கொடுப்பதை, போர் டார் அல்லது கோர்டார் ஒவ்வொரு விஷயத்திலும் கட்டளை யிடக்கூடியபடி நேரில் சேர்ப்பிப்பது மூலமாகவோ, நபர்களின்

சங்கியையை உத்தேசித்தாகிலும் வேறே யாதொரு காரணத்தினாலாகிலும் அந்தப்படி சேர்ப்பிப்பது நியாயமாய்ச் சாத்தியமாயிராவிட்டால் பஹிரங்கமான விளம்பர மூலமாகவோ கொடுக்கவேண்டும்.

(5) (4) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்ட அப்பீல் அல்லது வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு கம்மிட்டியாரின் உத்தரவு முடிவானதாகும். அப்பீலின்மேல் போர்டார் செய்யும் உத்தரவு முடிவானதாகும்.

(6) யாதொரு கோயிலில் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் திட்டம் அல்லது செலவு வீத நிர்ணயத்தை, இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற நடவடிக்கை முறையை அனுசரித்தன்றி மற்றப்படி டிரஸ்டி மாற்றக் கூடாது.

கோயில்களின் பட்ஜெட்டுகள்

56. (1) ஒவ்வொரு கோயிலின் டிரஸ்டியும் - ஒவ்வொரு வருஷத்திலும், அடுத்த வருஷத்திலும் ஷை கோயில், அதனுடன் சம்பந்தப்பட்ட இனுங்கள் ஆகிய இவைகளின் உத்தேசமான வரவு செலவுகளைக் காட்டும் பட்ஜெட் ஒன்றை போர்டார் உத்தரவு செய்யக்கூடிய தேதிக்கு முன்னும் நமூனுப்படியும் கம்மிட்டிக்கு அனுப்பவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்ஜெட்டிலும். அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் திட்டம் அல்லது செலவு வீத நிர்ணயத்துக்காகவும், கடன் விஷயமாயுள்ள சகல பொறுப்புகளையும் கிரமமாய் நிறைவேற்றுவதற்காகவும் போதுமானபடி ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

(3) பட்ஜெட்டை வரப்பெற்றுக்கொண்ட பிறகு போர்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலத்துக்குள் கம்மிட்டி

யார் - பட்ஜெட்டில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக் கூடிய மாறுதல்கள் செய்யவேண்டுமென்றாவது அம்சங்களை விட்டுவிடவேண்டுமென்றாவது சேர்க்கவேண்டுமென்றாவது டிரஸ்டிக்குக் கட்டளையிடலாம்.

[1](4) ட்ரஸ்டியானவர் - போர்டார் நிஷ்கரிஷை செய்யக் கூடிய காலத்துக்குள், (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கம்மிட்டியார் செய்த உத்தரவின்மேல் போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

விலக்கப்பட்டிராத கோயில்களுக்கு (ஸ்கீம்) ஏற்பாடுகள்

57. (1) யாதொரு கோயிலைச் சேர்ந்த இனங்கள் நன்றாய்ப் பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு பரிபாலன சம்பந்தமான (ஸ்கீம்) ஏற்பாடு ஒன்று நிஷ்கரிஷை செய்யப்படவேண்டுமென்று போர்டார் தெரிந்து திருப்தியடைந்தால், போர்டார் - ட்ரஸ்டியுடனும் கம்மிட்டி ஏதாவதிருந்தால் அதனுடனும் பற்றுள்ள நபர்களுடனும் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய்க் கலந்து ஆலோசித்த பிறகு, அந்தக் கோயிலைச் சேர்ந்த இனங்களுக்காக பரிபாலன சம்பந்தமான ஏற்பாடு ஒன்றை உத்தரவு மூலமாய் நிஷ்கரிஷை செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டை, போர்டார் - உத்தரவு மூலமாகவும் அந்த உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாகவும் மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி போர்டாரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசித்தப்படுத்தவேண்டும்.

---

1 போர்டாருக்கு அப்பீல் செய்ய கோர்டு ஸ்டாம்பு அணா 0-12-0.

ட்ரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது - மேலே கண்டபடி பிரசித்தஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், ஷை உத்தரவை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம். அப்படிப் பட்ட வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு, போர்டாரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் முடிவானதாவதுமல்லா மல், கம்மிட்டியாரையும் ட்ரஸ்டியையும் பற்றுள்ள சகல நபர் களையும் கட்டுப்படுத்துவதுமாகும்.

(4) இந்தப் பிரிவின்படி யாதொரு கோர்ட்டாரால் நிஷ்க ரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இந்த ஆக்டின்படி நிஷ் கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடாக 75-வது பிரிவின்படி கருதப்படுகிற பரிபாலனசம்பந்தமான யாதொரு ஏற்பாடா னது-போர்டாராலாகிலும் ட்ரஸ்டியாலாகிலும் பற்றுள்ள யாதொரு நபராலாகிலும் தொடரப்பட்ட யாதொரு வியாஜ்ஜி யத்திலே போதுமான காரணத்துக்காக எந்தக்காலத்திலாவது கோர்ட்டாரால் திருத்தப்படலாம் அல்லது ரத்துசெய்யப்பட லாமேயொழிய மற்றப்படி திருத்தப்படவுங்கூடாது ரத்து செய்யப்படவுங்கூடாது.

உத்தியோகம் வகிப்ப வர்களுக்குள் அல்லது ஊழியக் காரர்களுக்குள் ஏற்படும் காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வது

58. (1) யாதொரு கோயிலில் உத்தி யோகம் வகிப்பவர்களுக்குள்ளாவது கோயி லின் ஊழியக்காரர்களுக்குள்ளாவது ஏற்ப டும் காலி ஸ்தானங்களை அந்த உத்தியோக மாகிலும் ஊழியமாகிலும் பரம்பரையாய் ஏற்பட்டிராததாயிருக்கும் பட்சத்தில், ட்ர ஸ்டி பூர்த்தி செய்யவேண்டும்.

(2) ஷை உத்தியோகமாகிலும் ஊழியமாகிலும் பரம்ப ரையாய் ஏற்பட்டதாயிருக்கும் விஷயங்களில், உரிமை வழி யில் அடுத்தவராயிருப்பவர் அந்த உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு வர பாத்தியதை உடையவராவார்:

ஆனல், அப்படிப்பட்ட உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு உரிமை வழியாய் வரும் பாத்தியதையைக்குறித்து விவாதம் ஏற்படுகிற பட்சத்திலாவது, அப்படிப்பட்ட காலிஸ்தானத்தை உடனே பூர்த்திசெய்ய முடியாத விஷயங்களிலாவது, உரிமை வழியாய் வர அர்ஹராயிருக்கும் நபர் மைனராயிருந்து காரியனைப் பிரவர்த்திக்கத்தகுந்தவராகவும் விருப்பமுடையவராகவும் உள்ளவராய் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கார்டியன் ஒருவர் இராமலிருக்கும் விஷயங்களிலாவது, பரம்பரையாய் உத்தியோகம் வகிப்பவராவது பரம்பரையான ஊழியக்காரராவது புத்திசுவாதீனமற்றவராயிருப்பது காரணமாகவோ வேறே தேக அசக்தம் காரணமாகவோ அந்த உத்தியோகத்துக்குறிய அலுவல்களைச் செய்யவாயினும ஊழியத்தைச் செய்ய வாயினும் சக்தியற்றவராயிருக்கும் விஷயங்களிலாவது, டிரஸ்டியானவர் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த உத்தியோகம் அல்லது ஊழியத்துக்கு உரிமை வழியாய் வேறொரு நபர் வருகிற வரையிலாகிலும், ஷை உத்தியோகம் வகிப்பவரின் அல்லது ஊழியக்காரரின் அசமர்த்ததை நீங்கிப் போகிறவரையிலாகிலும் ஷை உத்தியோகத்துக்குறிய அலுவல்களை செய்யவோ ஊழியத்தைச் செய்யவோ தகுந்த நபர் ஒருவரை நியமிக்கலாம்.

(3). (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட விலக்கு நிபந்தனையின்படி யாதொரு நபரை நியமிக்கும்போது, டிரஸ்டியானவர்-உரிமை வழியாய் வர பாத்தியதையுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவராகிலும் இருந்தால் அவர்களுடைய சுதந்தரங்களைக் கிரமமாய்க் கவனிக்கவேண்டும்.

59. ஒவ்வொரு கோயிலின் ட்ரஸ்டியும் - தம்முடைய விசாரணையிலுள்ள கோயிலின் பரிபாலன சம்பந்தமாக, கம்மிட்டியார் அல்லது போர்டார் கேட்கக்கூடிய கணக்குகளையாவது ரிபோர்ட்டுகளையாவது இதர சமாசாரங்களையாவது அவர்கள் கேட்கக்கூடிய காலத்திலும் நமூனுப்படியும் சவதரிக்கவேண்டும்.

கம்மிட்டியாருக்காவது போர்டாருக்காவது ட்ரஸ்டிகள் கணக்குகள் முதலியவை சவதரிக்க வேண்டுமென்பது

60. கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாவது அவரால் இது விஷயத்துக்கென்றே நியமித்து அனுப்பப்பட்ட யாதொரு கம்மிட்டி மெம்பராவது - யாதொரு கோயிலுக்குச் சொந்தமாயிருக்கும் சகல அசையும் பொருளையும் அசையாப்பொருளையும், அந்தக் கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட சகல ரெகார்டுகளையும் கடிதங்களையும் (ப்ளான்களையும்) நக்ஷாக்களையும் கணக்குகளையும் இதர தஸ்தாவேஜுகளையும் பார்வையிடலாம்; மேலும், இந்தக்கோயிலின் ட்ரஸ்டியும் அவரிடத்தில் வேலையாயிருக்கும் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் அந்த ப்ரெஸிடென்ட் அல்லது மெம்பருக்கு அவசியமாயிருக்கக் கூடிய உதவி செய்யவேண்டும்.

ப்ரெஸிடென்டாவது மெம்பராவது இனுங்களைப் பார்வையிடுவது

60-A. (1) [1]யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்துக்காகவாவது யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திலுள்ள யாதொருவகை அல்லது வகைகளைச் சேர்ந்த ஸ்தாபனங்களுக்காகவாவது கம்மிட்டி ஒன்று அமைக்கப்படாமலிருந்தாலும் ஏற்படாதிருந்தாலும், போர்டும் அதன் ப்ரெஸிடென்டும் - இந்த ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, கம்

சிலவிஷயங்களில் போர்டார் யாதொருகம்மிட்டியின் உரிமைகளையும் அதிகாரங்களையும் செலுத்துவதும் கடமைகளை நிறைவேற்றுவதும்

---

1 கம்மிட்டிகள் வேலைசெய்யாத விஸ்தீரணங்களில் இருக்கும், விலக்கப்பட்டிராத கோவில்கள் விஷயமாய் கமிட்டியாருக்குள்ள

மிட்டி ஒன்று அமைக்கப்படுகிறவரையில் அல்லது ஏற்படுகிற வரையில், முறையே ஷை கம்மிட்டி, அதன் ப்ரெஸிடென்ட் ஆகிய இவர்களின் சகல அதிகாரங்களையுமாகிலும் அவைகளில் எதையாகிலும் செலுத்தலாம், சகல கடமைகளையாகிலும் அவைகளில் எதையாகிலும் நிறைவேற்றலாம்.

(2) யாதொரு கம்மிட்டியாரின் உத்தரவின்மேல் போர்டாருக்குச்செய்துகொள்ளும் அப்பீலுக்காவது யாதொரு கம்மிட்டியார் செய்யும் காரியங்களைப் போர்டார் அங்கீகரிப்பதற்காவது சம்பந்தப்பட்ட இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகள்-(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரவர்த்திக்கும் போர்டார் செய்யும் உத்தரவுகளுக்காகிலும் காரியங்களுக்காகிலும் பிரயோகப்படமாட்டார்.

அலுவல்களை போர்டார் செய்யக்கூடியவர்களாய் இருக்கும்படி செய்யும் காரியத்துக்காக இத்திருத்தம் செய்யப்படுகிறது. அநேக ஜில்லாக்களில் பலவிதகஷ்டங்களினால், முக்கியமாய் திரவிய சம்பந்தமான கஷ்டங்களினால் எலக்ஷன்களைக் காலதாமதமில்லாமல் நடத்துவது சாத்தியப்படாமலிருப்பதாகத் தோற்றுகிறது. மேலும் எந்த விஸ்தீரணங்களில் கமிட்டிகளுக்கு மெம்பர்களை நியமிப்பது அவசியமென்று தோற்றுகிறதோ அந்த விஸ்தீரணங்களின் விஷயத்தில் கூட கமிட்டிகளை மறுபடியும் அமைப்பதில், காலதாமதம் ஏற்படுவது சில சமயங்களில் தவிர்க்கமுடியாததா யிருக்கிறது. இதன்பயனாக ஒரு கமிட்டியின் காலஅளவு முடிந்து போவதற்கும், அதற்குப் பின் வரும் கமிட்டி வேலைசெய்ய தொடங்குவதற்கும் இடையில் விசேஷ காலம் ஏற்பட்டுவிடுகிறது. ஷை ஆக்டின்படி கம்மிட்டிகளிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் பற்பல கடமைகளை நிறைவேற்றுவதற்குக் கம்மிட்டிகள் இல்லாதபோது, அப்படிப்பட்ட விஸ்தீர்ணங்களிலுள்ள விலக்கப்பட்டிராத கோயில்களின் பரிபாலனத்துக்குச் சிறிதளவு பாதகமேற்படுகிறது. இப்போது செய்ய உத்தேசித்திருக்கும் திருத்தத்தின்படி, கம்மிட்டிகள் வேலை செய்யாத இடங்களில் போர்டார் தலையிட்டு, மேலே குறிப்பிட்டிருக்கும் கோயில்கள் சரியாய் பரிபாலிக்கப்படுவதற்கு அவசியமான காரியங்களைச் செய்வார்கள்:—

இது ஏற்படுவதற்கான காரணங்களும் ஹேதுக்களும்.

6-ம் அத்தியாயம

மடங்களும் விலக்கப்பட்ட கோயில்களும்

பட்ஜெட்டுகளையும் வருஷாந்தகணக்குகளையும் அனுப்புவது

61. ஒவ்வொரு மடத்தின் ட்ரஸ்டியும் விலக்கப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியும் ஒவ்வொரு வருஷத்திலும் போர்டார் உத்தரவு செய்யக்கூடிய தேதிக்கு முன்னும் நமூனுப்படியும்—

(a) அடுத்த வருஷத்தின் உத்தேச வரவுசெலவுகளைக் காட்டும் பட்ஜெட் ஒன்றையும்,

(b) முந்திய வருஷத்தின் வாஸ்தவமான வரவுசெலவுகளைக்காட்டும ஸ்டேட்மெண்ட் ஒன்றையும்
போர்டாருக்கு அனுப்பவேண்டும்.

ட்ரஸ்டிகள் சரிவரநிர்வாகம் செய்யாததைக் குறித்து போர்டார் விசாரணை செய்வது

62. யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலின் ட்ரஸ்டியானவர் அந்த மடம் அல்லது கோயிலைச்சேர்ந்த இனங்களைச் சரிவர நிர்வாகம் செய்து வரவில்லையென்ருகிலும், அக்கிரமமான காரியங்களுக்காக அவைகளைச் செலவழித்துக் கொண்டிருக்கிருரென்ருகிலும் பராதீனப் படுத்திக்கொண்டிருக்கிருரென்ருகிலும் போர்டார் நம்புவதற்கு முகாந்தரமிருந்தாலும், ஷை இனங்களைச் சரியாய் பரிபாலனம் செய்யும்பொருட்டு பரிபாலன ஏற்பாடு ஒன்று நிஷ்கரிஷை செய்யப்பட வேண்டுமென்று கண்டு பற்றுள்ள நபர்கள் இருபது பேருக்குக் குறையாமல் போர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொண்டாலும், போர்டார் விசாரணை நடத்தலாம்; அந்த விசாரணை நிர்ணயிக்கப் படக்கூடிய மாதிரியாய் நடத்தப்படவேண்டும்.

மடங்களுக்காகவும் விலக்கப்பட்ட கோயில்களுக்காகவும் ஏற்பாடுகள்

63. (1) 62-வது பிரிவில் கண்டபடி விசாரணை நடத்தின பிறகு, சம்பந்தப்பட்ட டிரஸ்டி ஷை மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த இனங்களைச் சரிவர நிர்வாகம் செய்துவரவில்லையென்றாவது, அவைகளை அக்கிரமமான காரியங்களுக்காகச் செலவழித்திக்கிறாரென்றாவது பராதீனப்படுத்தியிருக்கிறாரென்றாவது, ஷை இனங்கள் சரியாய்ப் பரிபாலனம் செய்யப்படும்பொருட்டு பரிபாலன ஏற்பாடு ஒன்று நிஷ்கரிஷை செய்யப்படவேண்டுமென்றாவது போர்டார் தெரிந்து திருப்தியடைந்தால், போர்டார் நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் ஷை ட்ரஸ்டியுடனும் பற்றுள்ள நபர்களுடனும் கலந்து ஆலோசித்த பிறகு, ஷை மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட இனங்களைப் பரிபாலனம் பண்ணுவதற்காக ஏற்பாடு ஒன்றை உத்தரவு மூலமாய் நிஷ்கரிஷை செய்யலாம்.

(2) யாதொரு மடத்துக்குச் சம்பந்தப்பட்ட இனங்களின் பரிபாலனத்துக்காக ஏற்பாடு ஒன்றை நிஷ்கரிஷை செய்யும்போது, அப்படிப்பட்ட இனங்களைப் பரிபாலனம் பண்ணும் காரியத்தில் யாதொரு நபரைச் சேர்ப்பதாகிலும் அந்தப் பரிபாலனத்தில் சம்பந்தப்படும்படியோ அல்லது அதற்கு உதவி செய்யும்படியோ யாதொரு பிரத்தியேகமான சபையை ஏற்படுத்துவதாகிலும் அவசியமென்று போர்டாருக்குத் தோற்றினால், அப்படிப்பட்ட நபர் ஷை மடத்தில் பற்றுள்ளவராயிருக்க வேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட சபையில் ஷை மடத்தில் பற்றுள்ள நபர்கள் மாத்திரமே இருக்கவும் வேண்டும்.

(3) போர்டார் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஒரு ஏற்பாட்டை எந்தக் காலத்திலாகிலும் உத்தரவுமூலமாகவும் அந்த உட்பிரிவில் நிபந்தனை

கண்டிருக்கிற விதமாகவும் மாற்றலாம் அல்லது ரத்து செய்ய லாம்.

(4) இந்தப் பிரிவின்படி போர்டார் செய்யும் ஒவ்வொரு உத்தரவும் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் பிரசித்தம் செய்யப்பட வேண்டும்.

டிரஸ்டியாவது பற்றுள்ள யாதொரு நபராவது - மேலே கண்டபடி பிரசித்தஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், ஷ உத்தரவை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

போர்டாரின் உத்தரவு முடிவானதாகுமென்பது

64. 63-வது பிரிவின்படி போர்டாரால் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவும் - அந்தப் பிரிவைச் சேர்ந்த (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தொடரப்படக்கூடிய யாதொரு வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு முடிவானதாகும்; மேலும் அது டிரஸ்டியையும் பற்றுள்ள சகல நபர்களையும் கட்டுப்படுத்துவதுமாகும்.

ஏற்பாடுகளைத் திருத்துவது அல்லது ரத்துசெய்வது

65. 63-வது பிரிவின்படி யாதொரு கோர்ட்டாரால் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிற அல்லது இந்த ஆக்டின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடாக 75-வது பிரிவின்படி கருதப்படுகிற பரிபாலன சம்பந்தமான யாதொரு ஏற்பாடானது போர்டாராலாகிலும் டிரஸ்டியாலாகிலும் பற்றுள்ள யாதொரு நபராலாகிலும் தொடரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில் போதுமான காரணத்துக்காக எந்தக்காலத்திலாவது கோர்ட்டாரால் திருத்தப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாமேயொழிய மற்றப்படி திருத்தப்படவுங்கூடாது ரத்துசெய்யப்படவுங்கூடாது.

7-ம் அத்தியாயம்

இனம் நிதியை உபயோகிப்பது

யாத்திரைக்காரர்கள், ஆராதனை செய்பவர்கள் ஆகிய இவர்களின் தேகாரோக்கியம் முதலியவைகளுக்காகப் பணம்செலவழிக்க ட்ரஸ்டிக்குள்ள அதிகாரம்

66. ஏதொரு மடம் அல்லது கோயிலின் டிரஸ்டியானவர் - அந்த மடம் அல்லது கோயிலுக்குப் போகும் சிஷ்யர்கள், யாத்திரைக்காரர்கள் அல்லது ஆராதனை செய்வர்களின் தேகாரோக்கியத்துக்காவது பந்தோபஸ்துக்காவது சௌகரியத்துக்காவது ஹானிஉண்டாகாதபடி காப்பதற்காக ஏற்பாடுகள் செய்ய, தம்முடைய விசாரணையிலிருக்கும் இனங்களைச்சேர்ந்த நிதியிலிருந்து அந்த இனங்கள் எந்தக் காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்டனவோ அந்தக் காரியங்களைப் போதுமானமட்டில் நிறைவேற்றின பிறகு செய்யலாம்.

ஆனால், மடங்கள், விலக்கப்பட்ட கோயில்கள் ஆகிய இவைகளின் விஷயத்திலே போர்டாரும், இதர கோயில்களின் விஷயத்திலே கம்மிட்டியாரும் - இந்தப் பிரிவின்படி டிரஸ்டி தமக்கு யுக்தமாகத் தோற்றும் காரியங்களைச் செய்யும் விஷயத்தில் நிர்ப்பந்தம் ஏற்படுத்தலாம்; மேலும், அவர்கள் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மேல்விசாரணைக்குட்பட்டு டிரஸ்டி அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும்படி ஏற்பாடு செய்யலாம்; அப்படி நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதற்கான அல்லது ஏற்பாடு செய்வதற்கான காரணங்களை எழுதிவைக்க வேண்டும்.

இனம் அல்லது மிகுதித் தொகையை 'ஸீப்ரே' கோட்பாட்டை அனுசரித்து (இனம் ஏற்படுத்தியதன்பிரதம உத்தேசத்துக்குக் கூடியமட்டில் பொருத்தமாக) உபயோகிப்பது

67. (1) நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாய் விசாரணை செய்தபிறகு போர்டார் - யாதொரு மதசம்பந்தமான இனம் எந்தக்காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்தக் காரியமானது ஆதியிலிருந்து நிறைவேற முடியாததாயிருந்திருக்கிறதென்றாவது பிற்பாடு நிறைவேற முடியாததாய்விட்ட தென்றாவது, ஷை இனம் பிரதமத்தில் எந்தக் காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்கான சாதனங்கள் தவறிப்போய் விட்டனவென்றாவது இராமற்போய்விட்டன வென்றாவது, ஷை இனம் எந்தக் காரியங்களுக்காக உத்தேசிக்கப்பட்டதோ அந்தக் காரியங்களைப் போதுமானமட்டில் நிறைவேற்றின பிறகும் ஷை மடம் அல்லது கோயிலுக்காகிலும் அதைச் சேர்ந்த இனங்களுக்காகிலும் சம்பந்தப்பட்ட கட்டிடங்களுக்கு மராமத்து செய்வதற்கும் அவைகளைப் புதுப்பிப்பதற்கும் போதுமான தொகையைப் பிரத்தியேகப்படுத்திவைத்த பிறகும் அந்தக் காரியங்களுக்கு வேண்டியிராத ஒரு தொகை மிகுதியாய் நிற்கிறதென்றாவது உத்தரவுமூலமாய் நிர்ணயிக்கலாம்; மேலும், அவர்கள் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி இனம் தொகையையாவது கிடைக்கக் கூடியதென்று நிர்ணயிக்கப்படுகிற மிகுதித் தொகையையாவது ஷை மடம் அல்லது கோயிலின் நோக்கங்களுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத மதசம்பந்தமான அல்லது வித்தியா சம்பந்தமான அல்லது தருமசம்பந்தமான காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டுமென்று ஷை உத்தரவு மூலமாய்க் கட்டளையிடலாம்:

ஆனால்,யாதொரு சமூகத்தாரால் ஏற்படுத்திப் பராமரித்து வரப்படும் யாதொரு கோயிலின் விஷயத்திலே, ஷை இனம் தொகையையாவது மிகுதித்தொகையையாவது, மேலே கண்ட காரியங்களினிமித்தம் அந்த சமூகத்தாரின் நன்மைக்காகக் கூடுமானமட்டில் உபயோகிக்கவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி உத்தரவு செய்யும்போது, ஷை இனம் தொகையில் அல்லது மிகுதித் தொகையில் எவ்வளவு பாகத்தை அந்த மடம் அல்லது கோயிலுக்குச் சேம நிதியாக நிறுத்திக்கொள்ளவெண்டுமென்று நிச்சயிக்கவும், மிகுதி நிற்பதை அந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட காரியங்களுக்கு உபயோகிக்கும்படி கட்டளையிடவும் போர்டாருக்கு அதிகாரம் உண்டு.

(3) போர்டார் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை எந்தக் காலத்திலாகிலும உத்தரவு மூலமாகவும் அந்த உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாகவும் மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி போர்டார்செய்யும் உத்தரவை நிர்ணயிக்கப்பட்ட விதமாய்ப் பிரசுரிக்கவேண்டும். ட்ரஸ்டியாவது பற்றுள்ள வேறே யாதொரு நபராவது-மேலேகண்டபடி பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள், ஷை உத்தரவை மாற்றவோ அல்லது ரத்துசெய்யவோ கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

ஷை வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு, போர்டாரின் உத்தரவானது-முடிவான தாவதுமல்லாமல், கம்மிட்டி ஏதாவதிருந்தால் அதையும் ட்ரஸ்டியையும் பற்றுள்ள சகல நபர்களையும் கட்டுப்படுத்துவதுமாகும்.

(5) இந்தப் பிரிவின்படி கோர்ட்டார் செய்யும் யாதொரு தீர்மானமானது-போர்டாராகிலும் ட்ரஸ்டியாலாகிலும் பற்றுள்ள யாதொரு நபராலாகிலும் தொடரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்தில் போதுமான காரணத்துக்காக எந்தக் காலத்திலாவது கோர்ட்டாரால் மாற்றப்படலாம் அல்லது ரத்துசெய்யப்படாலாமே யொழிய மற்றப்படி மாற்றப்படவுங்கூடாது ரத்துசெய்யப்படவுங்கூடாது.

8-ம் அத்தியாயம்

திரவிய விஷயம்

போர்டாராகிலும் கம்மிட்டியாராகிலும் சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளுக்காகச்செய்த செலவை இனமிலிருந்து வசூலிப்பது

68. யாதொரு மதசம்பந்தமான இனம் விஷயமாய் நடத்தப்பட்ட சட்ட சம்பந்தமான நடவடிக்கைகளில் போர்டாராகிலும் கம்மிட்டியாராகிலும் ஒரு கட்சியாயிருந்தால், அந்த நடவடிக்கைகள் சம்பந்தமாய் பிடித்த கோர்ட் செலவு முதலிய சகல செலவுகளும் - 74-வது பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அந்த இனம் நிதியிலிருந்து செலுத்தப்படத்தக்கவையாகும்.

போர்டுக்கும் கம்மிட்டிக்கும் இனங்களிலிருந்து வருஷவாரி சகாயத்தொகை கொடுத்துவருவது

69. (1) போர்டாருக்கு ஏற்படும் செலவுகளின் நிமித்தம் ஒவ்வொரு மடமும் கோயிலும் - அதன் வரும்படியில் நூற்றுக்கு ஒன்றரை வீதத்துக்கு மேற்படாமல் போர்டார் நிச்சயிக்கக்கூடிய சகாயத்தொகையைப் பிரதி வருஷமும் செலுத்திவரவேண்டும்.

(2) விலக்கப்பட்ட கோயிலல்லாத வேறே ஒவ்வொரு கோயிலும் - கம்மிட்டியாருக்கு ஏற்படும் செலவுகளின் நிமித்தம், அதன் வரும்படியில் நூற்றுக்கு ஒன்றரை வீதத்துக்கு மேற்படாமல் போர்டாரின் அங்கீகாரத்தைப் பெற்று கம்மிட்டியார் நிச்சயிக்கக்கூடிய சகாயத்தொகையைப் பிரதி வருஷமும் செலுத்திவரவேண்டும்.

(3) எந்த மதசம்பந்தமான இனங்களின் பரிபாலனமானது 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரோஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 92-வது பிரிவின்

படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறதோ அந்த மதசம்பந்தமான இனங்கள்-அப்படிப் பட்ட ஏற்பாட்டில் இதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்தப் பிரிவின்படி சகாயத்தொகை செலுத்துவதற்கு உட்பட்டவையாகும்.

[1]70 (1) 68-வது, 69-வது பிரிவிகளின்படி செலுத்தப்

---

1 ஷை ஆக்டின்படி போர்டாருக்கும் தேவஸ்தான கம்மிட்டிகளுக்கும் சேரவேண்டியிருக்கும் சகாயத்தொகை பாக்கிகளை வசூல் செய்ய ரெவினியுடிபார்ட்மென்டாருக்கு அதிகாரம் கொடுக்கும் காரியத்துக்காக இரண்டாவது திருத்தம் செய்யப்படுகிறது. ஷை ஆக்ட்டைச் சேர்ந்த இப்போதுள்ள 70-வது பிரிவில் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடானது அரைகுறையாயிருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. ட்ரஸ்டிகள் சகாயத்தொகைகளைச் செலுத்தத் தவறிப்போகும் சகல விஷயங்களிலும், போர்டாரும் கம்மிட்டியாரும் - மடங்களிலிருந்தும் கோயில்களிலிருந்தும் கேட்கப்படும் தொகைகளை வசூலிப்பதற்காக (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான மனுக்களை டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான மனுக்கள் விஷயமாய் சட்டசம்மதமான அனேக ஆவசியகங்களைப் பூர்த்திசெய்யவேண்டியிருக்கிறபடியால், இந்த முறையை அனுசரிப்பதனால் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், இந்த முறைப்படி வசூல் செய்வதற்கு போர்டாரும் கம்மிட்டிகளும் விசேஷமாய் செலவு செய்யவேண்டியுமிருக்கிறது. செலுத்தவேண்டிய தொகைகளைக் காலதாமதமில்லாமல் செலுத்தி வழக்காடுவதற்குப் பிடிக்கும் செலவுகளைச் செய்யாமல் இருப்பது உசிதமென்பதை அனேக ட்ரஸ்டிகள் உணர்ந்திருப்பதாகத் தோற்றவில்லை. ட்ரஸ்டிகளுக்குப் பிடிக்கும் செலவுகள் ஒருபுறமிருக்க, ஷை ஆக்ட் 68-வது, 75-வது பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடி, போர்டாருக்கும் கம்மிட்டிகளுக்கும் பிடிக்கும் சட்டசம்பந்தமான செலவுகளையுங்கூட ட்ரஸ்ட் நிதியிலிருந்து கடைசியாய்க் கொடுக்கவேண்டியிருக்கிறது. சம்பந்தப்பட்ட மதசம்பந்தமான ஸ்தாபனங்களின் நன்மையை உத்தேசித்து, அப்படிப்பட்ட

கோர்ட் செலவு முதலிய செலவுகளையும் சகாயத்தொகைகளையும் விதிப்பதும் வசூலிப்பதும்

படத்தக்க கோர்ட் செலவு முதலிய செலவுகளும் சகாயத்தொகைகளும் ஒவ்வொரு மடம், கோயில் ஆகிய இவைகளின் ட்ரஸ்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் விதிக்கப் படவேண்டியது மல்லாமல், அவருக்கு நோடீஸ் மூலமாய்த் தெரிவிக்கப்படவும்வேண்டும்;

செலவு செய்வினைத் தவிர்க்கவேண்டும்.

நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே சகாயத்தொகை பாக்கியை போர்டாரின் சார்பாகவும் கம்மிட்டிகளின் சார்பாகவும் வசூல் செய்ய ரெவினியு டிபார்ட்மென்டாருக்கு அதிகாரம் கொடுப்பதற்காக இப்போது செய்ய உத்தேசிக்கும் திருத்தத்தை அமுலுக்குக்கொண்டுவருவதனுல் ஷை சகாயத்தொகைகளைச் செலுத்துவதில் காலதாமதம் ஏற்படாமல் தடுக்கப்படுவதுடன், சகாயத்தொகைகள் கேட்கப்படுவதன்மேல் அவைகளைக் கொடுப்பதில் ட்ரஸ்டிகள் இப்போதிருப்பதைவிட இன்னும் அதிக ஆயத்தமாயிருப்பதற்கு அவர்களுக்கு வெகுசாய் தூண்டுதலும் ஏற்படக்கூடும். அந்தப்படிச் செய்யத் தவறிப்போகும் விஷயங்களில்கூட, ஸர்க்கார் தீர்வையை வசூல் செய்வதற்கான 1864-ம் ஹுத்திய சென்னபட்டணத்து ஆக்டில் விதிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைமுறை சுருக்க வகையானதா யிருக்கிறபடியால், சேரவேண்டியிருக்கும் தொகைகளை வசூலிப்பதில் காலதாமதம் எதுவும் ஏற்படாது. மேலும், போர்டாருக்கும் கம்மிட்டிகளுக்கும் திரவிய சம்பந்தமான அநிச்சயங்களினுல் நேரிடும் கஷ்டங்களும் அப்போது ஒழிந்துபோய்விடும். விஷயங்கள் இப்போது இருக்கிற நிலைமையில், போர்டார் தங்களுடைய பரிபாலனத்தை நடத்திக்கொண்டுபோகக்கூடியவர்களா யிருப்பதற்காக, கவர்ன்மென்டார் அவர்களுக்கு அவசர சந்தர்ப்பங்களில் முன்பணம் கொடுக்கவேண்டியிருந்திருக்கிறது. போர்டார் தங்களுக்குச் சேரவேண்டிய சகாயத்தொகைகளை ஏராளமாய் வசூலிக்கும்போது, கவர்ன்மென்டாரிடமிருந்து கடன் வாங்கும் அவசியம்போர்டாருக்கு ஏற்படாது. இப்போது செய்ய உத்தேசிக்கும் ஏற்பாட்டின்படி சகாயத்தொகைகளை ஏராளமாய் வசூலிப்பது சாத்தியமாயிருக்கும்:—

ஷை திருத்தங்கள் உண்டாவதற்கான காரணங்களும் ஹேதுக்களும்.

சகாயத்தொகையாவது சகாயத்தொகையின் யாதொரு பாகமாவது குறித்த ஒரு காரியத்துக்காக ஏற்படுத்தியிருக்கும் இனமிலிருந்து செலுத்தப்படவேண்டியிருந்தால், அந்த இனமின் ட்ரஸ்டிக்குக்கூட அது விதிக்கப்படவேண்டியதுமல்லாமல் அவருக்கும் நோடீஸ் மூலமாய்த் தெரிவிக்கப்படவும் வேண்டும்.

[1](2) (a) ஷை நோடிஸைத் தாம் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாவது போர்டார் அல்லது கம்மிட்டியார் கொடுக்கக்கூடிய பின்னும் காலத்துக்குள்ளாவது அப்படிப்பட்ட ட்ரஸ்டியானவர் - அந்தப்படி கேட்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட மடம் அல்லது கோயில் அல்லது இனமின் நிதியிலிருந்து சந்தர்ப்பத்துக்

பழைய பிரிவின் வாசகமாவது:—

1 ஷை நோடீஸ் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாவது போர்டார் அல்லது கம்மிட்டியார் கொடுக்கக்கூடிய பின்னும் காலத்துக்குள்ளாவது அப்படிப்பட்ட ட்ரஸ்டியானவர் - அந்தப்படி கேட்கப்பட்ட தொகையைச் சம்பந்தப்பட்ட மடம் அல்லது கோயிலின் நிதியிலிருந்து சந்தர்ப்பத்துக்கேற்றபடி போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டிடத்திலாகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரிடத்திலாகிலும் செலுத்தவேண்டும்; மேலும், அவர் அந்தப்படி செய்யத்தவறிப்போகும்பட்சத்தில், ஷை போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், கோர்ட்டார் - ஷைதொகைக்காக சம்பந்தப்பட்ட மதசம்பந்தமான இனமின்மேல் கோர்ட்டாரால் யாதொரு டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அந்தத்தொகையை வசூலிக்கவேண்டும்:

ஆனால், நியாயமான காரணமிருந்தால், கோர்ட்டார் - ஷை தொகை வசூலிப்பதைத் தள்ளிவைக்கலாம் அல்லது அதைத் தவணைகளாகச் செலுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

கேற்றபடி போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென் டிடத்திலாகிலும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரிடத்திலாகிலும் செலுத்தவேண்டும்; மேலும், அந்தப்படி செலுத்தத் தவறிப்போகும்பட்சத்தில், ஷை மடம் அல்லது கோயில் அல்லது இனுமைச் சேர்ந்த யாதொரு சொத்து எந்த ஜில்லாவில் இருக்கிறதோ அந்த ஜில்லாவின் கலெக்டரானவர் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் நிர்ணயிக்கப்பட்ட நமூனுப்படி தமக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலும், இந்தப் பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அந்தத் தொகையை வசூல் செய்யவேண்டும்; அன்றியும், அந்தப்படி வசூலிக்கப்பட்ட தொகையை, வசூலிப்பதற்கு பிடிக்கும் செலவுக்காக பிரதேச கவர்ன்மெண்டார் பொதுவான உத்தரவு மூலமாகவோ பிரத்தியேகமான உத்தரவு மூலமாகவோ அப்போதைக்கப்போது நிச்சயிக்கக்கூடிய நூற்றுக்கு இவ்வளவென்னும் வீதப்படி ஏற்படுவதை அதிலிருந்து கழித்துவிட்ட பிறகு, ஷை ப்ரெஸிடென்டுக்குச் செலுத்திவிடவேண்டும்.

(b) அடையாளமிட்ட பகுதியின்படி யாதொருவிண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்வதன்மேல், (a) கலெக்டரானவர் - சம்பந்தப்பட்ட ட்ரஸ்டிக்கு ஒரு நோடிஸ் கொடுத்து,—

(i) அந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள்ளாக விண்ணப்பத்தில் கண்டு நோடிஸில் குறிப்பிட்டிருக்கும் தொகையைச் செலுத்தும்படியாவது, அல்லது அந்தப்படி செய்வதற்கு அவருக்கு ஆட்சேபனைகள் எவையேனும் இருந்தால் அவைகளை எழுத்து மூலமாய்த் தெரிவிக்கும்படியாவது அவருக்கு உத்தரவு செய்ய வேண்டும்; மேலும்,

(ii) ஷை தொகையாவது, ட்ரஸ்டியின் ஆட்சேபனைகள் எவையேனும் இருந்தால் அவைகளைக் குறித்து ஆலொசனை செய்த பிறகு அவரிடமிருந்து சேரவேண்டியதாகத் தெரியவரும் தொகையாவது நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலிக்கப்படுமென்று தெரிவிக்க வேண்டும்.

(c) மேற்சொன்ன பதினைந்து தினக் கால அளவுக்குள் ட்ரஸ்டியினிடமிருந்து எழுத்து மூலமான ஆட்சேபனை எதுவும் கலெக்டரிடம் வந்து சேராவிட்டால், கலெக்டரானவர் - ஷை நோடிஸில் குறிப்பிட்டிருக்கும் தொகையை நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலிக்கத்தொடங்கவேண்டும்.

(d) ட்ரஸ்டியினிடமிருந்து அவருடைய பொறுப்பைக் குறித்தாவது நோடிஸில் குறிப்பிட்டிருக்கும் தொகையைக் குறித்ததாவது எழுத்து மூலமான ஆட்சேபனையொன்று மேற்சொன்ன கால அளவுக்குள் கலெக்டரிடம் வந்துசேர்ந்தால், கலெக்டரானவர் அந்த ஆட்சேபனையை போர்டின் ப்ரெஸிடென்டுக்கு அனுப்பிவிடவேண்டும்.

(e) போர்டின் ப்ரெஸிடென்டானவர் - அந்தப்படி அனுப்பப்பட்ட ஆட்சேபனையைக் குறித்து ஆலோசனை செய்து, பிரதமத்தில் செலுத்தும்படி கேட்கப்பட்ட தொகையை ஊர்ஜ்ஜிதம் செய்தோ வாபஸ்வாங்கிக்கொண்டோ திருத்தியோ தாம் செய்யும் தீர்மானத்தைக் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(f) பிறகு, கலெக்டரானவர்-அந்தப்படி தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தின்படி ட்ரஸ்டியினிடமிருந்து தொகை ஏதாகிலும் சேரவேண்டியதாயிருந்தால் அதை நிலவரி பாக்

கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலிக்கத் தொடங்க வேண்டும்.

(3). (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் வரப்பெற்றுக்கொள்வதன்மேல், கலெக்டரானவர்-அதில் கண்ட தொகையை, சம்பந்தப்பட்ட மடம் அல்லது கோயிலுக்குப் பிரதேச கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படத்தக்கதாயுள்ள தஸ்தீக் அல்லது இதர வர்த்தனையிலிருந்து பிடித்து, (2) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (b) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் பதினைந்துதினக் கால அளவு கழிந்து போன பிறகு ஷை தொகையையாவது அலலது ஷை உட்பிரிவைச் சேர்ந்த (d) அடையாளமிட்ட பகுதியின்படி ஆட்சேபனை வரப்பெற்றுக்கொள்ளப்படுகிற விஷயத்திலே, அந்த உட்பிரிவைச் சேர்ந்த (e) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் தீர்மானத்தின்படி தொகை ஏதாகிலும் சேரவேண்டியதாயிருந்தால் அந்தத் தொகையையாவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டினிடம் கொடுக்கலாம். ஷை தஸ்தீக்காவது இதர வர்த்தனையாவது இது காரியத்துக்குப் போதுமானதாயிராவிட்டால், கலெக்டரானவர் - கிடைக்கக்கூடிய தொகையை மேலே சொன்னபடி பிடித்துக் கொடுப்பதுமல்லாமல், மீதித்தொகையை நிலவரி பாக்கியிருந்தால் எப்படியோ அப்படியே வசூலும் செய்யலாம்.

(4) உற்சவங்கள் நடைபெறும் கோயில்கள், குளங்கள் ஆகிய இவைகள் உட்பட ஆராதனை செய்யும் இடங்களும், விக்கிரகங்களும் வாகனங்களும் நகைகளும், யாதொரு மடம் அல்லது கோயிலைச் சேர்ந்தவைகளாம். சம்பந்தப்பட்ட கோயில் அல்லது மடத்தின் ஆசாரத்தின்படி ஆராதனை செய்யும்

காரியங்களுக்காகவாவது சடங்கு சம்பந்தமான ஊர்வலங்களுக்காகவாவது அவசியமாயிருக்கும் பாத்திரங்கள் முதலிய வஸ்துக்களும் (2) (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளை அநுசரித்து அவைகளின்மேல் நடவடிக்கை நடத்தப்படுவதற்கு உள்ளாக மாட்டா.

(5) இந்தப்பிரிவை அனுசரித்து நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லதுசெய்ய உத்தேசிக்கப்பட்ட யாதொரு காரியத்துக்காக ஆலோசனைசபையிலிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரடரியவர்கள் மேலாவது கவர்ன்மெண்டைச்சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் மேலாவது வியாஜ்ஜியம், பிராது, அல்லது வேற சட்டப்படிக்கான நடவடிக்கை எதுவும் எந்தக் கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

9 ம் அத்தியாயம்,

பலவகைப்பட்டவை.

71. (1) பிரதேச கவர்ன்மென்டார்-இந்த ஆக்டிற்கண்ட சகல காரியங்களையுமாவது அவைகளில் எதையாவது நிறைவேற்றுவதற்காக இந்த ஆக்டுக்குப் பொருத்தமற்றவைகளாயிராத விதிகள் செய்யலாம்,

விதிகள் செய்யப் பிரதேச கவர்ன் மென்டாருக்குள்ள அதிகாரம்

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும், அடியிற்கண்ட விஷயங்களுக்காக விதிகள் செய்ய அவர்களுக்கு அதிகாரம் உண்டு:—

(a) நிர்ணயிக்கப்படவேண்டுமென்று இந்த ஆக்டில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிற அல்லது நிர்ணயிக்கப் படுவதற்கு இந்த ஆக்டில் வெளிப்படையாய் அனுமதி கொடுத்திருக்கிற சகல விஷயங்களும்;

(b) தெரிந்தெடுப்பவர்களை ரெஜிஸ்டர்செய்வது;

(c) அபேட்சகர்களின் நேமங்கள், எலெக்ஷன் (தெரிந்தெடுக்கும் நடவடிக்கை) நடக்கும் காலம், வோட்டுகளைப் பதியும் விதம், கணக்கிடும் விதம், எலெக்ஷன் முடிவுகளை நிர்ணயித்துப் பிரசித்தம் செய்வது ஆகிய இவைகள்;

(d) எலெக்ஷன் சம்பந்தமான விசாரணைகள் நடத்துவதும் எலெக்ஷன் விஷயமாய் ஏற்படும் விவாதங்களை முடிவு செய்வதும்;

(e) விசாரணைகள் நடத்தவும், சாட்சிகளுக்கு ஸம்மன் அனுப்பி வரவழைத்து அவர்களை விசாரிக்கவும், தஸ்தாவே ஜுகளை ஹாஜர்ப்படுத்தும்படி நிர்ப்பந்திக்கவும் யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிஷனர்களுக்கும் உள்ள அதிகாரங்கள் ;

(f) யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிஷனர்களுக்கும் ரஜாவும் ரஜா வர்த்தனையும் பிரயாண வர்த்தனையும் கொடுப்பதும், பொதுவாய் அப்படிப்பட்ட ப்ரெஸிடென்ட், கம்மிஷனர்கள் ஆகிய இவர்களின் ஊழிய சம்பந்தமான திட்டக்களும் ;

(g) போர்டுகள் அனுப்பவேண்டிய பட்ஜெட்டுகள், ரிபோர்ட்டுகள், கணக்குகள், ரிடர்ன்கள் அல்லது தெரிவிக்க வேண்டிய இதர விஷயங்கள் ;

(h) யாதொரு போர்டின் உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களுக்கு இருக்கவேண்டிய யோக்கிய தாம்சங்களும், அவர்களுக்கு ரஜாவும் ரஜா வர்த்தனையும் பிரயாண வர்த்தனையும் கொடுப்பதும், அவர்களுக்காக ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாய நிதி ஏற்படுத்துவதும், பொதுவாய் அவர்களுடைய ஊழிய சம்பந்தமான திட்டங்களும் ;

(i) ஆடிட்டர்கள் அடங்கிய சிப்பந்தியை ஏற்படுத்துவதும், அவர்களுடைய சம்பளங்களும் வர்த்தனைகளும், அந்த சிப்பந்தியின்மேல் விசாரணையும், அவர்களுக்கும் போர்டுகளுக்கும் கம்மிட்டிகளுக்கும் ட்ரஸ்டிகளுக்குமுள்ள சம்பந்தங்களும், பொதுவாய் ஆடிட்டர்களின் ஊழிய சம்பந்தமான திட்டங்களும் ;

(j) தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவைக்

கணக்கிடுவதும், அதை போர்டுகளுக்குள்ளும் கம்மிட்டிகளுக் குள்ளும் பங்கீடு செய்வதும்;

(k) போர்டுகள், கம்மிட்டிகள் அல்லது இனுங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து பிரசித்தப்படுத்தவேண்டிய விதமும், தணிக்கை செய்யவேண்டிய காலமும் இடமும், ஆடிட்டருடைய ரிபோர்ட்டின் நமூனுவும் அதில் அடங்கி யிருக்கவேண்டிய விஷயங்களும்;

(l) யாதொரு மதசம்பந்தமான இனுமின் வரும்படி யைக் கணக்கிடும் முறை.

(3) இந்தப் பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதி காரமானது-அவை முன்னதாய்ப் பிரசுரிக்கப்படவேண்டு மென்னும் திட்டத்துக்கு உட்பட்டதாகும்.

ஷெட்யூல்களை மாற்ற அதிகாரம்

72. (1) பிரதேச கவர்ன்மென்டார்-இந்த ஆக்டிற்கண்ட ஷெட்யூல்களில் எதையாவது மாற்றுவதற்காகிலும் அதனுடன் யாதொன்றைச் சேர்ப்பதற்காகிலும் அதை ரத்துசெய்வதற்காகிலும் விதிகள் செய்யலாம்.

(2) மேலேகண்ட ஷெட்யூல்களில் எதையாவது இந்த ஆக்டில் குறிப்பிட்டிருக்கும் இடங்களில் அந்தக் குறிப்புக ளெல்லாம் (1) அடையாளமிட்ட உட்பிரிவினுல் கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரங்களைக்கொண்டு திருத்தப்பட்டபடி யுள்ள ஷெ ஷெட்யூல்களைக் குறிப்பதாக அவைகளுக்கு அர்த் தம் பண்ணவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி செய்ய உத்தேசிக்கும் விதிக ளின் மசோதாவைச் சட்டநிரூபண சபைக்குமுன் வைக்க வேண்டும்; மேலும், சட்டநிரூபண சபையார் அந்த மசோ தாவைத் திருத்தாமலாவது அதனுடன் யாதொன்றைச்

சேர்க்காமலாவது, திருத்தங்களுடனாவது அதனுடன் எவை களையேனும் சேர்த்தாவது தீர்மானமூலமாய் அங்கீகரித்தா லொழிய ஷை விதிகளைச் செய்யக்கூடாது; ஆனால், அப்படிப் பட்ட அங்கீகாரம் கொடுக்கப்படுவதன்மேல், அந்த விதிகளை அவை அங்கீகரிக்கப்பட்டிருக்கும் மாதிரியாய்ச் செய்யலாம்; மேலும், அப்படிப்பட்ட விதிகளை அந்தப்படி செய்ததும் பிர சித்தப்படுத்தவேண்டும்; அதற்குப் பிறகு அவை பூர்த்தியாய்ச் செலாவணியாகி அமுலுக்கு வரும்.

வியாஜ்யங்கள்

73. (1) யாதொரு மடம் அல்லது கோயிலின்மேல் விசா ரணை அதிகாரமுடைய போர்டாராவது கம்மிட்டியாராவது, அதில் பற்றுள்ளவராய் போர்டாரின் அனுமதியைப் பெற்ற யாதொரு நபராவது—

(a) யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயி லின் ட்ரஸ்டியை நியமிப்பதற்காக அல்லது நீக்கிவிடுவதற் காக, அல்லது

(b) ஒரு ட்ரஸ்டியிடத்தில் யாதொரு சொத்து சங்கிர மிக்கும்படிச் செய்வதற்காக, அல்லது

(c) இனமாய் ஏற்படுத்தப்பட்ட சொத்தில் அல்லது அதிலுள்ள உரிமையில் எவ்வளவு பாகம் அந்த இனமின் குறித்த யாதொரு நோக்கத்துக்காகப் பங்கீடு செய்யப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காக, அல்லது

(d) பிரஸ்தாப கேஸின் தன்மையை நோக்கும்போது பின்னும் செய்துகொடுக்கவேண்டியிருக்கிற அல்லது வேறே வகையான பரிகாரம் செய்துகொடுப்பதற்காக

டிக்ரி பெறும்பொருட்டு கோர்ட்டில் வியாஜ்ஜியம் தொடரலாம்.

(2) 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரோஸீஜர் கோர்டு 92-வது, 93-வது பிரிவுகளும் அதன் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 1-ம் அதிகாரத்தில் கண்ட 8-வது விதியும் - மதசம்பந்தமான யாதொரு இனமின் பரிபாலன அல்லது நிர்வாக விஷயமாய் எவ்வித பரிகாரமாகிலும் செய்து கொடுக்கவேண்டுமென்று கொண்டுவரும் யாதொரு வியாஜ்ஜியத்துக்குப் பிரயோகப்படமாட்டா; மேலும், அப்படிப்பட்ட பரிபாலன அல்லது நிர்வாக சம்பந்தமாய்க் கொண்டுவரப்படும் எந்த வியாஜ்ஜியத்தையும் இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி தொடரக்கூடாது.

வியாஜ்யச் செலவு முதலியவை

74. இந்த ஆக்டின்படிக்கான யாதொரு வியாஜ்ஜியம் அல்லது விண்ணப்பத்துக்காகவும் அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்திலாகிலும் அப்படிப்பட்ட விண்ணப்பத்தின்மேலாகிலும் பிறப்பிக்கப்பட்ட டிக்ரி அல்லது உத்தரவின்மேல் செய்து கொள்ளும் யாதொரு அப்பீலுக்காகவும் அவைகள் சம்பந்தமாகவும் பிடிக்கும் கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாகவும் கட்டணங்கள் விஷயமாகவும் கோர்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி உத்தரவு செய்யவேண்டும்; அந்தக் கோர்ட்டார் - 68-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஷை செலவுகள், கட்டணங்கள் முழுவதுமாயினும் அவைகளில் எவ்வளவு பாகமாயினும் சம்பந்தப்பட்ட இனமைச் சேர்ந்த சொத்து அல்லது வரும்படியிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்றாவது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் மாதிரியாயும் நபர்களாலும் கொடுக்கப்படவேண்டுமென்றும் செலுததப்படவேண்டுமென்றுமாவது கட்டளையிடலாம்.

¹74. (a) போர்டாருக்குமுன் நடக்கும் சகல நடவடிக்கைகள் விஷயமாகவும் அவைகள் சம்பந்தமாகவும் பிடிக்கும் செலவுகளைக் குறித்து போர்டார் தங்களுக்கு யுத்தமாகத் தோற்றுகிறபடி உத்தரவு பிறப்பிக்கவேண்டும். ஷை செலவுகளை எவர்கள் அல்லது எந்த நிதியிலிருந்து எவ்வளவுமட்டில் செலுத்தவேண்டுமென்னும் விஷயத்தை நிச்சயிக்க போர்டாருக்குப் பூர்த்தியான அதிகாரம் உண்டு; மேலும், இது விஷயமாய்ப் பிறப்பிக்கப்படும் உத்தரவை நிறைவேற்றும் பொருட்டுக் கோர்ட்டாருக்கு ட்ரான்ஸ்பர் செய்யலாம்; கோர்ட்டார் அந்த உத்தரவு தங்களாலேயே பிறப்பிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அதை நிறைவேற்றவேண்டும்.

ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 92-வது பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட ஏற்பாடுகள்

75. யாதொரு மதசம்பந்தமான இனுமானது 1908-ம் ஸூ த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 92-வது பிரிவின்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட யாதொரு ஏற்பாட்டை அனுசரித்து நிர்வாகம் செய்யப்பட்டு வரும்பட்சத்தில், அந்த ஏற்பாடானது - இந்த ஆக்டில் அந்த ஏற்பாட்டில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமற்றவைகளாயிருக்கக்கூடிய நிபந்தனைகள் எவையேனும் ஏற்பட்டிருந்தும் பாதகமில்லாமலே இந்த இக்டின்படி நிஷ்கரிஷை செய்யபட்ட ஏற்பாடாகக்கருதப்படும்; மேலும், இந்த ஏற்பாட்டை இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கும் மாதிரியாக மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

---

1 போர்டாருக்குமுன் ஹாஜராகும் கட்சிக்காரர்கள், போர்டார் விசாரணை செய்யும் விஷயங்களில் விசாரணை முடிந்த பிறகு செலவுகளைக்குறித்து எவ்வித உத்தரவையும் பெறக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் நடத்தும் நடவடிக்கைகள் சம்பந்தமாய் எந்த விஷயங்களில் செலவுகளைக்குறித்துத் தீர்மானம் செய்வது தர்மத்தையும் நியாயத்தையும் உத்தேசித்தது அவசியமாகுமென்று போர்டார் நினைக்கிறார்களோ அந்த விஷயங்களுக்குப் பிரயோகப் படக்கூடியபடி ஒரு நிபந்தனையை அமைப்பது நியாயமாகும்.

அசையாப் பொருளாகவுள்ள ட்ரஸ்டி சொத்தைப் பராதீனப்படுத்துவது

76. (1) யாதொரு மடத்துக்கு அல்லது கோயிலுக்குச் சொந்தமாயிருக்கும் யாதொரு அசையாப் பொருளைப் பரிவர்த்தனை செய்வதும் அல்லது விற்பனைசெய்வதும் அல்லதுகொதுவை வைப்பதும், ஐந்து வருஷத்துக்கு மேற்பட்ட ஒருகால அளவுக்குக் குத்தகைக்கு விடுவதும் ஷை மடம் அல்லது கோயிலுக்கு அவசியமாகவாவது பிரயோசனகரமாகவாவதிருந்து, அந்தப்படி செய்வதற்கு மடங்களின் விஷயத்திலும் விலக்கப்பட்ட கோயில்களின் விஷயத்திலும் போர்டாரும், இதர கோயில்களின் விஷயத்தில் கம்மிட்டியாரும் அனுமதி கொடுத்தாலன்றி மற்றப்படி, அவை சட்ட சம்மதமானவைகளாகவுமாட்டா, செலாவணியாகத் தக்கவைகளாவுமாட்டா.

(2) ஷை மடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள யாதொரு நபராகிலும் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் அல்லது கம்மிட்டியார் செய்யும் உத்தரவின் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள், அப்படிப்பட்ட உத்தரவை மாற்றவேண்டுமென்றாயினும் ரத்துசெய்யவேண்டுமென்றாயினும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விண்ணப்பம் செய்து கொள்ளப்படாதிருக்கையில் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் அல்லது கம்மிட்டியார் செய்யும் உத்தரவும், அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் கோர்ட்டார் செய்யும் உத்தரவும் முடிவானவைகளாகும்.

சிறிதுமட்டில் மத சம்பந்தமாயும் சிறிதுமட்டில் லௌகீக சம்பந்தமாயுமுள்ள இனுங்களுக்கு இந்தஆக்ட் பிரயோகப்படுவது

77. (1) சிறிதுமட்டில் மதசம்பந்தமாயும் சிறிதுமட்டில் லௌகீகசம்பந்தமாயுமுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் சம்ரட்சணைக்காகவாவது அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்வதற்காகவாவது யாதொரு இனும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் சொத்து கொடுக்கப்பட்டிருந்தாலும்,

ஏற்படுத்தப்பட்ட யாதொரு இனுமாகிலும் கொடுக்கப்பட்ட யாதொரு சொத்தாகிலும் சிறிதுமட்டில் மதசம்பந்தமான காரியங்களுக்கு சிறிதுமட்டில் லௌகீக சம்பந்தமான காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட்டாலும், போர்டார்—இனுங்களையும் வாரிசில்லாததால் ஸர்க்காரைச் சேர்ந்துவிடும் சொத்துக்களையும் குறித்த 1817-ம் ஹு த்திய சென்னப் பட்டணத்து ரெகுலேஷனில்—என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்குப் பாதக மில்லாமலே, அப்படிப்பட்ட இனும் அல்லது சொத்திலாவது அதிலிருந்து கிடைக்கும் வரும்படியிலாவது எவ்வளவு பாகம் மதசம்பந்தமான காரியங்களுக்கு பங்கீடு செய்யப்படவேண்டுமென்பதை நிச்சயிக்கலாம். அதன் பிறகு, அந்த பாகமானது-மதசம்பந்தமான இனுமாயிருப்பதாகக் கருதப்படுவதுமல்லாமல், அதன் பரிபாலனமும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான உத்தரவினால் பாதிக்கப்படும் யாதொரு நபர்-அப்படிப்பட்ட உத்தரவை மாற்ற வேண்டுமென்றாகிலும் ரத்து செய்யவேண்டுமென்றாகிலும் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; ஆனால், அப்படிப்பட்ட விண்ணப்பத்தின் முடிவுக்கு உட்பட்டு, போர்டாரின் உத்தரவு [1] முடிவானதாகும்.

1 முகவுரையைக் காணவும்.

டிரஸ்டிக்குச் சுவாதீனப்படுத்துவது

78. [1]யாதொரு நபர், இந்த ஆக்டின் நிபந்தனைகளை அனுசரித்து, கம்மிட்டியாரால் அல்லது போர்டாரால் யாதொரு மடத்துக்காவது கோயிலுக்காவது அதைச் சேர்ந்த மதசம்பந்தமான யாதொரு இனுமுக்காவது ட்ரஸ்டியாக நியமிக்கப்பட்டிருந்து அல்லது யாதொரு ட்ரஸ்டியின் அலுவல்களைச் செய்யும்படி நியமிக்கப்பட்டிருந்து, அந்த நபர் சப்பந்தப்பட்ட மடம், கோயில் அல்லது மதசம்பந்தமான இனுங்களையும் அவைகளின் ரெகார்டுகளையும் கணக்குகளையும் சொத்துக்களையும் தம் சுவாதீனப்படுத்திக்கொள்ள முடியாதபடி எதிர்க்கப்பட்டாலும் தடுக்கப்பட்டாலும், கோர்ட்டார்-அந்தப்படி நியமிக்கப்பட்ட நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலும் நேமக உத்தரவை ஹாஜர்ப்படுத்துவதன்மேலும், ஷை மடம், கோயில் அல்லது மதசம்பந்தமான இனுமையும் அதன் ரெகார்டுகளையும் கணக்குகளையும் சொத்துக்களையும் அந்த நபருக்குச்சுவாதீனப்படுத்தும் படி கட்டளையிடலாம்.

---

1 பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டிகளை போர்டார் நியமிக்கும்போது, அவர்கள் கோயில் சொத்துக்களைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள கோர்ட்டாரின் உதவியை நாடுவதற்கு அனுகுணமாக இப்போதுள்ள 78-வது பிரிவில் நிபந்தனை எதுவும் கண்டில்லை. ஆலோசனை சொல்லியிருக்கிறபடி இந்தப் பிரிவைத் திருத்துகிற பட்சத்திலே, அனுபவத்தில் ஏற்படும் இந்தக் குறை நீங்கிவிடும்:—இது உண்டாவதற்கான காரணங்களும் ஹேதுக்களும்.

விடப்பட்ட பிரிவின் வாசகமாவது:—

ட்ரஸ்டிக்குச சுவாதீனப்படுத்துவது

யாதொரு கம்மிட்டியார் யாதொரு கோயிலின் பரம்பரையாய் ஏற்பட்டிராத ட்ரஸ்டியாக எந்த நபரையாகிலும் நியமித்தோ, அல்லது யாதொரு போர்டாராவது கம்மிட்டியாராவது பரம்பரையாய் ஏற்பட்ட டிரஸ்டியின் அலுவல்களைச் செய்ய எந்த நபரையாகிலும் நியமித்தோ இருந்து, அந்த நபர் ஷை மடம் அல்லது கோயிலையாயினும் அதற்குச சம்பந்தப்பட்ட இனுங்களையாயினும் அது விஷயமாயுள்ள எவையேனும் உரிமைப் பத்திரங்களையாயினும் வேறே தஸ்த

ஸ்திரமாய் ஏற்பட்டுள்ள ஆசாரங்களுக்கும் மாமூல்களுக்கும் பாதகமில்லையென்பது

79. இந்த ஆக்டிலாகிலும் அதன்படியாகிலும் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு மடம் அல்லது கோயிலில் ஸ்திரமாய் அனுசரிக்கப்பட்டுவரும் யாதொரு மாமூலுக்காவது, அப்படிப்பட்ட மடம் அல்லது கோயிலில் ஆசாரத்தின்படியாயினும் மற்றப்படியாயினும் யாதொரு நபர் அடைய அர்ஹராயிருக்கும் பாத்தியதைகளுக்கும் மரியாதைகளுக்கும் வரும்படிகளுக்கும் மேலாதாயங்களுக்குமாவது இதில் கண்டதெதனுலும் பாதகம் உண்டாகமாட்டாது.

இந்த ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி மதசம்பந்தமான இனுங்களின் விஷயத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசிக்கக்கூடாதென்பது

80. இந்த ஆக்டிலாகிலும் வேறே யாதொரு ஆக்டிலாகிலும் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி, பிரதேச கவர்ன்மெண்டாராவது தம்முடைய உத்தியோக ஹோதாவில் பிரதேச கவர்ன்மெண்டைச் சேர்ந்த யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தராவது யாதொரு மடத்தின் அல்லது கோயிலின் சம்ரட்சணைக்காகக் கொடுக்கப்பட்டாயினும் மற்றப்படி அதைச் சேர்ந்ததாகவாயினுமுள்ள யாதொரு நிலத்தின் அல்லது வேறே சொத்தின் மேல்விசாரணையை ஏற்றுக்கொள்வதோ அல்லது வகிப்பதோ, அல்லது அதன் பராமரிப்புக்காக ஏற்பாடு செய்திருக்கும் யாதொரு இனுமை நிர்வாகம்

வேஜாக்களையாயினும் தம் சுவாதீனப்படுத்திக் கொள்ளாதபடி எதிர்க்கப்பட்டாலும், தடுக்கப்பட்டாலும் கோர்ட்டார் அந்தப்படி நியமிக்கப்பட்ட நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலும், அவரை நியமிப்பதற்காக போர்டார் அல்லது கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவை ஹாஜர்படுத்துவதன்மேலும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய சொத்தை அந்த நபருக்குச் சுவாதீனப்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

செய்வதிலாகிலும் உபயோகப்படுத்திக்கொள்வதிலாகிலும் எவ்விதமாகவேனும் சம்பந்தம் வைத்துக்கொள்வதோ, அல்லது யாதொரு மதசம்பந்தமான இனுமின் டிரஸ்டியை நேமகம் செய்வதோ அல்லது ஏற்படுத்துவதோ, அல்லது யாதொரு மதசம்பந்தமான இனுமில் எவ்விதமாகவேனும் சம்பந்தப்படுவதோ சட்டசம்மதமாகமாட்டாது.

இந்த ஆகடின்படிக்கான தஸ்தாஜுகளுக்கு விதிக்கத்தக்க கோர்ட் கட்டணங்கள்

81. (1) கோர்ட் கட்டணத்தைக் குறித்த திருத்துவதற்கான 1922-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்ட் முதல் ஷெட்யூலிலாவது இரண்டாவது ஷெட்யூலிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 2-வது ஷெட்யூலின் 1-ம் 2-ம் கலங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் தஸ்தாவேஜுகளுக்கு அதன் 3-ம் கலத்தில் கண்டிருக்கும் கட்டணங்கள் சரியான கட்டணங்களாகும்.

(2) கோர்ட் கட்டணத்தைக் குறித்த திருத்துவதற்கான 1922-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து ஆக்டிற்கண்ட நிபந்தனைகள்-மற்றப்படி கூடுமானவரையில், 2-வது ஷெட்யூலில் சொல்லி யிருக்கும் தஸ்தாவேஜுகளுக்குப் பிரயோகப்படும்.

நடவடிக்கைக் குறிப்பு முதலியவைகளுக்கு நகல்கள் கொடுப்பது

82. [1]யாதொரு போர்ட் அல்லது கம்மிட்டியின் பெரிஸிடென்டானவர் - பொதுவான, அல்லது விசேஷஉத்புரவு மூலமாய் போர்டார் நிச்சயிக்கக்கூடிய கட்டணங்கள் செலுத்தப்

1 ஷை ஆக்டின் 82-வது பிரிவின்படி சவதரிக்கப்படும் நகல்களில் ஸெர்டிபை செய்யத் தங்கள் உத்தியோகஸ்தர்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு போர்டின் ப்ரெஸிடென்டுக்கும் கம்மிட்டிகளின் ப்ரெஸிடென்டுகளுக்கும் அதிகாரம் இருக்கவேண்டும். இது காரியத்

படுவதன்மேலும் அந்தப்படி நிச்சயிக்கக்கூடிய திட்டங்களுக்குபட்டும் தம்முடைய ஆபிஸிலுள்ள நடவடிக்கைக் குறிப்புகளுக்கு அல்லது இதர ரெகார்டுகளுக்கு நகல்கள் கொடுக்கலாம். ஷை நகல்களில் அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாவது, அந்த போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டினிடமிருந்து இது காரியத்துக்காக அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தராவது 1872-ம்வருஷத்திய இந்துதேசத்துச் சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாய் ஸெர்டிபை செய்யவேண்டும்.

இப்போதிருக்கும் கம்மிட்டிகளுக்குப் பிரயோகப்படகூடிய அங்காமியான நிபந்தனைகள்

83. (1) 1863-ம்வருஷத்திய மதசம்பந்தமான இனுங்களைக்குறித்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டு இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் இருந்துவருகிற ஒவ்வொரு கம்மிட்டியும் - இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி கிரமமாய் அமைக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படும்.

துக்காக ஒருதிருத்தத்தைப் பிரேரேபித்திருக்கிறது:—இது உண்டிவதர்கான காரணங்களும் ஹேதுக்களும்.

விடப்பட்ட பிரிவின் வாசகமாவது:—

நடவடிக்கைக் குறிப்புமுதலியவைகளுக்குநகல்கள்கொடுப்பது

யாதொரு போர்ட் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டானவர் - பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாய் போர்டார் நிச்சயிக்கக் கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன் மேலும் அந்தப்படி நிச்சயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி போர்டின் அல்லது கம்மிட்டியின் நடவடிக்கைக்குறிப்புகளுக்கும் ரெகார்டுகளும் நகல்கள் கொடுக்கலாம். ஷை நகல்களில் சம்பந்தப்பட்ட போர்டின் அல்லது கம்மிட்டியின் ப்ரெஸிடென்டானவர் - 1872-ம் வருஷத்திய இந்துதேசத்து சாட்சிய ஆக்ட் 76-வது பிரிவின் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாய் ஸெர்டிபை செய்யவேண்டும்.

(2) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்திலே உத்தியோகத்தில் இருந்துவருகிற கம்மிட்டிகளின் மெம்பர்களுக்கும் ப்ரெஸிடென்டுகளுக்கும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகிக்கும்போதும், இந்த ஆக்டை அனுசரித்து அந்தக் கம்மிட்டிகளை முதல் தடவையாய்த் திருத்தி அமைப்பதற்கு ஷை நிபந்தனைகளைப் பிரயோகிக்கும்போதும் அந்நிபந்தனைகளுக்கு 3-வது ஷெட்யூலில் கண்ட விதிகளுக்குட்பட்டு அர்த்தம் பண்ணவேண்டும்.

84. (1) [1]யாதொரு ஸ்தாபனம் இந்த ஆக்டில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி மடமா அல்லது கோயிலா என்பதைப்பற்றியாவது, யாதொரு கோயில் விலக்கப்பட்ட கோயிலா என்பதைப்பற்றியாவது விவாதம் ஏதாகிலும் ஏற்பட்டால், அந்த விவாதத்தை போர்டார் தீர்மானிக்கவேண்டும்.

மடங்களுக்கும் கோயில்களுக்கும் இந்தஆக்டு பிரயோகப்படுவது விஷயமாய்ஏற்படும் விவாதங்களை பைசல் செய்வது

1 கோயில்கள் தனிநபர்களைச் சேர்ந்தவையா என்பது விஷயமாய் விவாதங்கள் ஏற்பட்டால், அந்த விவாதங்களைக் குறித்து இப்போதுள்ள 84-வது பிரிவின்படி போர்டார் விவகரிக்கக்கூடுமோ என்பதைப்பற்றிச் சந்தேகங்கள் உண்டாயிருக்கின்றன. 'கோயில்', 'மடம்' என்றால் பொதுவான ஒரு கோயில் அல்லது பொதுவான ஒரு மடமென்று கொள்ளும்படி இப்போது அர்த்தம் கூறப்பட்டிருப்பதால், மேலேகண்ட சந்தேகங்கள் உண்டாவதற்கு இட மேற்படுகிறது. ஆகவே, சட்டநிரூபண சபையாரின் கருத்தையும் நோக்கத்தையும் ஸ்பஷ்டமாக்கும் உத்தேசத்துடன் இந்தத் திருத்தம் செய்யும்படி பிரேரேபித்திருக்கிறது:—இது உண்டாவதற்கான காரணங்களும் ஹேதுக்களும்.

இதைப்பற்றி முகவுரையில் காணவும்.

(a) தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அம்மையப்பன் ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி கோயில் 'விலக்கப்பட்ட கோயிலா' அல்லாவா என்று ஏற்பட்ட வழக்கில் போர்டார் அல்ல என்று தீர்மானித்தார்கள்,

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானத்தினால் பாதகமடைந்த யாதொரு ட்ரஸ்டியானவர் -

அதன்மேல் அப்பீல் செய்தார்கள். ஜில்லா ஜட்ஜு அப்பீலைத் தள்ளி போர்டாரின் தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்தினார் அதன்மேல் ஹைகோர்டுக்கு அப்பீல் செய்தார்கள். ஹைகோர்டார் ஹிந்து மதசம்பந்தமான இனங்களைக்குறித்த ஆக்டின் 84-(2)வது கீழ் அப்ளிகேஷனில் ஜில்லாஜட்ஜு செய்தஆர்டர்லிருந்து அப்பீல் கிடையாதென்று கூறி அப்பீலைத்தள்ளி அசல் தீர்ப்பை அங்கீகாரம் செய்து ஊர்ஜிதப் படுத்தினார்கள்.

ஸ்ரீநிவாசய்யர் என்கிற ஸ்ரீநிவாசய்யங்கார்—
ஹிந்துமத இனங்களைக்குறித்த போர்டார்—
(66 ம லா. ஜ. 43 புல்பெஞ்சு)

(b) தான் வசிப்பதும் ஸ்ரீ கோபாலகிருஷ்ண தேவன் பூஜை ஸ்தானமுமான இடத்திற்கு ஹிந்து மதசம்பந்தமான ஆக்டு செல்லாது என்று கூறும்படி வாதி வழக்குத் தொடர்ந்தார். போர்டார் வாதிக்கு நோட்டீசு கொடுத்து, விசாரணை செய்ததின்மேல் அது மடம் என்றார்கள். ஜில்லாகோர்ட்டாற்கு அப்பீல் செய்ததின் மேல் 84 (2) கீழ் அப்பீல் கிடையாதென்று தள்ளிவிட்டார். அதன்பேரில் ஹைகோர்டுக்கு அப்பீல் செய்தார். ஹைகோர்டார் ஜில்லாஜட்ஜுடைய தீர்மானத்தைச் சரியென்றார்கள் காரணம். என்னவென்றால் மடங்களுக்கும் கோயில்களுக்கும் இந்த ஆக்டு பிரயோகப்படுவது விஷயமாய் ஏற்படும் விவாதங்களைப் பைசல் செய்ய 84 (2) ல் இருக்கும் வண்ணம் ஒரு விதமானவழி காண்பித்திருந்தால் அதை விட்டு, (Declaratory Suit) தன்னுடையது என்று திர்மானிக்கும்படி கேழ்ப்பது செல்லாது என்றார்கள்.

(ஸ்ரீ ஈசுவரானந்த பாரதி சுவாமி கேஸ்—54 மத—928)

(c) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானத்தை மாற்றும்படியோ ரத்துசெய்யும்படியோ கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்ய மனுவிற்கு ஸ்டாம்பு விலை ரூபா பதினைந்து.

தாமோதரம் கேஸ்—53 மத 266
ஜட்ஜுகள்—ஜட்ஜு சர் குமாரசாமி சாஸ்திரியார்
ஜட்ஜு கர்கன்வென்
ஜட்ஜு பாகன்ஹாம் வால்ஷு

அந்தத் தீர்மானத்தை மாற்றும்படியோ ரத்துசெய்யும்படியோ ஒரு வருஷத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; ஆனால், ஷை விண்ணப்பத்தின் முடிவுக்குட் பட்டு, போர்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

இந்த ஆக்ட் அமுலுக்குக்கொண்டு வரும்போது ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திசெய்வது

85. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின பிறகு யாதொரு கம்மிட்டியை முதல் தடவையாய் அமைப்பது விஷயமாகவாகிலும் திருத்தி அமைப்பது விஷயமாகவாகிலும், மற்றப்படி இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை முதலில் அமுலுக்குக் கொண்டுவருவது விஷயமாகவாகிலும் கஷ்டம் ஏதாகிலும் உண்டானால், பிரதேச கவர்ன்மெண்டார் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அந்தக் கஷ்டத்தை நிவர்த்திசெய்வதற்காகத் தங்களுக்கு அவசியமாகத்தோற்று கிற யாதொரு காரியத்தை உத்தரவு மூலமாய்ச் செய்யலாம்.

விடப்பட்ட பிரிவின் வாசகமாவது:—

மடங்களுக்கும் கோயில்களுக்கும் இந்தஆக்ட்பிரயோகப்படுவது விஷயமாய் ஏற்படும் விவாதங்களைப் பைசல்செய்வது

84. (1) யாதொரு மடம் அல்லது கோயிலானது இந்த ஆக்ட் பிரயோகப்படுகிற மடம் அல்லது கோயிலா என்பதைப்பற்றியாவது யாதொரு கோயில் விலக்கப்பட்ட கோயிலா என்பதைப்பற்றியாவது விவாதம் ஏதாகிலும் ஏற்பட்டால், அந்த விவாதத்தை போர்டார் தீர்மானிக்கவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட யாதொரு ட்ரஸ்டியானவர் - அந்தத் தீர்மானத்தை மாற்றும்படியோ ரத்துசெய்யும்படியோ ஒரு வருஷத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; ஆனால், ஷை விண்ணப்பத்தின் முடிவுக்குட்பட்டு, போர்டாரின் உத்தரவு முடிவானதாகும்.

1-வது ஷெட்யூல்

[25-வது பிரிவைப் பார்க்கவும்.]

1-ம் பாகம்.—தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங்கள்.

யாதொரு நபர் தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்திலே முந்திய வருஷத்தில் 120 தினங்களுக்குக் குறையாமல் வாசஞ்செய்திருந்து,—

(a) அவருக்கு முந்திய வருஷத்தில் யாதொரு முனிஸிபல் கௌன்ஸிலாராலாவது லோக்கல் போர்டாராலாவது

சொத்து வரி,

கம்பெனிகளுக்கு வரி, அல்லது

தொழில் வரி

ஆகிய இந்த வரிகளில் ஒன்று அல்லது பல வரிகளின் நிமித்தம் மொத்தத்தில் இருபது ரூபாய்க்குக் குறையாமல் வரி விதிக்கப்பட்டிருந்தாலும்,

(b) அவருக்கு முந்திய வருஷத்தில் வருமான வரி விதிக்கப்பட்டிருந்தாலும்,

(c) அவர் யாதொரு நிலத்தின் ரயத்துவாரி பட்டாதாரராகவாவது இனம்தாரராகவாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(d) அவர் யாதொரு ரயத்துவாரி பட்டாதாரரிடத்திலாவது இனம்தாரரிடத்திலாவது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட குத்தகை மூலமாய் நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(e) அவர் நிலத்தின் அனுபோகதாரராக, மலையாளத்தில் நிலங்களை ரெஜிஸ்டர் செய்வதைக்குறித்த 1895-ம் வருஷத்து ஆக்ட் 14-வது பிரிவின்படி சொந்தக்காரருடன் கூட்டாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து, அந்த நிலத்தின் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

(f) அவர் யாதொரு பூஸ்திதியைக் கைப்பற்றில் வைத்திருக்கும் நிலத்துக்குடையவராக இருந்து, அதன் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்கு குறையாமலிருந்தாலும்,

(g) அவர் யாதொரு நிலத்துக்குடையவரின் கீழ் ரயத்தாகவோ பாயக்காரியாகவோ யாதொரு நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்து, அதன் வருஷவாரி வாடகை மதிப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலிருந்தாலும்,

அவர் - ஷை விஸ்தீர்ணத்தில் தெரிந்தெடுப்பவருக்கு வேண்டிய யோக்கியதை உடையவராவார்.

2-ம் பாகம்.—தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதைக் குறைவுகள்.

அடியிற்கண்ட யோக்கியதைக் குறைவுகளில் எதற்காவது உட்பட்டிருக்கும் யாதொரு நபர், அதாவது—

(a) ப்ரிடிஷ் குடியாயிராத, அல்லது

(b) தகுந்த யாதொரு கோர்ட்டாரால் புத்தி சுவாதீனமில்லாதவரென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற, அல்லது

(c) இருபத்தொரு வயதுக்கு உட்பட்டவராயிருக்கிற யாதொரு நபர் - யாதொரு தெரிந்தெடுப்பவர்களின் விஸ்தீர்ணத்துற்குரிய தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் தம்முடையபெயரை ரெஜிஸ்டர் செய்வித்துக்கொள்ள பாத்தியதையுடையவராகமாட்டார்.

2-வது ஷெட்யூல்

[81-வது பிரிவைப் பார்க்கவும்.]

பிரிவு. (1)	தஸ்தவேஜின் விவரம். (2)	சரியான கட்டணம். (3)
		ரூ.
43 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி டிரஸ்டி தண்டனை விதித்து பிறப்பித்த யாதொரு உத்தரவின்மேல், யாதொரு உத்தியோகம் வகிப்பவராவது யாதொரு ஊழியக்காரராவது கம்மிட்டியாருக்கு அப்பீல் செய்துகொள்வது	2
43 (3)	பரம்பரையாய் ஏற்பட்ட யாதொரு உத்தியோகம் வகிப்பவராவது யாதொரு ஊழியக்காரராவது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அப்பீலில் கம்மிட்டியார் பிறப்பித்த உத்தரவின்மேல் போர்டாருக்குப்பின்னும் அப்பீல் செய்துகொள்வது	2
43 (4)	விலக்கப்பட்ட கோயிலில் யாதொரு உத்தியோகம் வகிப்பவராவது அந்தக்கோயிலின் யாதொரு ஊழியக்காரராவது போர்டாருக்கு அப்பீல் செய்துகொள்வது	2

பிரிவு. (1)	தஸ்தவேஜின் விவரம். (2)	சரியான கட்டணம். (3)
44	சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபரிடமிருந்து தொகையை வசூலிக்க ட்ரஸ்டியாவது, சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபரிடமிருந்து தொகையை வசூலிக்க சொத்தை சுவாதீனத்தில் வைத்திருப்பவராவது கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	ரூ. தாவா செய்யப்படும் தொகைக்காகக் கொடுத்துக் கொள்ளப்படும் ப்ளெய்ன்டுக்கு கோர்ட் கட்டணத்தைக்குறித்த திருத்துவதற்கான 1922ம் வருஷத்திய சென்னபட்டணத்துஆக்டின்படி விதிக்கத்தக்க கட்டணம்.
53 (6)	கம்மிட்டியார் யாதொரு ட்ரஸ்டியைச் சிறிது காலத்துக்கு நீக்கி வைத்தாவது தள்ளிவிட்டாவது எடுத்துவிட்டாவது செய்த உத்தரவின்மேல்போர்டாருக்கு அப்பீல் செய்து கொள்வது அல்லது கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	25
55 (4)	பரிமாண செலவு வீதங்களை நிஷ்கரிஷை செய்து கம்மிட்டியார்	

Z2‖(Q2) N34
78549

பிரிவு.		தஸ்தவேஜின் விவரம்.	சரியான கட்டணம்.
(1)		(2)	(3)
		(3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பித்த உத்தரவின் மேல் ட்ரஸ்டியாவது பற்றுள்ளநபராவது போர்டாருக்கு அப்பீல் செய்து கொள்வது... ...	ரூ. 20
55	(4)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
57	(3)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
57	(4)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
62		யாதொரு மடம் அல்லது விலக்கப்பட்ட கோயிலுக்காக பரிபாலன ஏற்பாடு ஒன்றைத்தயார்செய்ய வேண்டுமென்று பற்றுள்ளநபர்களில் 20 பேருக்குக் குறையாதவர்கள் போர்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	50
63	(4)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
65		இந்தப் பிரிவின்படிக்கானவியாஜ்ஜியம்	50
67	(4)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
67	(5)	இந்த உட்பிரிவின்படிக்கான வியாஜ்ஜியம்	50
73		இந்தப் பிரிவின்படிக்கான வியாஜ்ஜியங்கள்	50

பிரிவு.	தஸ்தவேஜின் விவரம்.	சரியான கட்டணம்.
(1)	(2)	(3)
76 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அசையாப்பொருளைப் பராதீனப்படுத்த அனுமதி கொடுத்து கோர்டார் பிறப்பித்திருக்கும் யாதொரு உத்தரவைத்திருத்த வேண்டுமென்றாவது ரத்து செய்யவேண்டுமென்றாவது யாதொருமடம் அல்லது கோயிலின் ட்ரஸ்டியாகிலும் பற்றுள்ள யாதொரு நபராகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது	ரூ. கோர்ட் கட்டணத்தைக் குறித்த திருத்துவதற்கான 1922-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்ட் 2-வது ஷெட்யூலில் கண்ட 17-வது பகுதியின்படி யாதொரு ப்ளெய்ன்டுக்கு விதிக்கப்படத்தக்க கட்டணம்.
77 (2)	யாதொரு இனுமையாவது சொத்தையாவது அதிலிருந்து கிடைக்கும் வரும்படியையாவது மத சம்பந்தமான காரியங்களுக்கும் லௌகிக சம்பந்தமான காரியங்களுக்கும் பங்கிடுசெய்து(1)	

பிரிவு.	தஸ்தவேஜின் விவரம்	சரியான கட்டணம்.
(1)	(2)	(3)
	குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் பிறப்பித்த உத்தரவை மாற்றவேண்டுமென்றாவது ரத்துசெய்யவேண்டுமென்றாவது கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது ...	ரூ. 20
78	கம்மிட்டியாரால் நியமிக்கப்பட்ட ட்ரஸ்டியிடத்தில் இனங்களைச் சுவாதீனப்படுத்த வேண்டுமென்று கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்வது...	2
84 (2)	(1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் செய்த தீர்மானத்தை மாற்றவேண்டுமென்றாவது ரத்துசெய்யவேண்டுமென்றாவது விண்ணப்பம் செய்துகொள்வது	கோர்ட்கட்டணத்தைக் குறித்த திருத்துவதற்கான 1922-ம் ௵த்திய சென்னபட்டணத்து ஆக்ட் 2-வது ஷெட்யூலில் கண்ட 17-வது பகுதியின்படி யாதொரு ப்ளெய்ன்டுக்கு விதிக்கப்படத் தக்க கட்டணம்.

3-வது ஷெட்யூல்

[83-வது பிரிவைப் பார்க்கவும்.]

அங்காமியான நிபந்தனைகள்.

1. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் உத்தி யோகம் வகித்துவரும் கம்மிட்டி மெம்பர்களின் உத்தியோக கால அளவு முடிவாவதற்காக, இந்த ஆக்ட் வழங்கத் தொடங் குவதிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாமலுள்ள ஒரு தேதியை பிரதேச கவர்ன்மென்டார் நிஷ்கரிஷை செய்ய வேண்டும் :

ஆனால், யாதொரு கம்மிட்டியின் பிரெஸிடென்டாக வும் இருக்கும் ஒரு மெம்பர்-4-வது விதியின்படி புதிய ப்ரெஸி டென்ட் தெரிந்தெடுக்கப்படுகிற வரையிலே ப்ரெஸிடென்டுக் குரிய அலுவல்களைச் செய்துவரவேண்டும்.

2. யாதொரு கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் உத்தியோ கத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போது யாதொரு காலி நேரிட்டிருந்தாலும், 4-வது விதியின்படி புதிய பிரெஸி டென்ட் தெரிந்தெடுக்கப்படுகிற தேதிக்குமுன் யாதொரு காலி நேரிட்டாலும், அதை இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின் படி பூர்த்திசெய்யவேண்டும்; மேலும், யாதொரு கம்மிட்டி மெம்பர் உத்தியோகத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் போது யாதொரு காலி நேரிட்டிருந்தாலும், 1-வது விதியின் படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்கு முன் யாதொரு காலி நேரிட்டாலும், அதைப் பிரதேச கவர்ன்மென்டார் நேமகமூல மாய்ப் பூர்த்திசெய்யவேண்டும் :

ஆனால், இந்த விதியின்படி ப்ரெஸிடென்டாகவோ மெம்பராகவோ தெரிந்தெடுக்கப்படுகிற அல்லது நியமிக்கப்படுகிற யாதொரு நபர் 1-வது விதியில் குறிப்பிடப்பட்ட தேதி வரையில் மாத்திரமே உத்தியோகம் வகிக்கவேண்டும்.

3. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் உத்தியோகம் வகித்துவரும் மெம்பர்களின் உத்தியோக கால அளவுகள் முடிவாவதற்காக 1-வது விதியின்படி நிஷ்கரிஷை செய்யப்படும் தேதியன்றைக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் உத்தியோகம் வகிக்க ஆரம்பிக்கும்படியாக, மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைக் கம்மிட்டியின் ப்ரெஸிடென்ட் செய்விக்கவேண்டும்.

4. அந்தத் தேதியன்றைக்காவது அதற்குப் பிறகு கூடிய சீக்கிரத்திலாவது, புதிய ப்ரெஸிடென்டைத் தெரிந்தெடுப்பதற்காக ப்ரெஸிடென்டால் நிஷ்கரிஷை செய்யப்படும் தினத்திலும் காலத்திலும் ஒரு சபை கூட்டப்படவேண்டும்.

1-வது அநுபந்தம்

[38-வது பிரிவைப் பார்க்கவும்]

2-5-25-ம் தேதியுள்ள போர்டாரவர்கள் மெமோ நெம்பர் 105-ல், மடாதிபதிகளும் தர்மகர்த்தர்களும், சென்னை இந்து மத சம்பந்தமான இனுங்களைக் குறித்த (1925-ம் வருஷத்திய 1-வது) சட்டத்தின் 34-ஆவது செக்ஷனில் விதித்த பிரகாரம், அந்த மெமோவில் கண்ட நமூனுப்படி, ஸ்டேட்மெண்டு தயார் செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அநேக தர்மகர்த்தர்கள் அந்த ஸ்டேட்மெண்டுகளை இதுவரை அனுப்பவில்லை. அப்படி அனுப்பிய சிலவற்றில் அநேக விஷயங்கள் அறை குறையாகவும் நமூனுப்படி சரியான பதில் இல்லாமலும் இருக்கின்றன. ஆகையால் மடாதிபதிகள் தர்மகர்த்தர்கள் எல்லோரும் இதோடு சேர்க்கப்பட்ட நமூனுப்படி சரியான ஜவாப் தயார் செய்த ஷை ஸ்டேட்மெண்டை கமிட்டிக்குட்பட்ட கோவில்களைப் பொறுத்தவரையில் மூன்று பிரதிகளாகவும் மற்ற கோவில்களையும் மடங்களையும் பொறுத்த வரையில் இரண்டு பிரதிகளாகவும், அந்த மெமோ கிடைத்த ஒரு மாதத்திற்குள் அனுப்பவேண்டியது.

2. கமிட்டியாரது ஆளுகைக்குட்பட்ட கோவில்களைக் குறித்த ஷை ஸ்டேட்மெண்டின் 3 பிரதிகளும் ஷை கமிட்டியார் மூலமாய் போர்டாருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இப்போது கவர்னர் ஜெனரல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட புதுச் சட்டத்தின் 38-ஆவது செக்ஷன் (2) ஆவது சப் செக்ஷன் ஒழிபுரைப்படி ஒவ்வொரு கமிட்டியாரும் ஷை ஸ்டேட்டுமெண்டுகளை சரிபார்த்து அவற்றைப் போர்டாருக்கு அனுப்பி

வைக்கவேண்டியது. போர்டார் அவற்றை அப்படியேயாவது அல்லது மாறுதல்களோடாவது அங்கீகரித்துக்கொண்டு பிறகு தர்மகர்த்தர்களுக்கு அனுப்புவதற்காக ஒரு பிரதியும் தங்கள் ஆபீசில் வைத்துக்கொள்வதற்காக மற்றொரு பிரதியும் ஆக இரண்டு பிரதிகளைக் கமிட்டியாருக்குத் திருப்பி அனுப்பி விடுவார்கள்.

மடங்களையும் கமிட்டிக்குட்படாத கோவில்களையும் குறித்த வரையில் ஷை ஸ்டேட்மெண்டின் இரண்டு பிரதிகளையும் நேரே போர்டாருக்கு அனுப்ப வேண்டியது. அவற்றை அப்படியே ஒத்துக்கொண்டோ அல்லது மாறுதல்கள் ஏதாவது உண்டானால் அவற்றைக் குறித்துக்காட்டியோ போர்டார் ஒரு பிரதியை மடாதிபதிகளுக்கும் தர்மகர்த்தர்களுக்கும் திருப்பி அனுப்பி விடுவார்கள்.

2-5-25 தேதியுள்ள 105-ம் மெமோவின்படி அனுப்பிய ஸ்டேட்மெண்டுகள் சரியென்று ஒத்துக்கொள்ளப்பட்டிருந்தால், அவைகளை அனுப்பிய மடாதிபதிகளும் கமிட்டிக்குட்படாத கோவில்களின் தர்மகர்த்தர்களும் ஒரு பிரதியையும், கமிட்டிக்குட்பட்ட கொவில்களின் தர்மகர்த்தர்கள் இரண்டு பிரதியையும் மட்டும் (இப்பால் அதிக மாறுதல்கள் நேர்ந்திருந்தால் ஒழிய) அனுப்புவது போதுமானது.

3. ஷை ஸ்டேட்மெண்டை தனித்தனி காகிதங்களில் இதோடு சேர்த்திருக்கும் நமூனைப்படி தயார் செய்ய வேண்டியது. ஷை நமூனவை தங்கள் தகவலுக்காக தர்மகர்த்தர்கள் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளவேண்டியது.

(மெமோராண்டம் நெ 50 மிஸ்ஸலேனியஸ் 14-2-1927)

1	மடம் அல்லது கோவிலின் பெயர்.	
2	இருப்பிடம் (ஜில்லா, தாலுக்கா, கிராமம், சமீபமாகவுள்ள தபாலாபீஸ், சமீபமாயுள்ள ரெயில்வே ஸ்டேஷன்.)	
3	கோவில் அல்லது மடத்துக்குட்பட்ட சுற்றுக்கோவில்களும் மடங்களும் அவற்றின் இருப்பிடமும்.	
4	கமிட்டி ஆளுகைக்குட்பட்டதா? கோர்ட் ஸ்கீம் ஏற்பட்டதா? அல்லது அப்படிப்பட்ட ஏதாவதொரு மேற்பார்வையின்றி டிரஸ்டிகளால் ஆளப்பட்டு வருகிறதா? டிரஸ்டி நியமகமாக வேண்டிய முறைமையைக் குறித்த தஸ்தாவேஜுகள் அல்லது வழக்கங்கள் இருந்தால் அவைகளின் விபரம், கட்டளை டிரஸ்டி உபய டிரஸ்டிகளைப்பற்றியும் ஏதாவது விபரம் இருந்தால் அதையும் குறிக்கவேண்டும்.	
5	(a) முன்னிருந்த டிரஸ்டிகளின் பெயர் விபரமும், அவர்கள் வேலை பார்த்து வந்த கால அளவும், காலக்கிரமமாக தெரிவிக்கவும், (b) தற்காலம் வேலை பார்த்து வரும் டிரஸ்டி பெயர், விலாசம், வேலை ஒப்புக்கொண்ட தேதி விபரம்.	
6	கோவில் அல்லது மடத்துக்குச் சொந்தமான கட்டிடம், மண்டபம், மடம், முதலியவைகளும் அவற்றின் வருமானமும், சர்க்காருக்கோ, முனிஸிபாலிடிக்கோ செலுத்தும் தீர்வை விபரமும்.	

	7	கோவில் அல்லது மடத்திற்கு ஏற்பட்டிருக்கிற, நஞ்சை, புஞ்சை முதலிய ஸ்தாபர வஸ்துக்கள், அவைகளிருக்கப்பட்ட கிராமம், விஸ்தீரணம், சர்வே நெம்பர், பெறுமானம், சர்க்கார் தீர்வை, வருமானம், குறிப்பான ஒரு நோக்கத்திற்காக ஏற்பட்டிருந்தால் அந்த நோக்கம் முதலிய விபரங்கள், மூல சாஸனங்கள் அல்லது இனும் ரிஜிஸ்டர்கள் இனும் ஸ்டேட்மெண்டு, அல்லது வேறு வகையான சாஸனங்கள் அல்லது கல்வெட்டுகள் இருந்தால் அவைகளின் விபரம்.
	8	ஜங்கம சொத்துக்களின் விபரமும் பொறுமானமும். 1. சொர்ணம், வெள்ளி பலவகை நகை முதலிய விபரம். 2. பாத்திர பாண்டங்கள். 3. பட்டு பீதாம்பர வஸ்திரங்கள். 4. வாகனங்களும் அவற்றின் இன விபரமும். 5. மேஜை, நாற்காலி, விளக்கு முதலிய தளவாரங்கள். 6. ரொக்க இருப்பும் அது இப்போது என்ன ஆதாரவின்பேரில் இருக்கின்றதென்ற விபரமும். 7. கால் நடைகளின் விபரம்.
	9	கோவில் அல்லது மடத்திற்கு ஏற்பட்ட கட்டளைகளின் பெயர், விபரம், இருப்பு, வருமானம், செலவு, கட்டளைதார் பெயர் கட்டளை சொத்து இருக்குமிடம் விஸ்தீரணம் முதலியன. மூலசாஸனங்கள் அல்லது இனும் ரிஜிஸ்டர்கள், இனும் ஸ்டேட்மெண்டு, அல்லது வேறுவகையான சாஸனங்கள் கல் வெட்டுகள் இருந்தால் அவைகளின் விபரம்.
	10	திட்டசெலவுகள் இதில் நாள்தோறும் ஏற்பட்டுள்ளசெலவு, மாதத்துவிசேஷம்; ஆட்ட விசேஷம், முதலிய ஒவ்வொன்றுக்கும் விபரம் துலக்கி எழுதவும், அமுதுபடி அல்லது சாதச்செலவிருந்தால் அது இன்னின்னருக்கு இன்னின்ன வகைக்கு எவ்வளவெவ்வளவு என்ற விபரம் காட்டவும்; கோவில் ஆளுகைக்கு ஏற்பட்ட ஸ்கீமின் விபரமும் காட்டவேண்டியது.

11	கோவில்அல்லது மடத்தின் சிப்பந்திசெலவு :—இதில் வேலை ஆட்களின் பெயர், உத்தியோகத்தின் பெயர், வேலை விபரம், சம்பளம், படித்தரம் முதலிய விபரங்களும் உத்தியோகத்தில் பரம்பரை பாத்தியதை இருந்தால் அதின் விபரமும், வேலைக்காரர்களுக்கு ஊழியத்திற்காக மானியம் இனும் விடப்பட்டிருந்தால் அதன் விபரமும், ஊழியம் நடந்துவருகிற விபரமும் ஷை சொத்துக்களின் வருஷ வருமானமும் ஷை மானியங்கள் ஊழியக்காரர்களின் கைவசமிருக்கிறதா அல்லது பராதீனப்பட்டிருக்கிறதா, பராதீனமாயிருந்தால் அது ஏற்பட்ட காலமும் அது இப்போது யார் கைவசமிருக்கிறது என்கிற விபரமும் காட்டவேண்டியது.	
12	கருவேலம், உக்கிராணம் இவற்றின் திறவுகோல் யார் கைவசமென்பதும் இது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சம்பளம், படித்தரம் பதிவுகளின் விபரம்.	
13	கோவில் அல்லது மடத்துக்கு உண்டியல், காணிக்கை, மற்ற இனும் முதலிய வைகளின் வருஷ வருமானம் எல்லா வகைகளிலிருந்தும் வரும் மொத்த வருமானம்.	
14	தற்காலம் நடந்துவரும் வியாச்சிய விபரம்.	
15	ஷரா, மேல்கண்ட தலைப்பின்கீழ் வராத விஷயமிருந்தால் அது.	

2-வது அநுபந்தம்

[67-வது பிரிவைப் பார்க்கவும்]

யாதொரு மதசம்பந்தமான இனுமின் வருமானத்தைக் கணக்கிடும் முறையை நிர்ணயிப்பதற்காக விதிகள்.

i. யாதொரு கோயில் அல்லது மடத்தின் வருமானத்தில் அடியிற் கண்டவை அடங்கும்:—

(a) அசையாப் பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படி ;

விவரணம்:—அசையாப் பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படியானது தானியமுதலியவை ரூபமாயிருந்தால், கோயில் அல்லது மடத்தில் செலவாகிற மாசூலாயிருக்கிற விஷயத்திலே, அந்த வரும்படியை அது வரப்பெற்றுக் கொள்ளப்பட்ட தேதியில் அதன் ஊர்விலைப்படி மதிப்பிடவேண்டும். மேலும், விற்பனை செய்யப்படும் மாசூலாயிருக்கிற விஷயத்திலே, அதை விற்பனை செய்ததனுல் கிடைத்த தொகையைக் கொண்டு அந்த வரும்படியை மதிப்பிடவேண்டும்.

(b) ஈடுகளின்மேல் போட்டுவைத்திருக்கும் தொகைகளிலிருந்து கிடைக்கும் வரும்படி ;

(c) கைங்கரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் அல்லது இனுங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி; இந்த வரும்படி அசையாப் பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படியாயிருந்தால், அதை (a) குறிப்பிட்ட பகுதியுடன் சேர்த்திருக்கும் விவரணத்தில் சொல்லியிருக்கிற விதமாய் மதிப்பிடவெண்டும் ;

(d) மூலதனத்துடன் சேர்க்கப்படவேண்டுமென்று தானம் கொடுத்தவர்களால் உத்தேசிக்கப்பட்டிராத ரொக்க வரும்படி;

(e) ரொக்கமாக மாற்றப்படாமல் கோயில் அல்லது மடத்தின் பிரயோசனத்துக்காக நிறுத்தி வைத்துக்கொள்ளப் படவேண்டுமென்று தானம் கொடுத்தவர்களால் உத்தேசிக்கப் பட்டிராத தானிய முதலியவை ரூபமாயுள்ள வரும்படி; ஆனால், அந்த வரும்படியில் யாதொரு உபயமாவது அதில் செய்யப்படும் குறித்த யாதொரு கைங்கரிய சம்பந்தமான செலவுகளுக்காக எதேச்சையாய்க் கொடுக்கப்படும் சகாயத் தொகையாவது அடங்காது;

விவரணம்—அப்படிப்பட்ட வரும்படியானது அது விற்பனையான தேதியில் வருமானமாய் ஏற்படுவதாக எண்ணப் படும். மேலும், அந்தப்படி விற்பனை செய்வதனால் கிடைக்கும் தொகையைக்கொண்டு அதை மதிப்பிடவேண்டும்.

இந்த விதிக்கு விவரணம்.—இந்த விதியில் வருமானம் என்பது:—

(a) உற்பத்தி செய்வதற்காகப் பிடித்த செலவு,

(b) கவர்ன்மெண்டுக்குச் செலுத்தப்படத் தக்க தீர்வை,

(c) வசூலிக்கப்படும் தொகையில் 100-க்கு 10 வீதத் துக்கு அதிகமாய்ச் செலவுசெய்ய போர்டார் அனுமதி கொடுக் கிற விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களிலே, அந்த வீதத் துக்கு மேற்படாமல் வசூலிப்பதற்காக வாஸ்தவத்தில் பிடித்த செலவு,

ஆகிய இவைகளை மாத்திரம் கழித்த பிறகு நிற்கும் மொத்த வருமானம் என்று அர்த்தமாகும்.

ii. யாதொரு கோவில் அல்லது மடத்தினல் செலுத்தப் படத்தக்க சகாயத்தொகை இவ்வளவென்று, முந்திய பஸலி வருஷத்தில் கிடைத்த வருமானத்தை ஆதாரமாகக்கொண்டு ஒவ்வொரு பஸலி வருஷத்திலும் நிர்ணயிக்க வேண்டும்.

iii. ஒவ்வொரு கோவில் அல்லது மடத்தின் ட்ரஸ்டியும்- இந்த விதிகளின்படி கணக்கிட்டு முந்திய பஸலி வருஷத்தில் பிரஸ்தாப இனுமின் வருமானத்தைக் காட்டும் ரிடர்ன் என் னும் விவரக்கணக்கு ஒன்றை இதனுடன் சேர்த்திருக்கும் நமூனுப்படியாவது போர்டார் கட்டளையிடக்கூடிய வேறே நமூனுப்படியாவது தயார்செய்து ஒவ்வொரு பஸலி வருஷத்தி லும் ஆகஸ்டு மாதம் 31வ யன்றைக் காகினும் அதற்கு முன் பாகிலும் போர்டாருக்கும், யாதொரு கோவிலின் விஷயத்தில் அந்தக் கோயிலின்மேல் விசாரணை அதிகாரமுடைய கம்மிட்டி ஏதாகிலும் இருந்தால் அவர்களுக்குங்கூட அனுப்ப வேண்டும்.

iv. யாதொரு கோயில் அல்லது மடத்தின் ட்ரஸ்டி யானவர் ஷெ காலத்துக்குள் ரிடர்ன் அனுப்பத் தவறிப்போனு லும், அவர் ரிடர்ன் அனுப்பியிருந்து அது சரியானதல்ல வென்ருவது பூர்த்தியானதல்லவென்ருவது போர்டார் அபிப் பிராயப்பட்டாலும், போர்டார் தங்களுக்கு மிகவும் நியாய மாகத் தோற்றுகிறபடி வருமானத்தை மதிப்பிடலாம்; அந்தப் படி மதிப்பிடப்பட்ட தொகையானது - ஹிந்துமத சம்பந்த மான இனுங்களைக் குறித்த 1923-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்ட் 65-வது பிரிவின் காரியங்களுக்காக ஷெ கோவில் அல்லது மடத்தின் வருமானமாக எண்ணப் படும்.

v. ஏககாலத்தில் ஐந்து வருஷத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு, யாதொரு கோவில் அல்லது மடத்தின்

ட்ரஸ்டியால் வருஷாவருஷம் செலுத்தப்படத்தக்க சகாயத் தொகை இவ்வளவென்பது விஷயமாய் போர்டார் ஷை ட்ரஸ்டியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும் கம்மிட்டியார் ஷைகோவிலின் ட்ரஸ்டியுடன் உடன்படிக்கை செய்துகொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

vi. 1925-ம்ஹு ஏப்ரல்மீ 15உயிலிருந்து ஆரம்பித்து 1926ஹு ஜூன்மீ 30உ யோடு முடிவாகும் கால அளவில் ஒவ்வொரு வருஷத்துக்காவது அதன் பாகத்துக்காவது யாதொரு கோயிலிலிருந்தாகிலும் மடத்திலிருந்தாகிலும் செலுத்தப்படத்தக்க சகாயத்தொகை இவ்வளவென்று, 1926ஹு ஜூன்மீ 30உயோடு முடிவாகிற பன்னிரண்டு மாதத்தில் ஷை கோயில் அல்லது மடத்துக்குக் கிடைத்த வருமானத்தை ஆதாரமாகக்கொண்டு நிர்ணயிக்க வேண்டும்.

vii. ஒவ்வொரு கோயில் அல்லது மடத்தின் ட்ரஸ்டியும் இந்த விதிகளின்படி கணக்கிட்டு, 1926ஹு ஜூன்மீ 30உ யோடு முடிவாகிற பஸலி வருஷத்துக்கு அந்தக் கோயில் அல்லது மடத்தின் மொத்த வருமானத்தைப் பூர்த்தியாய்க் காட்டும் ரிடர்ன் ஒன்றை இதனுடன் சேர்ந்திருக்கும் நமூனாப் படியாவது போர்டார் கட்டளையிடக்கூடிய வேறே நமூனாப் படியாவது தயார்செய்து, அதை இந்த விதிகள் முடிவாய்ப் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து ஒருமாதத்துக்குள் போர்டாருக்கும், யாதொரு கோயிலின் விஷயத்திலே அந்தக்கோயிலின் மேல்விசாரணை அதிகாரமுடைய கம்மிட்டி ஏதாகிலும் இருந்தால் அவர்களுக்குங்கூட அனுப்பவேண்டும்.

viii. யாதொரு கோயில் அல்லது மடத்தின் ட்ரஸ்டியானவர் ஷை காலத்துக்குள் ரிடர்ன் அனுப்பத் தவறிப்போனாலும், அவர் ரிடர்ன் அனுப்பியிருந்து அது சரியானதல்ல

வென்ருவது பூர்த்தியானதல்லவென்ருவது போர்டார் அபிப்பிராயப்பட்டாலும், போர்டார் தங்களுக்கு மிகவும் நியாயமாகத் தோற்றுகிறபடி வருமானத்தை மதிப்பிடலாம்; அந்தப்படி மதிப்பிடப்பட்ட தொகையானது ஹிந்து மத சம்பந்தமான இனுங்களைக் குறித்த 1923-ம் ஞூத்திய சென்னப்பட்டணத்து ஆக்டின் சகல காரியங்களுக்காகவும் ஷை கோயில் அல்லது மடத்தின் வருமானமாக எண்ணப்படும்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1927-ம்ஞூ ஜனவரிமீ 4வ

(23-ம் ந. L. & M. கவர்ன்மெண்ட் உத்தரவு.)

நமூனு

.................ஜில்லா................ தாலூகா ....

கிராமத்திலுள்ள / பட்டணத்திலுள்ள .... கோயிலின் / மடத்தின் விஷயத்தில்

.... வருஷத்துக்கு வருஷாந்த வருமானத்தைக் காட்டும் ஸ்டேட்மெண்ட்.

1. ஷை மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த அசையாப்பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படி :—

ரூ. அ. பை.

(a) மதசம்பந்தமான இனுமின் பெயரில் அல்லது தெய்வத்தின் பெயரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் இனுங்கள் உட்பட நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் ... ...

ரூ. அ. பை.

(b) மதசம்பந்தமான இனுமைச் சேர்ந்த அல்லது தெய்வத்தைச் சேர்ந்த வீடுகளிலிருந்து வரும் வாடகைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ...

2. ஈடுகளின்மேல் போர்டுவைத்திருக்கும் தொகைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ...

3. கைங்கரியங்களுக்காக ஏற்பட்ட கட்டளைக ளில் அல்லது இனுங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி

4. மூலதனத்துடன் சேர்க்கப்படவேண்டு மென்று தானம் கொடுத்தவர்களால் உத்தேசிக்கப்பட் டிராத ரொக்க வரும்படி ... ...

(a) தஸ்திக், மோஹினி அல்லது இவைகளைப் போல் கவர்ன்மெண்டார் கொடுத்துவரும் இதர தொகைகள் ... ...

(b) இதர ஆதாரங்களிலிருந்து கிடைப்பவை

5. பணமாக மாற்றப்படாமல் கோயில் அல்லது மடத்தின் பிரயோசனத்துக்காக நிறுத்திவைத்துக் கொள்ளப்படவேண்டுமென்று தானம் கொடுத்தவர்க ளால் உத்தேசிக்கப்பட்டிராத தானிய முதலியவை ரூபமாயுள்ள வரும்படி ... ...

மொத்தம் ...

குறிப்புகள்:—I. சகல விஷயங்களிலும் வருமானமானது,

(a) உற்பத்தி செய்வதற்காகப் பிடித்த செலவு,

(b) கவர்ன்மெண்டுக்குச் செலுத்தப்படத்தக்க தீர்வை,

(c) வசூலிக்கப்பட்ட தொகையில் 100-க்கு 10 வீதத்துக்கு அதிகமாய்ச் செலவு செய்ய போர்டார் அனுமதி கொடுக்கிற விஷயங்

கள் தவிர மற்ற விஷயங்களிலே, அந்த வீதத்துக்கு மேற்படாமல் வசூலிப்பதற்காக வாஸ்தவத்தில் பிடித்த செலவு,

ஆகிய இவைகளைமாத்திரம் கழித்த பிறகு, பிரஸ்தாப இனமி லிருந்து கிடைக்கும் மொத்த வருமானமாக எண்ணப்படும்.

II. அசையாப் பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படி யானது தானிய முதலியவை ரூபமாயிருந்தால் மடம் அல்லது கோயிலில் செலவாகிற மாசூலாயிருக்கிற விஷயத்திலே, அந்த வரும் படியை அது வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியில் அதன் ஊர் விலைப்படி மதிப்பிடவேண்டும்; அல்லது, விற்பனை செய்யப்படும் மாசூலாயிருக்கிற விஷயத்திலே, அதை விற்பனை செய்ததனால் கிடைத்த தொகையைக்கொண்டு அந்த வரும்படியை மதிப்பிட வேண்டும்.

III. 3-வது இனத்தில் கண்டெழுதவேண்டியிருக்கும் அசை யாப் பொருள்களிலிருந்து கிடைக்கும் வரும்படியை மேலே II-வது குறிப்பில் கண்டிருக்கும் மாதிரியாய் மதிப்பிடவேண்டும்.

IV. 5-வது இனத்தில் கண்டெழுதவேண்டியிருக்கும் தானிய முதலியவை ரூபமாயுள்ள வரும்படியில் யாதொரு உபயமாவது கோயில் அல்லது மடத்தில் குறித்த ஒரு கைங்கரிய சம்பந்தமான செலவுகளுக்காக எதேச்சையாய்க் கொடுக்கப்பட்ட சகாயத்தொகை யாவது அடங்காது. அப்படிப்பட்ட வரும்படியாவது அது விற்பனை யான தேதியில் வருமானமாய் ஏற்படுவதாக எண்ணப்படும். மேலும், அந்தப்படி விற்பனை செய்ததனால் கிடைக்கும் தொகையைக் கொண்டு அதை மதிப்பிடவேண்டும்.

78549
Z21 (Q2) N34

Printed by V. Ramaswamy Sastrulu & Sons,
at the 'Vavilla' Press, Madras.—1934.

தமிழ் நூல்கள்

சதகங்கள் (குறிப்புரையுடன்)

	ரூ.	அ.	பை
குமரேச சதகம்	0	5	0
கோவிந்த சதகம்	0	2	0
அறப்பளீசுர சதகம்	0	5	0
திருவேங்கட சதகம்	0	5	0
தண்டலையார் சதகம்	0	3	0

பாராயண நூல்கள் (குறிப்புரையுடன்)

கந்தர் கலிவெண்பா	0	1	6
சரஸ்வதி அந்தாதி	0	1	6
அபிராமி அந்தாதி	0	1	6
கந்தரனுபூதி	0	1	6
திருமுருகாற்றுப்படை	0	2	0
நால்வர்நான்மணிமாலை	0	1	6
விநாயகர் அகவல்	0	1	0
இலக்குமி தோத்திரம்	0	1	0
ஆனந்தலகரி	0	1	6
செளந்தரியலகரி	0	1	6

நீதிநூல்கள் (குறிப்புரையுடன்)

திருக்குறள்	0	8	0
திருக்குறள்-சங்க்ரகம் (மூலமும்-உரையும்) ...	0	4	0
நாலடியார்	0	6	0
நீதிநெறிவிளக்கம்	0	1	0
ஆசாரக்கோவை	0	2	6

நீதிநூல்கள் (பதவுரையுடன்)

வாக்குண்டாம்	0	1	0
கொன்றைவேந்தன்	0	1	6

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,

	ரூ.	அ.	பை
வெற்றிவேற்கை	0	1	6
நல்வழி	0	1	6
நன்னெறி	0	1	6
திருக்குறள் (பரிமேலழகர் உரை) பாகெட் சைஸ்	2	0	0
திருகுறள் டாட்டு (கவிகோபைண்டு) பாகெட் சைஸ்	0	6	0

திருக்குறள் விளக்க நூல்கள் (குறிப்புரையுடன்)

சிவசிவவெண்பா	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா	0	2	0
இரங்கேசர் வெண்பா	0	2	0
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6

திரட்டு நூல்கள்.

திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	6
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு	0	3	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத் திரட்டு	0	10	0

இலக்கணமும், நிகண்டும்.

பாலபோத இலக்கணம் (விசாகப்பெருமாளையர்)	1	0	0
நன்னூல்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதிணேராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0

(வசன நூல்கள்)

ஆன்ருேர் சரித்திரம் (எம். வி. ஈஸ்வரய்யர்) ...	0	5	0
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0

		ரூ.	அ.	பை
மனுமுறைகண்ட வாசகம்	... ...	0	5	0
விநோதரசமஞ்சரி	... ...	0	8	0
பரமார்த்த குரு கதை	... ...	0	4	0
(வரகவி திரு. அ. சுப்ரமண்யபாரதியார் இயற்றியது.)				
இராமாயண இரகசியம் சித்திரப்படங்களுடன்	...	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன்—நல்ல பிள்ளை	,, ...	0	2	6
பரதன்—நல்ல தம்பி	,, ...	0	3	0
ஸீதாதேவி—நல்ல மனைவி	,, ...	0	4	0
குகன்—சிறந்த நண்பன்	,, ...	0	2	6
மாருதி—நல்ல அடிமை	,, ...	0	2	6
விபீஷணன்—சிறந்த பக்தன்	,, ...	0	1	6
சகுந்தலா	,, ...	0	2	6
சாவித்திரி சரித்திரம்	,, ...	0	6	0
யயாதி	,, ...	0	5	0
நளச்சக்கரவர்த்தி	,, ...	0	4	0
துளசிதாசர்	... ...	0	5	0

நாவல்கள்.

இராஜரிஷி (மொழி பெயர்ப்பு)	... ...	1	4	0
ராவெங்கார்	... ...	1	9	0
மகாதேவன், ஒரு இனிய நாவல்	... ...	0	10	0
ஸ்திரீ ரத்னம்	... ...	1	4	0
கமலலோசனி	... ...	1	0	0
ஹநுமப்ரபாவம்	... ...	0	3	0
ராமநாதன்	... ...	0	2	0
அமரசிம்ஹன் (By N. C. Gopalakrishnan)		1	0	0
சந்திரகுப்தா	... ...	1	4	0
சந்திரஹாசன்	... ...	0	4	0
நாகாநந்தம்	... ...	0	4	0

	ரூ.	அ.	பை
பகவத்கீதை (இது தமிழ், தெலுங்கு, ஸமஸ்கிருதத்திலும் கிடைக்கும்)	0	8	0
பஞ்சதந்திரம் (ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் எழுதியது	0	8	0
கர்ணுடக சங்கீத லக்ஷணம் அல்லது வர்ணமாலிகை (By Ramachandran, M. A.) ...	0	12	0
லீலாவதி	0	4	0
நந்தனர்	0	12	0

ஸ்ரீ வால்மீகிராமாயண வசனம்

வால்மீகி ராமாயணத்தை ஸம்ஸ்கிருதத்திலிருந்து சரியாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் சங்க்யையை இன்ன சுலோகங்களின் மொழிபெயர்ப்பென்று அறிய பாராக்கள் இலக்கம் கண்டிருக்கிறது.

பாலகாண்டம்	1	0	0
அயோத்தியா காண்டம்	2	4	0
ஆரண்யகாண்டம்	(அச்சிலிருக்கிறது)		
கிஷ்கிந்தா காண்டம	1	6	0
சுந்தரகாண்டம்	1	6	0
யுத்த காண்டம்	3	0	0

ஸ்ரீ மஹாபாரதவசனம்

ஆதிபர்வம்	3	8	0
ஸபா, ஆரண்ய, விராடபர்வம் ஆகியமூன்று பர்வங்களும் அடங்கியது	5	0	0
உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, ஸவுப்திக பர்வங்களடங்கிது	5	0	0
ஸ்ரீ, சாந்தி, அநுசாசனிக, அசுவமேத, ஆசிரமவாஸ, முசல, மஹாப்ரஸ்தானிக, ஸ்வர்க்காரோஹண பர்வங்களடங்கியது ...	5	0	0

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,

நளோபாக்யானம்

இது ஓர்சிறந்த நீதிநூல், நளமஹாராஜன் கதையைக் கூறுவது. சூதாடலால் வரும் கேட்டை அறிவிப்பது. தமயந்தியின் மனோதிடத்தை தெரிவிப்பது. புத்திரார்மாட்டுள்ள அன்பை அறிவிப்பது. இவை முதலிய சிறந்த விஷயங்களைக் கொண்டதும் பாரதக்கதையின்பகுதியாயுள்ளதுமானஇக்கதை இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு உயர்ந்த கடிதத்தில் முத்திரிக்கப்பட்டும் நான்கு சித்திரப் படங்களுடன் பயிண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூபா 0 12 0

ஜகஜ்ஜோதி

இது மொகலாய சக்கிரவர்த்திகளுக்குள் ஒருவரான ஜிஹாங்கீர் என்பவருக்குப் பிரிய நாயகியாயிருந்த நூர்ஜஹான் என்னும் ஸ்திரீயின் சாமார்த்தியத்தையும் ஸாகஸ செய்கைகளைப்பற்றியும் கூறுவது. அனைவரும் தனக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று அவள் செய்த முயர்ச்சி எல்லாம், அவளுடைய பேதமைக்குணத்தை வெளிப்படுத்துகின்றன. அவள் தனது முதல் புருஷனிடத்தில் அத்தியந்த அன்புபாராட்டி வந்ததையும், அவன் இறந்தவுடன் ஜிஹாங்கீரினுடைய சதியோசனையினாலேயே தனது கணவன் இறந்தானென்று அவள் அறிந்திருந்தும் ஜிஹாங்கீர் வார்த்தைக்குடன்பட்டு அவனை மணந்ததையும், பின்னர் அவள் செய்த அட்டகாசத்தையும் இறுதி காலத்தில் அவள் செய்த த்யான காலக்ஷேபத்தையும் நன்கு எழுதப்பட்டது. இன்னும் தேய்வபக்தி, குருபக்தி, தாய் தந்தையர் வழிபாடு, மாதர் ஆடவர் ஒழுக்கம், விருந்தோம்பல், நட்பின்குணம், அறிவின் மேன்மை, கலகக்கேடு, யஜமான் விசுவாசம், நல்லதிகாரிகளின் இயல்பு, பொறுமைக்கேடு, துன்பந்துடைக்கும்வழி, வீரத்தன்மை, முயற்சியின்மேன்மை, சாந்தகுணச்சிறப்பு முதலிய அரிய விஷயங்களும் ஆங்காங்கு விரவிக் கிடைக்கும். விலை அணா 0 8 0

கிரிஸெல்டா

இப்புத்தகம் பெண்பாலர் அவசியம் வாசிக்கவேண்டிய புத்தகங்களி லொன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனுடன் நடந்து கொண்டவிதம், சிலாகிக்கத்தக்க மாதிரியை விளக்கிக் காட்டி யிருக்கிறது. படிக்கப் படிக்க உத்ஸாகத்தைக் கொடுக்கக்கூடியது. விலை 0 4 0

நாலேவாரத்தில் நல்ல இங்லிஷ்

இதை எழுதினவர் முப்பது வருஷத்திற் கதிகமாகவே பெரிய ஸ்கூல்களின் தலைவராகியோ ஜில்லா ஸ்கூல் இன்ஸ்பெக்டராகியோ இருந்தவர், ம-ா-ா-ஸ்ரீ, ஸி. டி. பார்த்தசாரதி முதலியாரவர்கள், பி.ஏ., எல்.டி., இவர் ஆயிரக் கணக்காய் மாணாக்கருக்கு இங்லீஷ்பாஷை கற்றுக்கொடுத்து அனுபவமடைந்தவர். தமிழ்நாட்டில் பல ஜில்லாக்களில் இருந்து ஜனங்களோடு கலந்துபழகி, பொது ஜனத்திற்கு எந்தெந்த விஷயங்களைப்பற்றி பேசிக்கொள்வது வழக்கமென்று தெரிந்து கொண்டவர். தன்னுடைய அனுபவமெல்லாம் இந்த புத்தகத்தில் அடக்கி, பொதுஜனத்திற்கு இங்கிலீஷ் கற்பித்து நன்மை செய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டு இந்த புத்தகம் எழுதினார். சிறிய மொழிகளை ஆயிரக்கணக்காய்ச் சொல்லியும், அவைகளை வாக்கியங்களாகச் சேர்க்கமுடியாமல் தவித்துக் கொண்டிருப்பதைப் பலவிடங்களில் கண்டு, அந்த வழி அவ்வளவு உபயோகமில்லை யென்று தோன்றி, அடியிலிருந்தே வாக்கியங்களாகவே எழுதி யிருக்கிறார். முதலில் வாக்கியங்கள் படித்து ஞாபகம் வைத்துக்கொள்வது கொஞ்சம் கஷ்டமானாலும், கடைசியில் இவ்வழி உதவுவதைப் போல் மற்ற வழிகள் உதவா. இந்த அருமையான புத்தகம் ஏராளமாய் பணச்சிலவு செய்து அச்சிட்டிருக்கிறோம். விலை ரூபா 2 0 0

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்.

ராமாயண வினாவிடை

இதில் ராமாயண கதையின் ஏழுகாண்ட ஸாரமும், சந்தேக முண்டாகக் கூடிய நிலைமைகளிலுள்ளவிடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்ந்த விசாரமும், நீதிகள் போதிக்கக் கூடிய விடத்துப் படிப்பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனிய நூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதுமன்றி, பெரியோரது மனதையும் களிப்பிக்குமாறு, அத்யாத்ம ராமாயணத்திலும், ஆனந்த ராமாயணத்திலும், கண்ட உட்பொருளும், அநுபந்தமாக இப் புத்தகத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பனெழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகள் மற்றோர் அநுபந்தமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாடபுத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; யாவராலும் நன்கு மதிக்கப்படுகிறது. நமது புத்தகத்திற்கென்றே இதுவரையிலும் கண்டிராத புதிய சித்திரபடங்களுடன் ஒவ்வொரு காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. இது ம-ா-ா-ஸ்ரீ ஆ. ஸி. கஸ்தூரிரங்க ஐயர், பி.ஏ., எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது. இப் பதிப்பில் சேர்ந்திருக்கும் படங்கள்:—1. ஸ்ரீராமர் பட்டாபிஷேகம், 2. வால்மீகிரிஷி வேடனைச்சபிக்க, ராமாயணம் பிறந்தது, 3. விஸ்வாமித்திரர் ராமனை யாசித்தல், 4. அஹல்யை சாபம நீங்கியது, 5. ராமர் சிவதனுவை ஒடித்தல், 6. ஸீதா கல்யாணம், 7. குஹன், ராமர் முதலியோருக்கு ஓடம்விடுதல், 8. சபரி ராமருக்குப் பழங்கொடுத்துப் பரமபதம் பெற்றது, 9. ராமரும் ஸுக்ரீவனும் அக்கினிசாக்ஷியாக ஸ்நேகம் செய்து கொள்வது, 10. ஹநுமார்பக்தி ப்ரபாவத்தால் கடலைத் தாண்டுதல், 11. ஸீதை அசோகவனத்தில் பட்டபாடுகள், 12. வருணன் சரணாகதி, 13. ஹநுமார் பக்தி பரவசத்தால் சஞ்சீவி பர்வதம் கொண்டுவருதல், 14. ஸ்ரீராமர் சிவபூஜை செய்தல், 15. ராமபஞ்சாய தனம், 16. ஸீதை அசுவமேத மஹாமண்டபத்தில் தனது கற்பை நிலைநிறுத்த பூப்பிரவேசம் செய்தல். இப்புத்தகத்தின் விலையும் குறைத்தே வைத்திருக்கி
ரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது.